பக்கங்கள் : பதினாறு

# உதயன்

Registered as a Newspaper

விலை ரூபா 8.00

www.uthayan.com

சுடர் 19 வள்ளுவர் ஆண்டு 2035 புரட்டாதி 14 வியாழக்கிழமை (30-09-2004) UTHAYAN - A Lively National Tamil Daily கதிர்:310

# நாளைய ஜெனீவாக் கூட்டத்தில் புலிகள் முக்கிய முடிவு எடுப்பர்!

கொழும்பு,செப்ரெம்பர்30

**நாளையும், நாளைமறுதினமும் சுவிற்ஸர்லாந்தின் ஜெனீவா நகரில் கூடும், தமிழீழ விடுதலைப் புலிகள் அமைப்பின் அரசியல் குழுவின் உயர்மட்டக் கூட்டத்தில் முக்கியமான சில விடயங்கள் ஆராயப்பட்டு முடிவுகள் எடுக்கப்படவிருக்கின்றன.**

**"சமாதானத் தீர்வுக்கான அமைதி நடவடிக்கைகளுக்கு முயற்சிக்கப்படுவதாகக் கூறிக்கொண்டு காலத்தை இப்படியே இழுத்தடித்துச் செல்வதை ஏற்கவோ, இனியும் அனுமதிக்கவோ முடியாது. இதுவிடயத்தில் ஏதேனும் காத்திரமான தீர்மானம் விரைந்து எடுக்கப்படவேண்டும்" - என்று விடுதலைப் புலிகளின் அரசியல் துறை பொறுப்பாளர் சு.ப.தமிழ்ச்செல்வன் உதயனுக்குத் தெரிவித்தார்.**

ஜெனீவாவுக்குச் செல்வதற்காக நேற்றுமுன்தினம் கிளிநொச்சியிலிருந்து ஹெலிக்கொப்டரில் புறப்பட்ட தமிழ்ச்செல்வனும் அவரது குழுவினரும் அன்றிரவு கட்டுநாயக்காவில் உள்ள ஐந்து நட்சத்திர ஹோட்டலில் தங்கியிருந்தனர். நேற்றுக் காலை கட்டுநாயக்கா விமான நிலையத்திலிருந்து அவர்கள் சுவிஸ் பயணமானார்கள்.

நேற்றுமுன்தினம் இரவு கட்டுநாயக்காவில் தாம் தங்கியிருந்த ஹோட்டலில்வைத்து உதயனுக்கு அவர் செவ்வி அளித்தார். அப்போது அவர் கூறிய சில விடயங்கள் வருமாறு:-

சமாதான முயற்சிகளுக்கு வாய்ப்பளித்து யுத்தநிறுத்தத்தை நாம் செம்மையாகப் பேணி வருகின்றோம்.

ஆனால், உள்ளூரிலும், நாட்டிலும், சர்வதேச மட்டத்திலும் இலங்கை அரசும் ஜனாதிபதி தரப்பும் எமக்கு எதிராகப் பொய்ப்பிரசாரங்களை முன்னெடுத்து வருகின்றன.

அண்மையில் வெளிநாடுகளுக்குச் சென்ற ஜனாதிபதி குமாரதுங்க, சமாதான முயற்சிகள் ஆரம்பிக்கப்படுவதற்குப் புலிகளே தடை - முட்டுக்கட்டை - போடுகின்றார்கள் என்று அங்கு பொய்ப்பிரசாரம் செய்தார்.

அமைச்சர் லக்ஷ்மன் கதிர்காமரும் ஏனையோரும்கூட இதுபோன்ற பிரசாரங்களை மும்முரமாக முன்னெடுத்து வருகின்றனர்.

(16 ஆம் பக்கத் தொடர்ச்சி)

## கோட்டை ரயில் நிலையம் முன்பாக இன்று ஆர்ப்பாட்டம்

கொழும்பு,செப்.30

மூன்று கோரிக்கைகளை முன்வைத்து அரசுக்கு எதிராகப் போர்க்கொடி தூக்குவதற்குப் புதிய இடதுசாரி முன்னணி தீர்மானித்துள்ளது.

முதற்கட்டமாக கோட்டை ரயில் நிலையத்துக்கு முன்பாக இன்று மாலை நான்கு மணிக்கு எதிர்ப்பு ஆர்ப்பாட்டத்தில் ஈடுபட அனைத்துத் தரப்புக்கும் அக்கட்சி அழைப்பு விடுத்துள்ளது.

சமாதானப் பேச்சுக்களை உடனடியாக ஆரம்பிக்க வேண்டும், அதிகரித்துவரும் விலைவாசி உயர்வைக் கட்டுப்படுத்த வேண்டும், தொழி

(16 ஆம் பக்கத் தொடர்ச்சி)

## அட்டாளைச்சேனைப் பகுதியில் 2 சிங்கள இளைஞர் சுட்டுக்கொலை!

அட்டாளைச்சேனை,செப்.30

அட்டாளைச்சேனை, முள்ளிக்குளத்துமலை என்ற இடத்தில் இரு சிங்கள இளைஞர்கள் சுட்டுக்கொல்லப்பட்டுள்ளனர். இனந்தெரியாத சிலர் இவர்கள் மீது தாக்குதல் நடத்திவிட்டுத் தப்பிச் சென்றுவிட்டனர் என்று பொலீஸார் தெரிவித்தனர்.

நேற்றுமுன்தினம் இரவு 10.00 மணியளவில் இந்தச் சம்பவம் இடம்பெற்றுள்ளது. 4 பிள்ளைகளின் தந்தையான கே.பீ.குலரத்தின (வயது38), ஒரு பிள்ளையின் தந்தையான ஏ.சி.சமந்தலால் விஜயதிலக்க (வயது28) ஆகியோரே சம்பவத்தில் உயிரிழந்தவர்களாவர்.

இவர்கள் இருவரும் கரைக வாகனங்களை விவசாயிகளுக்கு வாடகைக்குப் பெற்றுக்கொடுக்கும் இடைத்தரகர்கள் என்று தெரிவிக்கப்படுகின்றது.

சம்பவதினம் மோட்டார் சைக்கிளில் சென்றுகொண்டிருந்த சமயம் இவர்மீது துப்பாக்கிச் சூடு நடத்தப்பட்டுள்ளது. அப்பகுதியில் மறைந்து காத்திருந்த சிலரே இந்தத் தாக்குதலை நடத்தி

(16 ஆம் பக்கத் தொடர்ச்சி)

## யாழ்.பொலீஸ் நிலையச் சம்பவம்: கைதியை மருத்துவ சோதனைக்கு உட்படுத்த நீதிமன்றம் உத்தரவு

யாழ்ப்பாணம்,செப்.30

இணுவில் பகுதியில் வைத்து அண்மையில் பொலீஸாரால் கைதுசெய்யப்பட்ட இரத்தினசிங்கம் சந்திரகுமார் என்பவரை சட்ட மருத்துவ அதிகாரியின் முன்னிலையில் மருத்துவ பரிசோதனைக்கு உட்படுத்துமாறு யாழ். நீதிமன்றம் கேட்டிருக்கிறது.

மருத்துவ பரிசோதனை அறிக்கையை நாளை வெள்ளிக்கிழமை நீதிமன்றத்தில் சமர்ப்பிக்குமாறும் யாழ்.நீதிவான் இ.த.விக்னராஜா பொலீஸாருக்கு உத்தரவிட்டிருக்கிறார். கைதுசெய்யப்பட்ட பிரஸ்தாப நபர் யாழ்.பொலீஸ் நிலையத்தில் தடுத்துவைக்கப்பட்டிருந்த சமயம் சித்திரவதைக்குள்ளாக்கப்படுவதாகத் தகவல் கிடைத்ததையடுத்து, அதுபற்றி விசாரிக்கச் சென்ற மனித உரிமை ஆணைக்குழு அதிகாரிகள் பொலீஸாரால் அங்கு வைத்துத் தாக்கப்பட்டமை தெரிந்ததே.

இச்சம்பவம் நடைபெற்ற தினமான கடந்த திங்களன்று இரவு பிரஸ்தாப இளைஞரை யாழ்ப்பாணம் பொலீஸார் யாழ். மேலதிக நீதிவான்

(16 ஆம் பக்கத் தொடர்ச்சி)

## தளபாடங்கள் என்ற பெயரில் 'ஜக்பொட்' இயந்திரங்கள் கடத்தல்

### சுங்க அதிகாரிகளிடம் வகையாகச் சிக்கின

கொழும்பு,செப்.30

இலங்கையில் தடை செய்யப்பட்டிருக்கும் சூதாட்ட ('ஜக் பொட்') இயந்திரங்கள், தளபாடங்கள் என்ற போர்வையில் நாட்டுக்குள் கடத்தப்பட இருந்த சமயம் சுங்கப்பிரிவினரிடம் சிக்கியிருக்கின்றன.

இலங்கையிலுள்ள பிரபல கம்பனியொன்றின் விலாசத்துக்கு இறக்குமதி செய்யப்பட்டிருந்த கொள்கலனை நேற்றுமுன்தினம் பரிசோதனைக்கு உட்படுத்தியபோதே "ஜக்பொட்" இயந்திரங்கள் பகுதிபகுதியாகக் கழற்றப்பட்ட நிலையில பொதிசெய்யப்பட்டிருப்பது கண்டுபிடிக்கப்பட்டது.

மிகவும் சூட்சுமமான முறையில் பொதிசெய்

(16 ஆம் பக்கத் தொடர்ச்சி)

## மட்டக்களப்பு கிரான் பகுதியில் இளைஞர் சூட்டுக்குப் படுகாயம்!

### இராணுவ உளவாளி எனச் சந்தேகம்

கொழும்பு,செப்.30

மட்டக்களப்பு, கிரான் பகுதியில் வைத்து இளைஞர் ஒருவர், இனந்தெரியாத துப்பாக்கிதாரியால் மேற்கொள்ளப்பட்ட துப்பாக்கிப் பிரயோகத்தில் படுகாயமடைந்தார்.

அவர் தற்போது மட்டக்களப்பு வைத்தியசாலையில் சேர்க்கப்பட்டுள்ளார்.

இச்சம்பவம் நேற்றுமுன்தினம் இரவு 11.45 மணிக்கு இடம்பெற்றுள்ளது.

மஞ்சத்தொடுவாயைச் சேர்ந்த கணபதிப்பிள்ளை விவேகானந்தராஜா (வயது 19) என்ற இளைஞரே தனது காதலியின் வீட்டில் தங்கியிருந்தபோது துப்பாக்கிச் சூட்டுக்கு இலக்கானார் எனக் கூறப்பட்டது.

வயிற்றுப் பகுதியில் துப்பாக்கி ரவைகள் பாய்ந்துள்ள நிலையில் வைத்தியசாலையில் சேர்க்கப்பட்டுள்ள இவர், இராணுவப் புலனாய்வுப் பிரிவினருக்குத் தகவல்கள் வழங்குபவர் எனத் தெரியவந்துள்ளது.

(16 ஆம் பக்கத் தொடர்ச்சி)

## ஜனாதிபதியுடன் பேச ஜே.வி.பி. முயற்சி

கொழும்பு,செப்.30

அதிகரித்துவரும் வாழ்க்கைச் செலவைக் கட்டுப்படுத்தும் திட்டங்கள் தம்மிடம் உள்ளன என்று தெரிவித்து இதுதொடர்பில் பேசநேரம் ஒதுக்கித் தருமாறு ஜனாதிபதியைக் கேட்டுள்ளது ஜே.வி.பி.

ஜே.வி.பியின் செயலாளர் ரில்வின் சில்வா, ஜனாதிபதி சந்திரிகா குமாரதுங்கவுக்கு அனுப்பியுள்ள கடிதத்திலே மேற்கண்டவாறு குறிப்பிட்டுள்ளார். உலக சந்தையில் எரிபொருள் விலை அதிகரித்து வருகின்றது. இவ்வதிகரிப்பு எம்மையும் பாதிக்கின்றது. இதனால், வாழ்க்கைச செலவும் கூடிக்கொண்டே போகின்றது எனவும் ஆளும் ஐக்கிய மக்கள் சுதந்திரக் கூட்டமைப்பின் பிரதான பங்காளியான ஜே.வி.பி. கூட்டமைப்பின் முன்னாள் தலைவியும் ஜனாதிபதியுமான சந்திரிகா குமாரதுங்கவுக்கு எழுதியுள்ள கடிதத்தில் குறிப்பிடப்பட்டுள்ளது.

ஐ.ம.சு.கூட்டமைப்பின் தலைமைப்பதவியில் இருந்து ஒதுங்கிக்கொண்டதன் மூலம் ஜே.வி.பியினரை அடிக்கடி சந்திப்பதை ஜனாதிபதி தவிர்த்துக்கொண்டு வருகின்றார் என்பது குறிப்பிடத்தக்கது.

(க)

## மிகக் குறைந்த விலையில் ஐந்து ஏக்கர் காணி நாவலவில் இந்தியக் கம்பனிக்கு தாரைவார்ப்பு

### அரசுக்கு மாறியதற்கு ஆறுமுகனாருக்கு அடுத்த 'பரிசு'

கொழும்பு,செப்.30

அரசாங்கத்திற்கு முண்டுகொடுத்துக் கொண்டிருக்கும் இலங்கை தொழிலாளர் காங்கிரஸுக்கு இரண்டாவது 'சுவீப்' அடித்துள்ளதாம். தாம் அரசிற்கு ஆதரவு வழங்குகின்றோம என உத்தியோகபூர்வமாக அவர்கள் அறிவித்த ஆறாவது தினத்திலேயே இப்பெரிய அதிர்ஷ்டம் அடித்துள்ளதாகத் தெரிகின்றது.

முன்னாள் அமைச்சர் ஆறுமுகன் தொண்டமானால் முன்னைய அரசின் காலத்தில் முன்னெடுக்கப்பட்ட - ஹைதராபாத் கம்பெனியுடனான - ஒப்பந்தம் தற்போதைய அமைச்சர் பேரியல் அஷ்ரப் மூலம் பூர்த்திசெய்யப்பட்டுள்ளதாம்.

இந்த ஒப்பந்தத்தினால் அரசிற்கு ஏற்பட்ட நஷ்டம் 45 கோடி ரூபா.

வெளிநாட்டவர்களுக்கு ஓர் அங்குலக் காணியைக்கூட விட்டுக்கொடுக்கமாட்டோம் என தம் பட்டம் அடிக்கும் [illegible] [illegible] ஆம் திகதி நடைபெற்ற மண்ணைத்தூவிவிட்டே இந்த ஒப்பந்தம் கைச்சாத்திடப்பட்டுள்ளது.

நாவல, கிரிமண்டல மாவத்தையில் 'பரங்கியா கும்புர' என அழைக்கப்படும் இடத்தில் உள்ள - வீடமைப்பு நிர்மாணத்துறை அமைச்சுக்குச் சொந்தமான - ஐந்து ஏக்கர், பத்து பேர்ச்சஸ் காணியே இரண்டு இந்தியர்களுக்குச் சொந்தமான ஹைதராபாத் நிறுவனம் ஒன்றுக்கு இப்படி அடிமாட்டு விலைக்கு விற்கப்பட்டுள்ளது.

இப்பிரதேசத்தில் ஒரு பேர்ச்சஸ் காணிக்கு ஐந்து முதல் ஏழு லட்சம் ரூபா வரையில் இன்றைய சந்தை விலை நிர்ணயிக்கப்பட்டுள்ள போதும், இக்காணி ஆக 92 ஆயிரம் ரூபா வீதமே விற்கப்பட்டுள்ளதாம். இதனால், அரசுக்குக் கிடைக்க வேண்டிய நிகர இலாபம் 45 கோடி ரூபாவுக்கு மேல் இழப்பேற்பட்டுள்ளது.

அமைச்சரவைக் கூட்டத்தின் அனுமதியின் பேரில் இந்த ஹைதராபாத் கம்பனியுடனான ஒப்பந்தத்தில் தேசிய வீடமைப்பு அபிவிருத்தி அதிகார சபையின் தலைவர் எம்.என்.ஜுனைட் கையெழுத்திட்டுள்ளார்.

ஆறுமுகம் தொண்டமான் அமைச்சராக இருந்தபோது தேசிய நீர்வழங்கல் சபையுடன் பல கோடி ரூபா பெறுமதியான ஒப்பந்தத்தைச் செய்துகொண்டதில் தொடர்புடைய ஹைதராபாத் அழகியும் இந்தப் புதிய ஒப்பந்தத்துடன் சம்பந்தப்பட்டிருக்கலாம் எனவும் கூறப்படுகின்றது.

ஏற்கனவே, ஒப்பந்தம் செய்திருந்த ஹைதராபாத் அழகியின் விலாசமும் இப்பொழுது புதிதாக காணியைப் பெற்றுள்ள ஹைதராபாத் கம்பனியின் விலாசமும் ஒரே இடத்தில், அடுத்தடுத்த இலக்கங்களைக் கொண்டவையாக

(16 ஆம் பக்கத் தொடர்ச்சி)

Digitized by Noolaham Foundation
noolaham.org | aavanaham.org

இளைய தலைமுறையின் இதயம் கவரும் இன்றைய நாளிதழ்



கராத்தே பயிற்சி வழங்கும் நிகழ்வில் கேணல் சூசை, மகளிர் அரசியல்துறைப் பொறுப்பாளர் தமிழினி, விளையாட்டுத்துறைப் பொறுப்பாளர் பாப்பா ஆகியோர் கொடி வணக்கம் செலுத்துவதையும் கராத்தே சம்மேளனத் தொடர்பாளர் எஸ்.லிசிமித் பயிற்சி வழங்குவதையும், பயிற்சியில் கலந்துகொண்டவர்களில் ஒரு பகுதியினரையும் படங்களில் காணலாம். (படங்கள்: வசந்தன்)

# கராத்தேயின் நுணுக்கங்களை எடுத்துரைத்த விசேட பயிற்சி

## கிளிநொச்சியில் நேற்று நடந்தது

யாழ்ப்பாணம்,செப்.30

சர்வதேச கராத்தே சம்மேளனத்தின் தொடர்பாளர் எஸ்.லிசிமித் நேற்று கிளிநொச்சிக்கு வருகை தந்து வடக்கு - கிழக்கு மாகாணத்தைச் சேர்ந்த வீர, வீராங்கனைகளுக்கு கராட்டிப் பயிற்சிகளை வழங்கினார்.

தமிழீழ விளையாட்டுக் கழகத்தின் அழைப்பில் வருகை தந்த எஸ்.லிசிமித் கிளிநொச்சி பொது விளையாட்டு மைதானத்தில் வைத்து வீர்களுக்கான ஆரம்பப் பயிற்சிகளையும் நுணுககங்களையும் கற்பித்தார்.

இப்பயிற்சி நெறியின் அங்குரார்ப்பண் நிகழ்வு, பொதுச் சுடர் ஏற்றலுடன் ஆரம்பமானது. பொதுச் சுடரினை தமிழீழ மகளிர் அரசியல்துறைப் பொறுப்பாளர் தமிழினி, சர்வதேச கராத்தே சம்மேளனத் தொடர்பாளர் எஸ்.லிசிமித் ஆகியோர் ஏற்றிவைத்தனர்.

தமிழீழத் தேசியக் கொடியை கடற்புலிகளின் சிறப்புத் தளபதி கேணல் சூசை ஏற்றி வைத்தார்.

அதனைத் தொடர்ந்து தமிழீழ விளையாட்டுத்துறைப் பொறுப்பாளர் கி.பாப்பா சிறப்புரையாற்றினார்.

இந்தப் பயிற்சிப் பட்டறையில் வடக்கு - கிழக்கின் 8 மாவட்டங்களையும் சேர்ந்த சுமார் 500 இற்கு மேற்பட்ட வீர, வீராங்கனைகள் கலந்துகொண்டனர். (எ-5-7)

# 28 பாதாள உலகக் குழுக்கள் கொழும்பில் இயங்குகின்றன

கொழும்பு மாநகர எல்லைக்குள் 28 பாதாள உலகக் குழுக்கள் செயற்படுகின்றன எனப் பொலீஸ் புலனாய்வு வட்டாரங்கள் தெரிவித்துள்ளன.

ஆகக் குறைந்தது 300 பேர்வரை இக்குழுக்களில் அங்கம் வகிக்கின்றனர் என்றும் தெரிவிக்கப்படுகின்றது.

இந்தக் குழுக்கள் ரி-56 ரகத் துப்பாக்கிகள, தன்னியக்க கைத்துப்பாக்கிகள் மற்றும் கைக் குண்டுகள், உயர் தொழில்நுட்ப தொலைத்தொடர்புக் கருவிகள் எனப் பல நவீன ஆயுதங்களையும், கருவிகளையும் பயன்படுத்தி வருகின்றன எனவும் பொலீஸ் விசாரணைகளில் தெரியவந்துள்ளது.

இந்தக் குழுக்கள் கொழும்பு நகரைத் தமது ஆளுகைக்குட்பட்ட பகுதிகளாகப் பிரித்து வைத்துள்ளன எனவும்.

ஒவ்வொரு வலயத்திலும் குறிப்பிட்ட ஒரு குழுவினரே செயற்பட்டு வருகின்றனர் எனவும்-

கொலை, கொள்ளை, போதைப்பொருள் கடத்தல் - விநியோகித்தல், ஆயுதங்களை வாடகைக்கு அமர்த்தல், கட்டணம் செலுத்தப்பட்ட கொலைகள், கப்பம் அறவிடுதல் எனப் பல சட்டவிரோதச் செயற்பாடுகளில் இக் குழுக்கள் தமது ஆளுகைக்கு உட்படுத்தப்பட்ட பகுதிகளிலும் அவற்றை அண்டியும் மேற்கொண்டு வருகின்றன எனவும் பொலீஸ் அறிக்கைகள் தெரிவிக்கின்றன. இக்குழுக்கள் தமது உளவு நடவடிக்கைககாக பலரைப் பயன்படுத்துகின்றன. அத்தகையோர் மூலமும் துல்லியமான முறையில் விவரங்களைப் பெற்று பொலீஸாரின் கண்ணில் மண்ணைத் தூவிவிட்டு தமது காரியங்களை கனகச்சிதமாக இவர்கள் முடித்து விடுகின்றனர் என்றும் பொலீஸார் தெரிவிக்கின்றனர்.

இக் குழுக்களிடையே காணப்படும் பிணக்குகளே அதிகளவிலான கொலைகளுக்குக் காரணமாகவும் உள்ளன.

மிகச் சிறந்த வலையமைப்புடன் இயங்கும் இக் குழுக்களின் செயற்பாடுகளை அரசாங்கத்தின் குற்றத்தடுப்பு பிரிவால் முறியடிக்க முடியாமல் உள்ளதாகவும் சுட்டிக்காட்டப்பட்டுள்ளது. இப் பாதாள உலகக் குழுக்கள் அரசியல் பிரமுகர்கள், பொலீஸ் உயரதிகாரிகளின் பக்கத்துணையுடன் இயங்குவதாகவும் மேலும் சுட்டிக்காடடப்பட்டுள்ளது. (எ-க)



கிளிநொச்சி மாவட்டத்தில் மேற்கொள்ளப்படவுள்ள அபிவிருத்தித் திட்டங்கள் தொடர்பான கலந்துரையாடல் யாழ். அரசியல்துறை அலுவலகத்தில் நேற்று நடைபெற்றது. இதில் நாடாளுமன்ற உறுப்பினர்களான மாவை சேனாதிராசா, எம்.கே.சிவாஜிலிங்கம், எஸ்.சிவநேசன் மற்றும் கிளிநொச்சி அரச அதிபர் இராஜநாயகம், கிளிநொச்சி அரசியல்துறைப் பொறுப்பாளர் காண்டீபன் ஆகியோர் கலந்துகொண்டு திட்டங்கள் குறித்து ஆராய்வதைப் படத்தில் காணலாம். (படங்கள்:தீபன்)

## நாளைய நிகழ்வுகள்

கோப்பாய் சரவணபவானந்த வித்தியாலயத்தின் பெற்றோர்தின விழா நாளை வெள்ளிக்கிழமை காலை 9 மணிக்கு பாடசாலையின் பிரதான மண்டபத்தில் அதிபர் நா.சண்முகரத்தினம் தலைமையில் நடைபெறும்.

இந்த நிகழ்வில் பிரதம விருந்தினராக யாழ்.கல்வி வலய பிரதிக் கல்விப்பணிப்பாளர் யோ.ரவீந்திரனும் சிறப்பு விருந்தினராக கோப்பாய்க் கல்விக் கோட்ட உதவிக் கல்விப் பணிப்பாளர் இ.சிவஞானசுந்தரமும் கலந்து கொள்ளவுள்ளனர். (எ-180)

★ ★ ★

இந்து சமய விவகார அலுவல்கள் திணைக்களத்தின் யாழ். மாவட்ட அலுவலகம் நல்லூர் நாவலர் மண்டபத்தில் நடத்திவரும் ஆன்மீகச் சொற்பொழிவுத் தொடரில் நாளை வெள்ளிக்கிழமை மாலை 6.30 மணிக்கு சிவஸ்ரீ அருணாசலம் வாசுதேவன் 'ஆறுமுகம் ஆன பொருள்' எனும் தலைப்பில் சிறப்புரையாற்றுவார். (எ-6)

★ ★ ★

பரந்தன் இந்து மகா வித்தியாலயத்தின் புதிய கட்டடத் திறப்புவிழா நாளை வெள்ளிக்கிழமை முற்பகல் 9 மணிக்கு நடைபெறவுள்ளது. பள்ளி முதல்வர் ம.பத்மநாபன் தலைமையில் நடைபெறவுள்ள இந்நிகழ்வில், கிளிநொச்சி வலயக் கல்விப் பணிப்பாளர் ப.அரியரத்தினம் பிரதம விருந்தினராகவும் தமிழீழ விடுதலைப் புலிகளின் பரந்தன் பிரதேசப் பொறுப்பாளர் சிறப்பு விருந்தினராகவும் கலந்து கொள்ளவுள்ளனர். (எ-204)

## நூல் வெளியீட்டுவிழா

யாழ்ப்பாணம்,செப்.30

'திருக்கோணேஸ்வர திருத்தல யாத்திரை' என்ற நூலின் வெளியீட்டு விழா நாளைமறுதினம் சனிக்கிழமை மாலை 5.30 மணிக்கு லண்டன் டூட்டிங்கிலுள்ள முத்துமாரியம்மன் கோயிலில் நடைபெறவுள்ளது.

மங்கள விளக்கேற்றலைத் தொடர்ந்து நூற்பிரதியை சென்னை, மணிமேகலைப் பிரசுர நிர்வாக இயக்குநர் ரவிதமிழ்வாணன் வெளியிட்டு வைக்க, நூலாசிரியரின் புதல்வர் வ.செந்தூரன் பெற்றுக்கொள்ளவுள்ளார்.

சிறப்புப் பிரதிகள் வழங்கலைத் தொடர்ந்து வாழ்த்துச்செய்திகள் வாசிக்கும் நிகழ்வு இடம் பெறும்.

பத்திரிகையாளரும் ஆசிரியருமான வே.வரதசுந்தரம் 'சுடர்ஒளி' வார மலரில் தொடர்ச்சியாக எழுதிய கட்டுரைத் தொடரின் தொகுப்பே இந நூல்.

மொத்தம் 284 பக்கங்களில், அதிகளவு படங்களுடன் சேர்த்து நூல் பதிப்பிக்கப்பட்டுள்ளது. நூல் ஆசிரியர் உதயனின் வார இதழான 'சஞ்சீவி'யின் பொறுப்பாசிரியராகப் பணிபுரிந்தவர் என்பது குறிப்பிடத்தக்கது. (எ-204)

# அதாவுல்லாவின் ஆதரவாளர் மீது முஸ்லிம் குழு துப்பாக்கிச் சூடு!

கொழும்பு,செப்.30

சுவரொட்டி ஒட்டிக்கொண்டிருந்த தேசிய முஸலிம் காங்கிரஸின் தீவிர ஆதரவாளர் ஒருவர் முஸ்லிம் ஆயுதக்குழுவொன்றின் துப்பாக்கிச் சூட்டுக்கு இலக்கானார். அவர் அம்பாறை வைத்தியசாலையில் சேர்க்கப்பட்டுள்ளார்.

இச்சம்பவம் நேற்றுமுன்தினம் இரவு அக்கரைப்பற்றில் இடம்பெற்றுள்ளது.

அப்துல்ரஸாக் மொஹமட் அஸ்லாம் (வயது-27) என்ற நபரே சூட்டுக்கு இலக்கானவராவார். இவர் கிழக்கு உட்கட்டமைப்பு அமைச்சர் ஏ.எல்எம்.அதாவுல்லாவின் தீவிர ஆதரவாளர் எனக கூறப்படுகிறது. சம்பவதினத்துக்கு அடுத்த நாளான நேற்று அக்கரைப்பற்று தியாவெட்டுவான் வைத்தியசாலையில் புதிய கட்டடம் ஒன்றைத் திறந்து வைப்பதற்காக அமைச்சர் அதாவுல்லா மற்றும் அமைச்சர் நிமால் சிறிபால டி சில்வா போன்றோர் அங்கு வருகை தரவிருந்தனர்.


அந்த நிகழ்வு பற்றிய சுவரொட்டிகளை ஒட்டிக்கொண்டிருந்த சமயமே அவ்விடத்துக்கு வந்த முஸ்லிம் ஆயுதக் குழுவொன்று இவர் மீது துப்பாக்கிப் பிரயோகம் செய்துவிட்டு தப்பிச் சென்றுள்ள்து ஏனப் பொலீஸார் தெரிவித்தனர். (எ-க)

## 19 இலங்கைப் பெண்கள் இன்று நாடு திரும்புவர்

மத்திய கிழக்கில் ஆடைத் தொழிற்சாலையில் பணியாற்றச் சென்று, அநாதரவாக விடப்பட்ட 19 இலங்கைப் பெண்கள் இன்று நாடு திரும்புகின்றனர். சவூதி அரேபியாவில் உள்ள 'சாப்பகி முன் காமண்ட்' என்ற ஆடைத் தொழிற்சாலையில் இவர்கள் கடமையாற்றி வந்தனர். திடீரென அந்தத் தொழிற்சாலையை மூடிவிட்டு அதன் உரிமையாளர்கள் தலைமறைவாகி விட்டனர்.

இதன் காரணமாக அநாதரவாக்கப்பட்டபலரில் எஞ்சியிருந்த இந்த 19 பெண்களும் தொழில் அமைச்சர் அதாவுட செனவிரத்தினவின் முயற்சியின் காரணமாக இன்று நாடு திரும்புகின்றனர். இவர்களுக்கான விமானப் பயணச் சீட்டுப் போன்ற செலவுகளை வெளிநாட்டு வேலைவாய்ப்புப் பணியகம் பொறுப்பேற்றுள்ளது.

பாதிக்கப்பட்ட அனைவருக்கும் தலா ஒரு லட்சத்து 25 ஆயிரம் ரூபா வீதம் நஷ்டஈடு வழங்கத் தொழில் அமைச்சு முடிவுசெய்துள்ளது.(எ-க)



நிரந்தர நியமனம் வழங்கக் கோரி பகுதிநேர ஆங்கில ஆசிரியர்கள் யாழ். செயலகம் முன்பாக நேற்றுக் கவனஈர்ப்புப் போராட்டத்தில் ஈடுபட்டனர். இறுதியில் சங்கத்தின் சார்பில் அதன் தலைவர், யாழ். மேலதிக அரச அதிபர் ஆ.சிவசுவாமியிடம் மகஜர் ஒன்றைக் கையளித்தார். இதன்போது எடுக்கப்பட்ட படங்கள் இவை. இன்று காலையும் செயலகம் முன்பாக கவனஈர்ப்புப் போராட்டத்தில் தமது உறுப்பினர்கள் ஈடுபடவுள்ளனர் என வடக்கு - கிழக்குப் பகுதிநேர அங்கில ஆசிரியர் சங்கத்தின் தலைவர் எஸ்.ஞானாகரன் அறிவித்துள்ளார். (படங்கள்:அலுவலகப் படப்பிடிப்பாளர்)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# சவூதியில் தாக்குதல் முறையை மாற்றி தீவிரவாதிகள் பெரும் அட்டகாசம்!

ரியாத்,செப்.30

சவூதி அரேபியாவில் தீவிரவாதிகள் தற்கொலைப் படைத்தாக்குதலைக் கைவிட்டு ஆங்காங்கே மறைந்திருந்து வெளிநாட்டவரைத் தாக்கும் தந்திரத்திற்கு மாறியிருக்கின்றனர். இது அரசுக்கு பெரும் தலைவலியாக உருவெடுத்துள்ளது.

சர்வதேச தீவிரவாதி ஒஸாமா பின்லேடன் பிறந்த நாடு சவூதி அரேபியா. உலகின் எணணெய்வளம் மிகுந்த நாடுகளில் இதுவும் ஒன்று. இங்கு வசிக்கும் வெளிநாட்டவரைக் குறிவைத்துப் பலமுறை தீவிரவாதிகள் தற்கொலைப் படைத்தாக்குதல் நடத்தியிருக்கின்றனர். தற்போது ஆங்காங்கே மறைந்திருந்து தாக்கும் தந்திரத்தை அவர்கள் கையாளுகின்றனர்.

இந்த வகைத் தாக்குதலுக்குக் கடைசியாகப் பலியானவர் பிரான்ஸ் நாட்டைச் சேர்ந்த லாரன்ட் பர்பாட், ஜித்தா நகர 'சுப்பர் மார்க்கெட்டில்' நள்ளிரவில் காரில் ஏறும்போது தீவிரவாதிகளால் சுட்டுக்கொல்லப்பட்டார். பொலீஸார் இதற்குச் சாட்சியில்லை என்கின்றனர். கடந்த மே மாதத்திற்குப் பிறகு சவூதியில் சுட்டுக்கொல்லப்பட்ட ஏழாவது வெளிநாட்டவர் இவர் என்பது குறிப்பிடத்தக்கது.

இவ்வாறான படுகொலை சவூதியில் வசிக்கும் வெளிநாட்டவர்களிடம் பெரும் பீதியை கிளப்பியிருக்கிறது. பல நிறுவனங்கள் தங்கள் ஊழியர்களுக்குக் கணிசமான போனஸ் தொகை கொடுத்து அவர்களைத் தக்கவைத்துள்ளன. கடந்த மே மாதத்திற்குப் பிறகு மொத்தம் 90 வெளிநாட்டவரை அல்கெய்டா இயக்கத்தினர் படுகொலை செய்துள்ளனர். ஆனால், தீவிரவாதிகளின் முதுகெலும்பை முறித்துவிட்டதாக அரசுத்தரப்பு பெருமிதமடைகின்றது.

சவூதி பாதுகாப்புப் படையினரும் வெளிநாட்டவருமே தீவிரவாதிகளின் முக்கிய குறியாகவுள்ளனர். கடந்த சில மாதங்களில் எண்ணெய் நிறுவனங்கள் மற்றும் வங்கிகளில் பணியாற்றும் வெளிநாட்டவரில் 15 சதவீதம் பேர் வெளியேறிவிட்டனர் என வெளியுறவுத்துறை வட்டாரங்கள் மதிப்பிடுகின்றன.

தற்போது அங்கு வசிக்கும் வெளிநாட்டவர்கள் மிகுந்த அச்சத்தோடு காணப்படுகின்றனர். முடிந்தவரை வீட்டைவிட்டு வெளியேறாமல் இருப்பது, வீட்டைச்சுற்றிப் பாதுகாப்பு, வெளியே செல்லும்போது தனிப் பாதுகாவலர் என பாதுகாப்பு வலயத்திலேயே வசிக்கின்றனர்.

அல்கெய்டா தீவிரவாதிகள் தாக்குதல் தந்திரத்தை மாற்றியிருக்கின்றனரா, அடுத்த பெரிய தாக்குதலுக்கு முன் அடையாளமாக இதை நடத்துகின்றனரா அல்லது அரசின் வேட்டையைத் தாக்குப்பிடிக்க முடியாமல் ஆங்காங்கே தாக்குதல் நடத்துகின்றனரா என்று அரசுத் தரப்பினர் கணிக்க முடியாமல் தவிக்கின்றனர் என்று கூறப்படுகிறது.

தீவிரவாதிகள் ஆறு மாதங்களுக்கு ஒரு முறைதான் பெரிய தாக்குதலில் ஈடுபடுவது வழககம். ஜித்தாவில் அவர்களது இரு தாக்குதல் முயற்சிகள் சமீபத்தில் முறியடிக்கப்பட்டன. ஆகவே, எதையும் உறுதியாகக் கூறமுடியாது என அரசுத்தரப்பில் தெரிவிக்கப்பட்டது.(க-8)

# எகிப்து மற்றும் ஈராக்கியர்கள் ஈராக்கில் விடுதலை!

டுபாய்,செப்.30

ஈராக்கில் பணயக்கைதிகளாகப் பிடிக்கப்பட்ட இரண்டு ஈராக்கியப் பொறியிலாளர்கள் மற்றும் ஒரு எகிப்தியரும் விடுதலை செய்யப்பட்டனர்.

எகிப்தைச் சேர்ந்த 'ஓராஸ்காம் ரெலிகொம்' நிறுவனத்தைச் சேர்ந்த ஆறு ஊழியர்கள் ஈராக் கிளை நிறுவனத்தில் பணியாற்றி வந்தவர்கள். அப்போது தீவிரவாதிகளால் கடத்தப்பட்டனர். அவர்களை விடுதலைசெய்யத் தங்களுக்குப் பெருந்தொகைப் பணம் தரவேண்டும் என்று கடத்திச் சென்ற தீவிரவாதிகள் மிரட்டல் விடுத்தனர். ஆனால் கடத்தியவர்கள் தங்களை யாரென்று அடையாளம் கூறவில்லை.

இந்நிலையில் கடத்திச் செல்லப்பட்டவர்களில் அலாமகர் என்ற எகிப்தியரும் ஈராக்கைச் சேர்ந்த இரண்டு பொறியிலாளர்களும் விடுதலை செய்யப்பட்டனர். மற்றவர்கள் எப்போது விடுதலை செய்யப்படுவார்கள் என்று தெரிவிக்கப்படவில்லை.இத்தகவலை கட்டாரைத் தளமாகக்கொண்டு இயங்கும் அரபுத் தொலைக்காட்சியான அல்-ஜெஸீரா கூறியுள்ளது.(க-8)

# சீனாவில் 36 குற்றவாளிகளுக்கு மரணதண்டனை நிறைவேற்றம்!

சீனாவின் பல்வேறு நகர்களில் மொத்தம் 36 பேருக்கு நேற்றுமுன்தினம் மரணதண்டனை நிறைவேற்றப்பட்டது.

பொதுமக்கள் முன்னிலையில் குற்றச்சாட்டுக்கள் படிக்கப்பட்டு தண்டனை நிறைவேற்றப்படுவது சீனாவின் வழக்கம். வழக்கமாக பொது விடுமுறைதினம் அல்லது வசந்தகாலத் திருவிழாவுக்கு முன்பு இதுபோல தண்டனை அங்கு நிறைவேற்றப்படுகின்றது.

சீனாவில் வசந்தகாலத் திருவிழா அடுத்த சில தினங்களில் கொண்டாடப்படவுள்ளது என்பது குறிப்பிடத்தக்கது. (க-8)

# தீவிரவாதத்திற்கு எதிரான போர் வெற்றிபெறுவதாக புஷ் அறிவிப்பு

வாஷிங்ரன்,செப்.30

அல்கெய்டா தீவிரவாத இயக்கத்தின் முக்கிய தலைவர்களில் பலர் பிடிபட்டு வருவதால் தீவிரவாதத்துக்கு எதிராக அமெரிக்க மேற்கொண்டுள்ள போர் வெகுவாக முன்னேற்றம் அடைந்துள்ளது என்று அமெரிக்க அதிபர் ஜோர்ஜ் புஷ் தெரிவித்துள்ளார்.

அதிபர் தேர்தலில் போட்டியிடும் அவர், ஒஹியோ மாகாணத்தில் நேற்றுமுன்தினம் இடம்பெற்ற தேர்தல் பிரசாரத்தின் போது இதைத் தெரிவித்தார்.

அங்கு அவர் மேலும் கூறியதாவது:-

அமெரிக்கப் பத்திரிகைச் செய்தியாளர் டேனியல் பியர்லை கொடூரமான முறையில் கொலை செய்த அம்ஜத் பாரூக்கி பாகிஸ்தானில் பொலீஸாருடன் நடந்த சண்டையில் ஞாயிற்றுக்கிழமை கொல்லப்பட்டார். பாகிஸ்தான் அதிபர் முஷாரப்பை கொலை செய்ய இரண்டுமுறை பாரூக்கி தாக்குதல் நடத்தியவர்.

அல்கெய்டா தீவிரவாதிகளைச் சட்டத்தின் முன் கொண்டு வருவதற்கு அமெரிக்கா அதன் நேச நாடுகளுடன் இணைந்து தீவிரமாகச் செயற்பட்டு வருகிறது. அந்த இயக்கத்தின் முக்கிய புள்ளிகளில் 75 சதவீதத்தினர் பிடிக்கப்பட்டோ அல்லது கொல்லப்பட்டுள்ளனர் - என்றார். (க-8)

## உலக அரங்கில்

# டுபாய் விமானநிலைய விபத்தில் 70 பேர் வரை உயிரிழப்பா?

டுபாய்,செப்.30

டுபாய் விமான நிலைய விபத்தில் 70 பேர்வரை உயிரிழந்தனர் எனவும் தீவிரவாதிகளின் தாக்குதலே இதற்குக் காரணம் என்றும் பர்பரப்பான தகவல்கள் வெளியாகின.

டுபாய் விமான நிலையத்தில் கட்டப்பட்டு வந்த பிரமாண்ட சுவர் இடிந்து விழுந்ததில் 8 பேர் பலியானார்கள்; 45 பேர் படுகாயமடைந்தனர். இறந்தவர்களில் ஒருவரும் காயமடைந்தவர்களில் 12 பேரும் இந்தியர்கள் என்று தெரியவந்துள்ளது. காயமடைந்த 6 பேர் தமிழ்நாட்டிலிருந்து சென்றவர்கள்.

விமான நிலையக் கட்டுமானப் பணிகளுக்காக மொத்தம் 5ஆயிரம் ஊழியாகளை நியமித்திருந்தனர். அவர்களில் பலர் இந்தியா மற்றும் பாகிஸ்தானைச் சேர்ந்தவர்கள். விபத்து நடந்தபோது ஏறத்தாழ 300 பேர் வரை வேலை செய்துகொண்டிருந்தனர். இதனால் விபத்தில் இறந்தவர்களின் எண்ணிக்கை அதிகமாக இருக்கலாம் என்றும் கருதப்படுகிறது.

விபத்து நடந்தவுடன் அந்தப் பகுதிக்கு ஏராளமான அம்புலன்ஸ் வாகனங்கள் எச்சரிக்கை ஒலியுடன் விரைந்தவண்ணம் இருந்தன. இதைப் பார்த்ததும் அல்கெய்டா தீவிரவாத இயக்கத்தினர் விமான நிலையக் கட்டடத்தைத் தகர்த்து விட்டனர் எனவும் இதனால் 70 பேருக்கும் மேல் பலியாகிவிட்டனர் எனவும் முதலில் வந்த தகவல்கள் தெரிவித்தன. வெளிநாட்டு செய்தி நிறுவனங்களும் இந்த விபத்து பற்றிப் பரபரப்பாக விசாரித்த வண்ணம் இருந்தன. (க-8)

# ஈ-ராக் பிராந்திய மாநாடு நவம்பரில் நடைபெறும்

பக்தாத்,செப்.30

ஈராக்கில் ஜனவரி மாதம் நடத்தத் திட்டமிடப்பட்டுள்ள பொதுத்தேர்தல் சம்பந்தமான ஒழுங்குகள் பற்றி ஆராயவென எதிர்வரும் நவம்பர் மாதம் அமைச்சர்கள் மட்டத்திலான கூட்டமொன்று நடைபெறும் என்று ஈராக் வெளிவிவகார அமைச்சர் சிபாரி தெரிவித்துள்ளார்.

தொடர்ந்தும் சிபாரி கருத்து வெளியிடுகையில் -

துருக்கி, ஈரான், சிரியா, குவைத், ஜோர்தான், எகிப்து ஆகிய நாடுகளினதும் எட்டு கைத்தொழில் மய நாடுகளினதும் - சீனாவினதும் பிரதிநிதிகள் இக்கூட்டத்தில் பங்கு பற்றுவார்கள்.

ஐக்கியநாடுகள் சபை, அரபுலீக், ஐரோப்பிய சமூகம், இஸ்லாமிய மாநாட்டு அமைப்பு என்பனவற்றின் அதிகாரிகளும் இக்கூட்டத்திற்கு சமுகமளிக்கவுள்ளனர். - என்றார்.

ஐக்கிய நாடுகள் சபையில் கோபி அனானையும் அரபு நாடுகளின் தூதுவர்களையும் சந்தித்த பின்னர் கருத்து வெளியிடுகையிலேயே மேற்கண்டவாறு தெரிவித்தார். இந்த மாநாடு சர்வதேச ரீதியில் அமைந்ததொன்றல்ல என்றும் விஸ்தரிக்கப்பட்ட பிராந்திய மாநாடாகவே அமையும் என்றும் சிபாரி தெரிவித்தார்.

அடுத்த ஆண்டு ஜனவரி மாதம் நடைபெறவிருக்கும் சுதந்திரமான முதலாவது தேர்தலில் நாட்டின் சகல மக்களும் வாக்களிப்பார்கள் என்று தான் நம்புகிறேன் எனவும் சிபாரி தெரிவித்தார். (க-8)




அமெரிக்காவில் அதிபர் ஜோர்ஜ் புஷ்ஷுக்கு ஆதரவாக நேற்றுமுன்தினம் பேரணி ஒன்று நடைபெற்றது. அந்தப் பேரணியில் கலந்துகொண்ட பெண்கள் தமது ஆடைகளில் புஷ்ஷை ஆதரிக்கும் வசனங்களை பொறித்திருந்தனர். அந்தக்காட்சி இதுதான்.

# நேபாளத்தில் போராட்டம்; இயல்புவாழ்க்கை பாதிப்பு!

நேபாளத்தில் மாவோயிஸ்ட் தீவிரவாதத் தலைவர்கள் இருவர் சுட்டுக்கொல்லப்பட்டதைக் கண்டித்து நேற்றுமுன்தினம் போராட்டம் நடத்தப்பட்டது. இப்போராட்டத்தின் போது தலைநகர் காத்மண்டுவில் குண்டொன்று வெடித்தது. இதனால் நாட்டின் பல பகுதிகளில் இயல்பு வாழ்க்கை பாதிக்கப்பட்டது.

நேபாளத்தில் மாவோயிஸ்ட் தீவிரவாதிகளுக்கும், இராணுவத்தினருக்கும் இடையில் கடும் மோதல் நிலவுகின்றது. கடந்த சில நாள்களுக்கு முன் நடந்த இரு தரப்புச் சண்டையில் மாவோயிஸ்ட் தீவிரவாதத் தலைவர்கள் இருவர் சுட்டுக்கொல்லப்பட்டனர். இதற்குத் தீவிரவாதிகள் கடும் எதிர்ப்புத் தெரிவித்து நேற்று முன்தினம் போராட்டத்துக்கு அழைப்புவிடுத்தனர்.

இதனால், தலைநகர் காத்மண்டு உட்பட நேபாளத்தின் கிழக்கு, மத்திய பகுதிகள் கடுமையாகப் பாதிக்கப்பட்டன. கல்வி நிறுவனங்கள், சந்தைகள் மூடப்பட்டன. காத்மண்டுவில் பஸ்கள் தீ வைத்துக் கொளுத்தப்பட்டன. தாடிங் மாவட்டத்தில் ஆறு பஸ்கள் தீக்கிரையாயின. வீதிப்போக்குவரத்து பாதிக்கப்பட்டது.

இதற்கிடையில், காத்மண்டுவில் உள்ள லலித்பூர் மாவட்டம் குமாரிபதி பகுதியில் சக்திவாய்ந்த குண்டு ஒன்று வெடித்தது. காரில் தீவிரவாதிகள் வைத்திருந்த குண்டு வெடித்துச் சிதறியதாகப் பொலீஸார் கூறினர்.

எனினும், தீவிரவாதிகளின் போராட்டத்தில் எந்த உயிர்ச்சேதமும் ஏற்படவில்லை. (க-8)

# அமெரிக்காவில் நில நடுக்கம்!

கலிபோர்னியா,செப்.30

அமெரிக்காவின் கலிபோர்னியா மாநிலத்தின் மத்திய பகுதியில் நில நடுக்கம் ஏற்பட்டுள்ளது.

இந்த நில நடுக்கத்தின் காரணமாக உயிராபத்துக்கள் எதுவும் ஏற்படவில்லை ஆனால் பொருள்சேதங்கள் ஏற்பட்டுள்ளன என கலிபோர்னிய அதிகாரிகள் தெரிவித்தனர்.

ஆறு ரிக்ரயர் அளவில் பதிவாகியுள்ள இந்த நிலநடுக்கம் பல்வேறு பகுதிகளில் உணரப்பட்டதாக தெரிவிக்கப்படுகின்றது.

எனினும், தொடர்ந்தும் மேலும் இரண்டு மிகப்பெரும் நில நடுக்கம் இரு நாள்களுக்குள் ஏற்படலாம் என்று அந்நாட்டு புவியியலாளர்கள் எச்சரிக்கை விடுத்துள்ளனர். (க-8)

# கடத்தப்பட்ட இத்தாலியப் பெண்கள் ஈ-ராக் தீவிரவாதிகளால் விடுவிப்பு!

## நேற்று அவர்கள் தாயகம் திரும்பினர்

பக்தாத்,செப்.30

ஈராக்கில் தீவிரவாதிகளால் பணயக்கைதிகளாகப் பிடித்துவைக்கப்பட்டிருந்த இத்தாலியப் பெண் பிரஜைகள் இருவரும் விடுவிக்கப்பட்டுள்ளனர். அவர்கள் இருவரும் நேற்று இத்தாலி சென்றடைந்தனர்.

தீவிரவாதிகளால் [illegible] முன் தலைநகர் பக்தாத்தில் அமைந்துள்ள மனிதநேய சேவையாற்றும் அமைப்பொன்றின் அலுவலகத்திலிருந்து இவர்கள் கடத்தப்பட்டிருந்தனர்.

ஈராக்கில் நிலைகொண்டுள்ள இத்தாலியப் படைகள் மற்றும் நிறுவனங்களை நாட்டை விட்டு வெளியேறவேண்டும் எனக் கோரியே இவர்கள் கடத்தப்பட்டனர் என அந்தத் தீவிரவாத அமைப்பு அல்ஜஸீராத் தொலைக்காட்சியின் ஊடாகவும், இஸ்லாமிய இணையத்தளத்தின் மூலமாகவும் தெரிவித்திருந்தது.

நிபந்தனைக்கு இத்தாலி தலைசாய்க்காதவிடத்து பணயக்கைதிகளைக் கொலை செய்துவிடுவோம் என்றும் அவர்கள் எச்சரிக்கை விடுத்திருந்தனர்.

சிமோனா பாரி, சிமோனா டொரெட்டா ஆகிய மனிதநேய சேவையாளர்களே மேற்படி தீவிரவாதிகளால் கடத்தப்பட்டுப் பின்னர், தற்போது விடுதலை செய்யப்பட்டவர்களாவர்

இவர்கள் இருவரும் நல்ல தேகாரோக்கியத்தோடு உள்ளனர் என அதிகாரிகள் தெரிவித்தனர். (க-8)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## வடமராட்சி கிழக்கு
## புனர்வாழ்வு புனரமைப்பு நிறுவனம்
### மணல் விநியோக அறிவித்தல்

தவிர்க்கமுடியாத காரணத்தால் இன்று (30.09.2004) வியாழக்கிழமை மணல் விநியோகம் நடைபெறமாட்டாது. இத்திகதி குறிப்பிட்டவர்களுக்குரிய மணல் விநியோகத் திகதி பின்னர் அறிவிக்கப்படும்.

தடங்கலுக்கு வருந்துகின்றோம்.

(சி37915)(34-13-14-24) - நிர்வாகம்.

## பாராட்டி வாழ்த்துகின்றோம்



கோண்டாவில் வடக்கு சிவபூதவராயர் தேவஸ்தான பிரதமகுருக்கள் ஜோதிநாதக்குருக்கள் ~ புஸ்பலதா தம்பதிகளின் செல்வப் புதல்வனும் யா/கோண்டாவில் இந்து மகாவித்தியாலய மாணவனுமான

**செல்வன் திரியம்பக சர்மா**

அவர்கள் 2004 ஆம் ஆண்டு புலமைப்பரிசில் பரீட்சையில் சித்தியடைந்ததையிட்டு (166 புள்ளிகள்) பாராட்டுவதுடன், அவர் சித்தியடைய ஊக்கமளித்து வழிகாட்டிய பாடசாலை அதிபர், ஆசிரியர்கள், தனியார் கல்வி நிறுவன ஆசிரியர்கள் அனைவருக்கும் நன்றி தெரிவித்து வாழ்த்துகின்றோம்.

அப்பா, அம்மா, அப்பம்மா, அம்மம்மா, தாத்தா, மாமாமார், மாமிமார், பெரியப்பா, பெரியம்மா, சித்தப்பாமார், சித்திமார், அக்காமார், அத்தான்மார், அண்ணாமார், மச்சான்மார், மச்சாள்மார், மற்றும் உறவினர்கள், நண்பர்கள்.

*கோண்டாவில் கிழக்கு, கோண்டாவில்.*

(37019)(42-13-14-24)

## யாழ்ப்பாணம் மத்திய கல்லூரி
## தரம் 1 - தரம் 6 ஆம் வகுப்புகளுக்கான அனுமதி - 2005

பின்வரும் வகுப்புகளுக்கான அனுமதிக்காக விண்ணப்பங்கள் ஏற்றுக்கொள்ளப்படுகின்றன.

**தரம் 01** - ஆண், பெண் இருபாலாரும்.

ஜனவரி 31.2000இற்கு முன் பிறந்தவராக இருத்தல் வேண்டும்.

**தரம் - 06**

தரம் 5 புலமைப் பரிசில் பரீட்சையில் நூறு (100) புள்ளிகள் வரை பெற்றவர்கள் விண்ணப்பிக்கலாம்.

**விண்ணப்ப முடிவு திகதி: 2004.10.06**

★ அலுவலக நேரத்தில் விண்ணப்பப்பத்திரத்தைப் பெறலாம்.

★ கல்லூரியில் பெறும் விண்ணப்பங்கள் மட்டும் ஏற்றுக்கொள்ளப்படும்.

✪ பிந்திய விண்ணப்பங்கள் எக்காரணங்கொண்டும் ஏற்றுக்கொள்ளப்படமாட்டாது.

யாழ்ப்பாணம் மத்திய கல்லூரி, யாழ்ப்பாணம். (சி-37906) (24-13-14) க.இராசதுரை அதிபர்.

## தமிழ்த்தின விழா

கோண்டாவில் இந்து மகாவித்தியாலயத்தின் தமிழ்த்தின விழா இன்று முற்பகல் 9.30 மணிக்கு நடை பெறவுள்ளது.

இந்நிகழ்வில் பிரதம விருந்தினர்களாக யாழ். பல்கலைக்கழகத் தமிழ்த்துறைத் தலைவர் பேராசிரியர் அ.சண்முகதாஸ், கலாநிதி திருமதி மனோண்மணி சண்முகதாஸ் ஆகியோர் கலந்து கொள்ளவுள்ளனர்.

சிறப்பு விருந்தினராக யாழ். கல்வி வலய உதவிக் கல்விப் பணிப்பாளர் எம்.எஸ்.ஸ்ரீதயாளன் கலந்துகொள்ளவுள்ளார். (10-204)

## மொழிபெயர்ப்பாளர் தேவை

ஆங்கில நூல்களைத் தமிழாக்கம் செய்வோர் தேவை. தகுதியுடையோர் அவர்கள் தகைமைகளைக் கீழ்க்காணும் முகவரிக்கு அனுப்பவும். தகைமைக்கேற்ற ஊதியம் வழங்கப்படும்.

**விள. இல.2386**

**மே/பா உதயன்.**

(36771)(12) (24-13-14)

## ஆசிரியர்கள் தேவை

பிரபல பாடசாலை ஒன்றுக்குப் பின்வரும் இடங்களில் ஆங்கிலத்தில் கற்பிக்கும் திறனுடைய ஆசிரியர்கள் தேவை. மானிப்பாய், சாவகச்சேரி, யாழ்ப்பாணம். சுயவிவரக் கோவையுடனும் சகல ஆவணங்களுடனும் கீழ்வரும் முகவரிக்கு 02.10.2004 சனிக்கிழமை நேரில் சமுகமளிக்கவும்.

**140, Temple Road, Jaffna.**

(C/37912)(42-13-14-24)

## வேலை வெற்றிடம்

SAAMSTECH இன் யாழ்ப்பாணம், பருத்தித்துறை, சாவகச்சேரி, கிளிநொச்சி, முல்லைத்தீவு, வவுனியா, மட்டக்களப்பு, திருகோணமலை மற்றும் கொழும்பிலுள்ள பல்வேறு மையங்களில் பணிபுரிய விரும்பும் கணனித் தேர்ச்சி மற்றும் வேறு சிறப்புத் தேர்ச்சிகளுள்ள க.பொ.த. உ.த. சித்தி மற்றும் பட்டதாரி இளைஞர், யுவதிகள் 01.10.2004 வெள்ளிக்கிழமை காலை 10.00 மணிமுதல் 3.00 மணிவரை நேரில் வரவும்.

**SAAMSTECH,**

841, Hospital Rd., Jaffna.

077 3068968

(சி-37907) (24-13-14)

## கண்ணீர் அஞ்சலி

வைத்திய கலாநிதி S.A.குஞ்சிதபாதம் கொழும்பு ஆயுள்வேதக் கல்லூரி, லங்கா சித்த ஆயுள்வேத வைத்திய கல்லூரி, கைதடி ஆயுள்வேத வைத்தியசாலை ஆகியவற்றில் சிறப்பாகக் கடமையாற்றிய அமரர் வைத்திய கலாநிதி S.A.குஞ்சிதபாதம் அவரின் இழப்பால் துயருறும் குடும்பத்தினருக்கு எமது சங்கம் சார்பாக ஆழ்ந்த அனுதாபங்களைத் தெரிவித்துக்கொள்கின்றோம்.

*அகில இலங்கை டி.ஏ.எம். பட்டதாரிகள் வைத்திய சங்கம்.*

(37022)(34-13-14-24)

## பாராட்டி வாழ்த்து ...ன்றோம்



யாழ்/ அச்சுவேலி மத்திய கல்லூரி ஆரம்பப் பிரிவில் கல்வி பயிலும்

**தை. பவானந்தி**

அவர்கள் 5ஆம் ஆண்டு புலமைப் பரிசில் பரீட்சையில் 185 புள்ளிகள் பெற்றுள்ளார். அவரைப் பாராட்டுவதுடன், இவரது கல்விக்கு வித்திட்ட பாடசாலைச் சமூகத்தினருக்கும் அச்சுவேலி ஆஸ்பத்திரி வீதி, கஜமுகன் கல்வி நிலைய ஆசிரியர்களுக்கும் எமது நன்றிகளைத் தெரிவித்துக்கொள்ளுகின்றோம்.

தை. அனிசிறிலதா, கில்டா வாசம், அச்சுவேலி. (37017) (26-13-14-24)

அம்மம்மா, மாமா, அம்மா, அக்கா, தம்பி.

## பருத்தித்துறை
## மெதடிஸ்த பெண்கள் உயர்தரப் பாடசாலை
## தரம் 6 இற்கான அனுமதி - 2005

எமது பாடசாலையில் தரம் 6 - 2005 இற்கு மாணவர்களை அனுமதிப்பதற்கான விண்ணப்பங்கள் பாடசாலையினால் கோரப்படுகின்றன. விண்ணப்பப்படிவங்களைப் பாடசாலை அலுவலகத்தில் பெற்று 15-11-2004 இற்கு முன்பு காரியாலயத்தில் ஒப்படைக்கவும்.

அதிபர்,
பருத்தித்துறை மெ.பெ.உ.பாடசாலை,
பருத்தித்துறை.

(சி-37910) (26-13-14-24)

## கண்ணீர் அஞ்சலி



*இலங்கை சிமெந்துக் கூட்டுத்தாபன முன்னாள் இயந்திரப் பொறியியலாளர்*

**தம்பிப்பிள்ளை சுந்தரலிங்கம்**

அவர்களின் திடீர் மறைவையிட்டுத் துயருற்றிருக்கும் அன்னாரின் குடும்பத்தினருக்கு எமது ஆழ்ந்த அனுதாபங்களையும் துயரத்தையும் தெரிவிப்பதோடு, அன்னாரின் ஆத்மா சாந்தியடைய இறைவனைப் பிரார்த்திக்கின்றோம்.

உரும்பிராய்.

இலங்கை சிமெந்துக் கூட்டுத்தாபன உத்தியோகத்தர்கள்.

(சி-37911) (26-13-14-24)

## மரண அறிவித்தல்கள்

### விஜயரத்தினம் றஞ்சிற்குமாரசிறீ

காரைநகர், நீலிப்பந்தனையைப் பிறப்பிடமாகவும் பிரான்ஸை வசிப்பிடமாகவும் கொண்ட விஜயரத்தினம் றஞ்சிற்குமாரசிறீ 25.09.2004 சனிக்கிழமை பிரான்ஸில் காலமானார்.

அன்னார் க.ந.விஜயரத்தினம் (ஓய்வுபெற்ற ஆங்கில ஆசிரியர்) - காலஞ்சென்ற சிவயோகம் (அதிபர்) தம்பதிகளின் பாசமிகு மகனும் சாந்தியின் அன்புக் கணவரும் விஜயதர்சினி, விஜயடயானா ஆகியோரின் பாசமிகு தந்தையும் திரு.திருமதி பேரம்பலத்தின் மருமகனும் வீரமங்கை ஸ்டலினா (விரிவுரையாளர், யாழ். பல்கலைக்கழகம்), பிறேமதாஸ் குமாரசிறீ (ஆசிரியர்), வீரமனோகரி ஸ்டலினா (ஆசிரியை), காலஞ்சென்ற விஜயராஜா சேகரன் குமாரசிறீ மற்றும் சாயிபாபா (ஜேர்மனி), ஜோன்மனோகரன் கெனடி (விரிவுரையாளர், கிழக்குப் பல்கலைக்கழகம்), பூங்கோதை (கனடா) ஆகியோரின் பாசமிகு சகோதரரும் யோகரத்தினம் (பொறியியலாளர்), யோகேஸ்வரி, கோபிச்சந்திரன் (ஆசிரியர்), கலிஸ்ரா (ஜேர்மனி), நதிரா (விரிவுரையாளர்), கிரிதரன் (கனடா) ஆகியோரின் பாசமிகு மைத்துனரும் திருமதி உமாதேவி பொன்னம்பலத்தின் பெறாமகனும் காலஞ்சென்றவர்களான மார்க்கண்டு (புகையிரத நிலைய அதிபர்), கணபதிப்பிள்ளை ஆகியோரின் மருமகனும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் இன்று (30.09.2004) வியாழக்கிழமை பிரான்ஸில் நடைபெறும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

*நீலிப்பந்தனை, காரைநகர்.*

தகவல்:
வி.பிறேமதாஸ்குமாரசிறீ (ஆசிரியர்),
வி.சாயிபாபா (ஜேர்மனி)
(சகோதரர்கள்).

(37018) (24-13-14)

### தம்பிப்பிள்ளை சுந்தரலிங்கம்



அரியாலையைச் சேர்ந்த தம்பிப்பிள்ளை சுந்தரலிங்கம் (ஓய்வு பெற்ற பொறியியலாளர், சிமெந்துக் கூட்டுத்தாபனம்) அவர்கள் 27.09.2004 திங்கட்கிழமை காலமாகிவிட்டார்.

அன்னார் காலஞ்சென்ற தம்பிப்பிள்ளை - பார்வதிப்பிள்ளை தம்பதிகளின் அன்பு மகனும் சறோஜினியின் (இலங்கை மின்சார சபை, வட பிராந்திய அலுவலகம்) அன்புக் கணவரும் உதயணன் (லண்டன்), துளசி ஆகியோரின் பாசமிகு தந்தையும் துரைசிங்கம் (ஓய்வுபெற்ற தபாலதிபர்), காலஞ்சென்ற திருமதி இந்திரா (பத்திரிகை ஆசிரியர், கல்வித்திணைக்களம்), திருமதி ஜெகசோதி விநாயகலிங்கம் (லண்டன்), பத்மநாதன் (லண்டன்), திருமதி இராஜலட்சுமி யோகானந்தன், புஸ்பலிங்கம் ஆகியோரின் அன்புச் சகோதரரும் விநாயகலிங்கம் (லண்டன்), யோகானந்தன் (பொறியியலாளர், மகாவலி அபிவிருத்திச் சபை), சிற்றம்பலம் (லண்டன்), வரதராஜா (லண்டன்), ரகுநாத் (கனடா), திருமதிகள் சறோஜினி துரைசிங்கம் (ஓய்வுபெற்ற ஆசிரியர்), திலகவதி (லண்டன்), சந்திரா (லண்டன்), ஜெகசோதி (லண்டன்), வசந்தாதேவி (லண்டன்) ஆகியோரின் அன்பு மைத்துனரும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் இன்று (30.09.2004) வியாழக்கிழமை இல. 150, நெடுங்குளம் வீதியில் உள்ள அன்னாரின் இல்லத்தில் நடைபெற்று, பிற்பகல் 4.00 (புதிய நேரம்) மணியளவில் பூதவுடல் தகனக்கிரியைக்காக அரியாலை சித்துப்பாத்தி இந்து மயானத்திற்கு எடுத்துச் செல்லப்படும்.

*150, நெடுங்குளம் வீதி, அரியாலை, யாழ்ப்பாணம்.*

(37020) (24-13-14)

தகவல்:
சு.சறோஜினி (மனைவி).





## பஜாஜ் முச்சக்கரவண்டியும், மோட்டார் சைக்கிள் சேவை முகாம்

டேவிட் பீரிஸ் மோட்டார் கம்பனியின் அதிகாரம் பெற்ற சேவை முகவர்

**சந்நிதி முருகன் வேக்சொப் & சேவிஸ்**

★ 2004 ஒக்ரோபர் முதலாம் திகதி பஜாஜ் முச்சக்கரவண்டிக்கும்

★ 2004 ஒக்ரோபர் 2ஆம் திகதி பஜாஜ் மோட்டார் சைக்கிள்களுக்கும்

சேவை முகாம் ஒன்றை நடத்தவுள்ளோம். உங்கள் வாகனங்களை இந்தச் சேவை முகாமிற்கு குறிப்பிட்ட தினத்தில் கொண்டு வருவதற்கு ஏற்பாடு செய்யுமாறு கேட்டுக் கொள்கிறோம்.

★ பஜாஜ் மோட்டார் சைக்கிள், பஜாஜ் முச்சக்கரவண்டி ஆகியவற்றை இலவசமாக பரீட்சித்துப் பார்க்கப்படும்.

★ உதிரிப்பாகங்கள் விசேட கழிவு விலையில்

★ வ/ப டேவிட் பீரிஸ் மோட்டார் கம்பனியின் விசேட தொழில்நுட்ப அலுவலர்களின் ஆலோசனையை பெற்றுக்கொள்ளலாம்.

(37010) UTHAYAN Graphics

**சந்நிதி முருகன் வேக்சொப் & சேவிஸ்**

மோட்டார் சைக்கிள் பழுது பார்ப்போர்

241, பருத்தித்துறை வீதி, யாழ்ப்பாணம். Tel:021 2225202, 0777-110199


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

உதயன்

# துணிவான தலைமை தெற்கில் வேண்டும்

விடுதலைப் புலிகள் முன்வைத்துள்ள இடைக்காலத் தன்னாட்சி அதிகாரசபை யோசனையை அடிப்படையாகக கொண்டு சமாதானப் பேச்சுக்கள் ஆரம்பிக்கப்பட்டால் அரசைக் கவிழ்த்து விடுவோம் என ஜே.வி.பியின் ஹித் தேசிய அமைப்பு எச்சிரிக்கை விடுத்திருக்கின்றது.

ஜே.வி.பியின் கீழ்-அதற்கு இணைவாக-இயங்கும் நிறுவனங்களில் முக்கியமானது இந்த ஹித்தேசிய அமைப்பு. ஜே.வி.பிக்குள் அதிக வலுவும் ஆதிக்கமும் கொண்டது இது. மேலும், ஜே.வி.பியின் செல்வாக்கு வங்கியைக் கட்டிவைத்திருக்கும் அமைப்பும் கூட. கிராம மட்டத்தில் ஜே.வி.பி. காலூன்றவும் நிலைத்து நிற்கவும் பாலமாக இருப்பதும் இந்த அமைப்பே.

இந்த அமைப்பின் தலைவர் வண.எல்லே குணவங்ச தேரரே. அதையும் சுட்டிக்காட்டி மேற்படி எச்சரிக்கையையும் விடுத்திருக்கின்றார்.

"கடந்த அரசை ஆட்சியிலிருந்து விரட்டியடிப்பதற்கு மூலகாரணமாக இருந்து செயற்பட்டது ஹித் தேசிய அமைப்பு என்பது எல்லோருக்கும் தெரிந்த விடயம். இந்த அரசை ஆட்சிப்பீடம்மேற்றியது, புலிகளுக்கு இடைக்கால நிர்வாகத்தை வழங்கவோ அல்லது புலிகளுக்கு வளைந்து கொடுக்கவோ அல்ல. நாட்டைக் காட்டிக்கொடுக்கும் செயலுக்குத் துணைபோன ஐ.தே. கட்சி அரசை வீட்டுக்கு அனுப்பியதுபோல இந்த அரசையும் வீட்டுக்கு அனுப்ப எமக்கு அதிக நேரம் பிடிக்காது."- என்று முழங்கியிருக்கின்றார் அவர்.

இத்தகைய அறிவிப்பு ஜே.வி.பி.சார்புடைய பேரினவாதப் போக்கு அமைப்பிலிருந்து வெளிவருவது ஒன்றும் புதிய விடயமல்ல; எதிர்பார்க்கப்படுவதுதான். இதே கருத்தைத்தான் கடந்த பொதுத்தேர்தலுக்கு முன்னரும் இப்போது பொதுத்தேர்தலின் பின்னர் அரசில் பங்கு கொண்டிருக்கும்போதும் ஜே.வி.பியின் மூத்த தலைவர்கள் கூறிவருகின்றார்கள்.

இன்றைய ஆட்சிக் குதிரையின் நாணயக் கயிற்றைக் கைப்பற்றி வைத்திருப்பவர்கள் ஜே.வி.பியினர்தான். ஐக்கிய மக்கள் சுதந்திரக் கூட்டமைப்பு ஆட்சியில் நீடிப்பதும் கவிழ்வதும் ஜே.வி.பியினர் கைகளில்தான் உள்ளது என்பது உலகறிந்த உண்மை.

இப்படி ஆட்சிப் பிடியை ஜே.வி.பியிடம் கோட்டைவிட்டுவிட்டு 'முழுசிக்' கொண்டிருக்கும் ஜனாதிபதி குமாரதுங்க, இனப்பிரச்சினைக்குத் தமிழர் தரப்போடு சமரசம் செய்யும் விடயத்தில் தீவிர எதிர்ப்பையும் பேரினவாதத்தையும் கக்கிக்கொண்டிருக்கும் ஜே.வி.பியுடன் சேர்ந்து ஓர் இணக்க நிலையை ஏற்படுத்த முடியும் என்று தாம் திடமாக நம்புகின்றார் என வெளிநாடுகளில் முழங்கிவிட்டு வந்திருக்கின்றார்.

அமைதி முயற்சிகள் தொடர்பாகத் தமது கூட்டமைப்பு அரசுக்குள் ஒருமுகப்பட்ட நிலைப்பாட்டை எட்ட முடியும் என்றும் அவர் கூறியிருக்கின்றார்.

முதலில் அவர் அந்த நிலைப்பாட்டை எட்ட வேண்டும். அது என்ன நிலைப்பாடு என்பதை அவர் பகிரங்கப்படுத்த வேண்டும். குறைந்த பட்சம் அதை வெளிப்படுத்தக் கூடிய தயார்நிலையில் அவர் இருக்கவேண்டும்.

அதன் பின்னர்தான் இணக்கத்தை ஏற்படுத்துவதற்காக ஏனைய கட்சிகளுடன் கலந்துரையாடலும்-

ஏனைய கட்சிகளுடன் ஒரு முடிவு கண்டவுடன் மறுதரப்பில் உள்ள தமிழர்களோடு - புலிகளோடு -பேச்சும் நடத்தப்படவேண்டும்.

தமது கூட்டமைப்பு அரசுக்குள்ளேயே ஓர் இணக்கத்தை - தீர்மானத்தை- எட்ட முடியாமல் தவிக்கும் அல்லது தடுமாறும் ஜனாதிபதி குமாரதுங்க, ஒருமுடிவை எட்டுவதற்கு ஏனைய கட்சிகளுடனும், தமிழர் தரப்புப் பிரதிநிதிகளான புலிகளுடனும் தாம் பேச்சு நடத்தப் போகிறார் என்று கூறுவது வெறும் சுத்தப் புருடா!

இலங்கை இனப்பிரச்சினைக்கு அமைதி வழியில் தீர்வு காணவேண்டுமானால், துணிவோடு திடமான முடிவுகளை எடுக்கக்கூடிய - செல்வாக்கும் அதிகாரமும் மிக்க - தலைவர்கள் இரு தரப்பிலும் வேண்டும்.

தமிழர் தரப்பில் அதற்கான தலைமை முழுத் தகுதியோடும் திறமையோடும் அதிகார வலுவோடும் தமது மககளின் அங்கீகாரத்தோடும் தயாராகக் காத்திருக்கின்றது.

ஆனால், தென்னிலங்கையில்தான் அது இடிக்கிறது. அத்தகைய நிலைக்கு வரக்கூடிய ஒருவருக்கு அதற்கான அதிகாரங்களை வழங்கக்கூடியதாக ஒரு பதவி- நிறைவேற்று அதிகார ஜனாதிபதி என்ற அந்தஸ்தில் - ஏற்கனவே உள்ளது. ஆனால், அதற்கான துணிவோடும் திடத்தோடும் செயற்படுவதற்கும், அதிகார ஆசைக்கும் குறுகிய அரசியல் லாபங்களுக்கும் இடங்கொடுக்காமல் பணியாற்றுவதற்கும் தகுதியுள்ள ஒருவர் அந்தப் பதவியில் இல்லை என்பதுதான் பின்னடைவு.

அண்மைக்காலத்தில் அத்தகைய தகுதியுள்ள ஒருவர் உருவாகுவதற்கோ, அவர் அத்தகைய பதவிக்கு உயருவதற்கோ சாத்தியமே இல்லை என்பதுதான் நாட்டின் துன்பியல் நிலைமையாகும்.

# இனியும் விட்டுக்கொடுப்பது என்றால் அரசுடன் பேசாமல் விடுவதுதான் முடிவு

## ஐரோப்பிய விஜயத்துக்கு முன்பாகத் தமிழ்ச்செல்வன்



கிளிநொச்சி,செப்.30

தொடர்ச்சியாக விட்டுக் கொடுப்பையும் நல்லெண்ணத்தையும் செய்து வருகிறோம். இடைக்காலத் தன்னாட்சி அதிகார சபை கூட விட்டுக் கொடுப்பின் அடிப்படையில்தான் முன்வைக்கப்பட்டது. இனியும் நாங்கள் விட்டுக்கொடுப்பது என்றால் இந்த அரசுடன் பேசாமல் விடுவதாகத்தான் இருக்கும்.

- இவ்வாறு தெரிவித்தார் விடுதலைப் புலிகளின் அரசியல்துறைப் பொறுப்பாளர் சு.ப.தமிழ்ச்செல்வன்.

ஐரோப்பாவுக்கான சுற்றுப் பயணத்தை ஆரம்பிப்பதற்கு முன்பாகக் கிளிநொச்சியில் வைத்து உதயனுக்கு செவ்வி அளிக்கையில் அவர் இப்படிக் கூறினார்.

அவர் மேலும் கூறியதாவது:-

★ கேள்வி: ஐரோப்பா போனால் என்ன? எங்கு போனாலும் பேச்சுத் தொடங்குமா?

◆ பதில் பேச்சுக்கு அரசு தயார் இல்லை என்பதற்காக எமது முயற்சிகளைக் கைவிட முடியாது. அமைதி வழியில், சமாதான வழியில எமது மக்களுக்குத் தீர்வு ஒன்றைப் பெற்றுக்கொள்ளவேண்டும் என்பதற்காக எம்மை முழுமையாக அர்ப்பணித்திருக்கின்றோம். இந்த முயற்சியை சர்வதேச மட்டத்திலும் மேற்கொண்டு வருகின்றோம். சர்வதேச சமூகம் இதற்கு முழு ஆதரவைத் தரவேண்டும் என்பதுதான் எமதும், எமது மக்களதும் எதிர்பார்ப்பாகும். அந்தவகையில்தான், எமது தேசியத்தலைவர் இந்தப் பயணத்தை மேற்கொள்ளுமாறு பணித்துள்ளார்.

இந்தப் பயணத்தின்போது இந்த முயற்சியில் - முழுமையாக ஈடுபடுவோம்.

★ கேள்வி: சமாதானத்தை முன்னெடுக்க விட்டுக்கொடுப்புச் செய்வீர்களா?

◆ பதில் விட்டுக்கொடுப்பு என்றால் என்ன என்று விளங்கவில்லை. விடுதலைப் புலிகள் முழு அளவிலான விட்டுக்கொடுப்பை கொடுத்திருக்கிறார்கள். எங்கள் தடுப்பில் இருந்த முழுக் கைதிகளையும் விட்டுள்ளோம். ஒருதலைப்பட்சமான யுத்த நிறுத்தத்தைப் பிரகடனம் செய்தோம். தொடர்ச்சியாக நல்லெண்ணத்தையும் விட்டுக்கொடுப்பையும்செய்துதான் வருகின்றோம்.

இடைக்காலத் தன்னாட்சி அதிகார சபை கூட விட்டுக்கொடுப்பின் அடிப்படையில தான் முன்வைக்கப்பட்டது.

நாங்களும் எமது மக்களும் எத்தகைய நிலைப்பாட்டில் இருந்தோம் என்று எல்லோருக்கும் தெரியும். நிரந்தர சமாதானத்தைக் கட்டி எழுப்பவேண்டும் என்பதற்காகத்தான் இந்தக் கட்டமைப்பு வரைவை முன்வைத்துள்ளோம். இனியும் விட்டுக் கொடுப்பு என்றால் அரசுடன் பேசாமல் விடுவதுதான் என்று நினைக்கின்றேன்.

★ கேள்வி: இந்த விஜயத்தின்போது எந்த நாடுகளுக்குச் செல்லவுள்ளீர்கள்?

◆ பதில்: பல நாடுகளில் சந்திப்புகளுக்கு ஏற்பாடு செய்துள்ளோம். ஜெனிவா மாநாட்டை முடித்துக்கொண்டுதான் அதைப் பற்றி முடிவுசெய்வோம். 4 அல்லது 5 நாடுகளுக்குச் செல்லவிருக்கின்றோம்.

★ கேள்வி: ஜெனீவா மாநாடு பற்றி...?

◆ பதில்: எமது எதிர்காலத் திட்டங்கள் குறித்து ஆராயவே ஜெனவா மாநாட்டைக் கூட்டுகின்றோம். மனித உரிமை மாநாடு ஒன்றிலும் பங்குபற்றுவோம். மனித உரிமைகளை மேம்படுத்துவதற்கான செயற்பாடுகளை முன்னெடுப்பது அதற்கான உதவிகளைப் பெறுவது பற்றியும் ஆராய்வோம்.

★ கேள்வி: விடுதலைப் புலிகளின் கட்டமைப்புக்கு வெளியில் நடக்கும் முக்கிய மாநாடாக இதைக் கூறலாமா?

◆ பதில்: நிச்சயமாக, முக்கிய மாநாடாகவே கருதவேண்டும்.

★ கேள்வி: இந்த மாநாடு மூலம் உலகத் தமிழர்களின் ஆலோசனைகளைப் பெறும் நோககம் உண்டா?

◆ பதில்: தமிழீழ தேசத்தில் ஒரு தீர்வு வரவேண்டுமானல் அந்த நாடுகளில் உள்ள மக்களின் ஆதரவும் ஒத்துழைப்பும் தேவை. இங்கு எட்டப்படும் தீர்வுக்கு அவர்களின் பங்களிப்பு அவசியம். அந்த நோக்கமாகவும் எமது பயணம் அமைகிறது.

(இந்தச் செவ்வியின் ஒருபகுதி நேற்றைய உதயனில் தலைப்புச் செய்தியாக வெளியாகி இருந்தது. (ஐ-3)

# பாவனைக்காலம் முடிவடைந்த பொருள்கள் கிளிநொச்சியில் மீட்பு!

கிளிநொச்சிப் பிரதேசத்தில் சுமார் 15 ஆயிரம் ரூபா பெறுமதியான பாவனைக்காலம் காலாவதியான உணவு மற்றும் பாவனைப் பொருள்கள் நேற்று முன்தினம் அழிக்கப்பட்டன.

இப்பகுதியில் காலாவதியான பொருள்கள் விற்பனை செய்யப்படுவது தொடர்பாகக் கிடைத்த முறைப்பாடுகளையடுத்து தமிழீழ நிதித்துறையினரும் விலைக்கட்டுப்பாட்டுப் பகுதியினரும் இணைந்து திடீர் தேடுதல் ஒன்றை மேற்கொண்டனர். அப்போது மீட்கப்பட்ட பொருள்களே பொது இடம் ஒன்றில் வைத்துத் தீக்கிரையாக்கப்பட்டன.

சொக்கலேற்றுக்கள், ரின்பால், பிஸ்கட் வகைகள், மாஜரின், சோஸ், இனிப்பு வகைகள், லக்ஸ்பிறே, பப்படம் உட்பட பாவனைக்காலம் முடிவடைந்த பொருள்களே பொதுமக்கள் முன்னிலையில் தீக்கிரையாக்கப்பட்டன. (ஐ-204)



நேற்று முன்தினம் கிளிநொச்சி நகரப்பகுதியில் வர்த்தக நிலையங்களிலிருந்து மீட்கப்பட்ட காலாவதியான பொருள்கள் தீக்கிரையாக்கப்படுவதைப் படத்தில் காணலாம். (படம்: தீபன்)

# பூநகரியில் பிரதான வீதிகளில் பாலங்கள் அமைக்கப்படாமையால் பெரும் சிரமம்

## போக்குவரத்துகள் தடைப்படும் அபாயம்

ஜெயபுரம்,செப்.30

பூநகரி பிரதேச செயலர் பிரிவில் இருந்து கிளிநொச்சி மற்றும் யாழ்ப்பாணம் ஆகியவற்றுக்குச் செல்லும் பிரதான வீதிகளில் பாலங்கள் அமைக்கப்படாமையால் மழைகாலத்தில் பயணம் செய்யும் மக்கள் பெரும் சிரமங்களை எதிர்நோக்கி வருகின்றனர்.

பாலங்கள் அமைக்கப்படாமையால் மழைகாலத்தில் வீதிகளுக்கு மேலாக வெள்ளம் பாய்வதால் மக்கள் பயணம் செய்ய முடியாதுள்ளதுடன் வீதிகளும் சேதமடைந்து வருகின்றன. புதிய பாலங்களை அமைப்பதற்கான ஆரம்பகட்ட நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டபோதும் பணிகள் தொடர்ந்து இடம்பெறவில்லை.

பாலங்கள் அமைப்பதைக் கருத்திற்கொண்டு பிரதான வீதிக்கு அருகாக தற்காலிகமாக அமைக்கப்பட்ட வீதியூடாகச் சென்று வரும் வாகனங்களும் சேற்றில் புதையுண்டு வருவதைக் காணக்கூடியதாகவுள்ளது. பூநகரி குடமுறுட்டிப் பாதை பல காலங்களாகச் சேதமடைந்து காணப்படுகின்ற போதும் இதுவரையில் அதனைப் புனரமைப்பதற்கான நடவடிக்கை ஏதுவும் எடுக்கப்படவில்லை.

மழைகாலம் ஆரம்பித்துள்ளதை அடுத்து வீதியூடான போக்குவரத்துக்கள் யாவும் சிரமம் நிறைந்ததாகவே உள்ளன. தொடர்ந்தும் வீதிகளை மேவி வெள்ளம் பாய்வதால வதிகளூடாகப் போக்குவரத்துக்கள் தடைபடும் அபாயநிலை காணப்படுகின்றது.

அவ்வாறு போக்குவரத்துகள் தடைப்பட்டால் பூநகரி பிரதேச செயலர் பிரிவில் வாழ்கின்ற மக்களுக்கான உணவுப் பொருள்களைக் கூட எடுத்துவரமுடியாத நிலை ஏற்படும். எனவே, உரிய தரப்பினர் இது விடயத்தில் உடன்நடவடிக்கை எடுக்க வேண்டுமென்று அப்பிரதேச மக்கள் வேண்டுகோள் விடுக்கின்றனர். (10-291)

# மகாத்மா காந்தியின் உருவப்படங்கள்

மகாத்மா காந்தியின் நினைவுதினம் நாளைமறுதினம் சனிக்கிழமை ஆகும்.

இந்த நினைவு தினத்தையொட்டி மூவர்ணத்திலான காந்தியின் உருவப் படங்கள் யாழ்காங்கேசன்துறை வீதியில் அமைந்துள்ள மில்க்வைற் சவர்க்கார தொழிலகத்தினால் இன்று முதல் அன்பளிப்பாக வழங்கப்படவுள்ளதாகத் தொழிலகத்தின உரிமையாளர் இ.தவகோபால் தெரிவித்துள்ளார். பாடசாலைகள், சனசமூக நிலையங்கள் என்பன மேற்படி படங்களைப் பெறுக் கொள்ளலாம் என்று தெரிவிக்கப்பட்டுள்ளது. (10)

## உதயவாக்கு

முயன்றால் முடியாதது எதுவுமில்லை. முயுன்றுபாருங்கள்-முன்னேற்றம் நிச்சயம். உங்கள் அருகில்

## நாளை

புரட்டாதி 15
வெள்ளிக்கிழமை
(01.10.2004)
திதி : திருதியை
முன்னிரவு 7.41 வரை.
நட்சத்திரம் : பரணி
சுபநேரம்: 6.02 - 7.32
இராகுகாலம்: 10.33 - 12.03
(பகல் நேரம்)

# சாயி சிந்தனை

## மனிதனுக்கு ஆன்மீகம் அவசியம்



இங்கே ஒரு மனிதன் இருக்கின்றான். அவனைப் படம் எடுத்தால், அவன் வெளிப்புறமாகப் போட்டிருக்கும் உடுப்பு, அதன் நிறம், அமைப்பு இதெல்லாம் தெரியும். வெளிப்புற வடிவம் தெரியுமே தவிர, உட்புறமான தத்துவம் எதுவும் விளங்காது. அவனையே எக்ஸ்றே படம் எடுத்தால் உள்ளிருக்கும் எலும்பு, நரம்பு இவையெல்லாம் தெளிவாகத் தெரியும்.

நவீன காலக் கல்வி என்பது வெளிப்புறமான விஷயங்களைக் காட்டும் படங்கள் போலானது, ஆனால், ஆன்மீகக் கல்வி என்பது எக்ஸ்றே மாதிரி உட்புறத்தைத் தெளிவாக விளக்குகின்றது. ஆகையால்தான், மனிதனுக்கு ஆன்மீகம் என்பது மிகவும் அவசியம். இந்நாளைய கல்வியில் ஒழுக்கம், ஆன்மீகம், தர்மம் இவையெல்லாம் காணப்படவில்லை.

விஸ்வாமித்திரர் நன்கு தவம் செய்து 'ஆதித்யஹ்ருதயம்' என்ற மந்திரத்தை உருவாக்கினார். இதன்மூலம் தான் அநேக அஸ்திரங்களை அவரால் அடைய முடிந்தது. இவ்வளவு அஸ்திரங்கள் இருந்தும், அரக்கர்களைக் கொல்ல, ஸ்ரீராமரின் உதவியை ஏன் நாடினார்? காரணம் சில வழிமுறைகள்தான். விஸ்வாமித்திரர் தவம் செய்யும்போது அவர் சில யாகங்களும் செய்தார். யாகம் செய்யும்போது, யாகத்தைச் செய்பவர் எத்தகைய கொடுஞ் செயலிலும் ஈடுபடக்கூடாது, யாக தீட்சை பூண்டிருக்க வேண்டும். யக்ஞம் செய்யும்போது கோபமோ வெறுப்போ அவரிடம் ஏற்படக்கூடாது. அதனால்தான் விஸ்வாமித்திரர் அங்கு தலைமைப் புரோகிதராக இருந்து யாகம் நடத்த ராமரின் உதவியைக் கோரினார்.

(ஆதாரம்: ப்ரசாந்தியல் அமிர்தவர்ஷினி)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## பஸ் - மினிபஸ் மோதிய விபத்தில் 12 பேர் காயம்

மாத்தளை,செப்.30

மிரிஸ, பண்டாரமுல்ல பகுதியில் நேற்று முன்தினம் காலை இடம்பெற்ற வாகன விபத்தில 4 பெண்கள் உட்பட 12 பேர் காயமடைந்தனர்.

மாத்தறையில் இருந்து சென்ற போக்குவரத்துச்சபை பஸ்ஸும், கொழும்பில் இருந்து மாததறை நோக்கிச் சென்றுகொண்டிருந்த தனியார் பஸ்ஸும் மோதிக் கொண்டதில் இந்த விபத்து ஏற்பட்டது.

காயமடைந்தவர்கள் மாத்தறை வைத்திய சாலையில் சேர்க்கப்பட்டுள்ளனர். அவர்களில் சிலரின் நிலைமை கவலைக்கிடமாக இருக்கின்றது என்று வைத்தியசாலை வட்டாரங்கள் தெரிவித்தன.

விபத்துக்குள்ளான இரு வாகனங்களினதும சாரதிகள் கைது செய்யப்பட்டுள்ளனர். மேலதிக விசாரணைகளைப் பொலஸார் மேற்கொண்டுள்ளனர். (க-8)

## சிரேஷ்ட ஊடகவியலாளர் கல்கிசையில் கொலை

கொழும்பு,செப்.30

சிரேஷ்ட ஊடகவியலாளர் லோறன்ஸ் ஜெயசேகர கல்கிசையிலுள்ள அவரது வீட்டில் கடந்த திங்கட்கிழமை இரவு மர்மமான முறையில் கொலை செய்யப்பட்டுள்ளார்.

இவர் இலங்கை ஒலிபரப்புக் கூட்டுத்தாபனத்தில் இருபது ஆண்டுகளாக ஆங்கில செய்தி ஆசிரியராகக் கடமையாற்றியுள்ளார்.

முன்னர் சண் புதினப் பத்திரிகை நிறுவனத்தின் பத்திரிகையாளராகப் பணிபுரிந்துள்ளார்.

பொலீஸார் இக்கொலை தொடர்பாக விசாரணைகளை மேற்கொண்டு வருகின்றனர் என்று தெரிவிக்கப்பட்டது. (8-7)

## பனம் விதை நடும் நிகழ்வு

யாழ்ப்பாணம்,செப்.30

வடமராட்சி லயன்ஸ் கழகத்தினால் மேற்கொள்ளப்படும் பனை நடுகைத்திட்டத்தின்கீழ், பனம் விதைகளை நடுகை செய்யும் நிகழ்வு இன்று வியாழக்கிழமை முற்பகல் 10 மணிக்கு புலோலி ஆனைவிழுந்தானை அண்டிய பிரதேசத்தில் நடைபெறவுள்ளது.

இந்நடுகைத்திட்டத்தை லயன்ஸ் கழக மாவட்ட இணைப்பாளர் லயன் கே.தணிகாசலம் ஆரம்பித்து வைக்கவுள்ளார்.

இத்திட்டத்தின்கீழ் பொது நிறுவனங்களுக்கு நிழல் தரும் மரங்களை விநியோகிக்கும் நிகழ்வும இடம்பெறவுள்ளது. (ஐ-204)

## வலி.கிழக்குப் பிரதேச சபைக்குப் புதிய காரியாலம்

வலி.கிழக்குப் பிரதேச சபைக்கான தலைமைக் காரியாலம் புத்தூரில் அமைக்கப்பட்டு வருகிறது.

கடந்த மாதம் ஆரம்பமான இதன் கட்டடப் பணிகள் இவ்வருடம் டிசெம்பர் மாதத்துக்குள முழுமையடைந்து விடுமெனத் தெரிவிக்கப்படுகிறது. இதற்குச் செலவாகும் 7.5 மில்லியன் நிதியில் 6 மில்லியன் ரூபா வினை 'நீரப்' திட்டம் வழங்கியுள்ளது. (8-72)

## காவலரண்கள் அகற்றப்பட்டன

கைதடிப் பாலம் செப்பனிடப்படவுள்ளதையடுத்து பாலத்தில் இருந்த படையினரின் காவலரண்கள் அகற்றப்பட்டுள்ளன.

பாலத்தைச் செப்பனிட வசதியாகப் படையினர் அரண்களை அகற்றியுள்ளனர் எனத் தெரியப்படுகிறது. (8-31)

## புலமைப்பரிசில் பரீட்சை தொடர்பான பகுப்பாய்வு

ஐந்தாம் தரப் புலமைப் பரிசில் பரீட்சைப் பெறுபேறு தொடர்பான பகுப்பாய்வு தென்மராட்சி வலயக் கல்வி அலுவலகத்தினால் மேற்கொள்ளப்பட்டு வருகிறது.

பரீட்சைப் பெறுபேறு தொடர்பான பகுப்பாய்வு அறிக்கையை உரிய படிவத்தில் தயாரித்து உடன் வலயக் கல்வி அலுவலகத்தில் ஒப்படைக்குமாறு வலயக் கல்வி பணிப்பாளர் வ. செல்வராசா அறிவித்துள்ளார். (8-117)

---

## பாராட்டி வாழ்த்துகிறோம்



மில் ஒழுங்கை, உரும்பிராய் தெற்கைச் சேர்ந்தவரும்
**கெங்காதரன் நீலாவதி**
ஆகியோரின் புதல்வனும்
யாழ். மத்திய கல்லூரி மாணவனுமான
**செல்வன்**
**கெங்காதரன் தஜீவன்**

அவர்கள் புலமைப்பரிசில் பரீட்சையில் 144 புள்ளிகள் பெற்றுச் சித்தி அடைந்ததையிட்டு, மனமார வாழ்த்துவதுடன், அவர் கல்வியில் மேலும் சிறப்படைய எமது நல்லாசிகளையும் தெரிவித்துக் கொள்கின்றோம்.

**சிவனேசன் மாமா, வெண்ணிலா அத்தை குடும்பம்.**

மில் ஒழுங்கை.
உரும்பிராய் தெற்கு. உரும்பிராய்.

(36993)

---

## நாளை நாடக விழா

✲ பாரம்பரிய கலைகள் மேம்பாட்டுக் கழகச் செயலாளர்
**கலாபூசணம் செல்லையா மெற்றாஸ்மயிலின்**
நெறியாள்கையில் உருவான
### "வேழம்படுத்த வீராங்கனை"
(ஆட்ட நாட்டுக்கூத்து)
37 ஆவது மேடை

✲ பாரம்பரிய கலைகள் மேம்பாட்டுக் கழகமும்
நாட்டார் வழக்கியல் கழகமும் இணைந்து,
முன்னணிக் கலைஞர்கள் வழங்கும்
### "பவளக்கொடி"
(இசை நாடகம்)
முதல்மேடை

இடம் : தும்பளை நெல்லண்டைப் பத்திரகாளி அம்பாள் தேவஸ்தானம்
காலம் : 01.10.2004 வெள்ளிக்கிழமை
இரவு 9.00 மணி

*அனைவரையும் அன்புடன் சமூகம் தந்து இலவசமாகப் பார்த்து, அம்பாளின் அனுக்கிரகத்தைப் பெற்றுய்யுமாறு அழைக்கிறோம்.*

**தம்பு இராசா**
(அம்பாள் நேர்த்திகடனாளர்)
பருத்தித்துறை.

(36965)(39-12-42-15)

---

## மக்கள் வங்கி அறிவித்தல்

மக்கள் வங்கியின் யாழ்.பிரதான வீதி, நெல்லியடிக் கிளைகளில் 30-06-2003இற்கு முன்பு அடகு வைத்து இதுவரை மீட்கப்படாத நகைகள் 02.10.2004 ஆம் திகதியில் யா/ஸ்ரான்லி வீதி மக்கள் வங்கிக் கிளையில் வைத்துப் பகிரங்க ஏலத்தில் விற்கப்படும்.

| தொடர் இல. | கிளை | பின்வரும் திகதிகளுக்கு முன்பு அடகு வைத்த நகைகள் | ஏலம் விடப்படும் திகதி | இடம் |
|---|---|---|---|---|
| 1 | யாழ். பிரதான வீதி 104 | 30. 06. 2003 | 02. 10. 2004 | மக்கள் வங்கி ஸ்ரான்லி வீதி |
| 2 | நெல்லியடி - 106 | 30. 06. 2003 | | |

அறிவித்தலின்றி திகதியை ஒத்திப்போடும் உரிமை வங்கிக்கு உள்ளது.

**பிராந்திய முகாமையாளர்,**
**யாழ்ப்பாணம்/வன்னி.**

**மக்கள் வங்கி**
**பிரதேச காரியாலயம்**
**(வட வலயம்)**
**கன்னாதிட்டி வீதி,**
**யாழ்ப்பாணம்.**

(C/37879)(42-12-15)

---





License No : 50445
BS No : 5412:1996
License No : KM41240

முதன் முறையாக
தொழிற்சாலையின்
5 வருட உத்தரவாதம்

ஏக முகவர்கள்:
சென்ற் அந்தனிஸ் ஹார்ட்வெயார் (பிரைவேட்) லிமிட்டட்
516, ஸ்ரீ சங்கராஜ மாவத்தை, கொழும்பு 10.
தொலைபேசி: 2324261-5, 2337283-5
பெக்ஸ்: 2446554

WATERTEC
Simply Better
முத்திரையை அவதானியுங்கள்

Access Graphics

விநியோகஸ்தர்:
நாராயணா கட்டிடப்பொருட்கள் வர்த்தகர், 95/1, ஸ்ரான்லி வீதி, யாழ்ப்பாணம்.


---

வரையறுத்த **HNB** பங்குதரகர் (தனியார்) நிறுவனமும்
**HNB** வங்கியும் இணைந்து நடத்தும்
## மாபெரும் பங்குச்சந்தை பற்றிய கருத்தரங்கு

திகதி : **October 01** வெள்ளிக்கிழமை
காலம் : 3.00 மணி (பிற்பகல்)
இடம் : **யாழ்ப்பாணம் வணிகர் கழகம், மானிப்பாய் வீதி, யாழ்ப்பாணம்.**

வரவேற்புரை: **செ.வசந்தகுமார்**
(முதலீட்டு ஆலோசகர்/பங்குத்தரகர் HNB பங்குத்தரகர் நிறுவனம்)

நுகர்வோர் வங்கிச்சேவை:
**பிறேமராஜா**
(சிரேஷ்ர முகாமையாளர் நுகர்வோர் வங்கிப்பிரிவு)

பங்குச்சந்தை பற்றிய அறிமுகம்:
**ஷிவானி திருஞானசம்பந்தன்**
(முகாமையாளர் கொழும்பு பங்குச்சந்தை யாழ்.கிளை)

முதலீட்டு தீர்மானங்களை எவ்வாறு மேற்கொள்வது:
**ஹசித்த பிறேமரட்ணே**
(முகாமையாளர் ஆராய்ச்சி, HNB பங்குத்தரகர் நிறுவனம்)

வினாநேரம்:

நன்றியுரை: **விராச் மாலவென**
(உதவி முகாமையாளர் - வியாபார அபிவிருத்தி HNB பங்குத்தரகர் நிறுவனம்)

*அனைவரையும் அன்புடன் அழைக்கின்றோம்.*

(C/37900)(42-21-19-46)

---

## கண்ணீர் அஞ்சலி



சுன்னாகம் ப.நோ.கூ.சங்கத் தலைவரும்
யாழ்.மாவட்ட கூ.கிராமிய வங்கியின்
சமாசத் தலைவருமான
**திரு.குமரவேல்**
*அவர்களின் அன்புத் துணைவியார்*
**திருமதி திலகவதி குமரவேல்**

அவர்களின் திடீர்மறைவினால் துயருற்றிருக்கும் அவரது குடும்பத்தாருக்கு எமது ஆழ்ந்த அனுதாபங்களையும் துயரத்தையும் தெரிவிப்பதோடு, அன்னாரின் ஆத்மா சாந்தியடைய ஆண்டவனை வேண்டி நிற்கின்றோம்

மக்கள் வங்கி,
சுன்னாகம்.

(36990)(46-19-21)

**முகாமையாளரும்,**
**ஊழியர்களும்.**

---

## எட்டாம் ஆண்டு நினைவு அஞ்சலி

மண்ணில்
07 - 02 - 1973



விண்ணில்
30 - 09 - 1996

அமரர்
**சண்முகநாதன் சிவகுமார் (வெள்ளை)**

சிவகுமாரா!...
ஆண்டுகள் எட்டு ஆனதையா
ஆறவில்லை எம் துயர்
எம் உயிர் உள்ளவரை நாம்
உம் திருமுகம் மறவோம்.

சபாபதிப்பிள்ளை வீதி,
உடுவில் கிழக்கு,
சுன்னாகம்.

(36998)(21-19-17)

உன் பிரிவால் வாடும்:
அம்மா, அக்கா,
அத்தான், தங்கைமார்,
மச்சான், மருமக்கள்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# எமது சருமம்....

**எமது பிரதேசத்தில் பொதுவாக ஏற்படும் தோல் நோய்கள் தொடர்பாகத் தெளிவான அடிப்படை அறிவை ஓரளவேனும் வழங்கக் கூடிய வகையில் யாழ். பல்கலைக்கழக மருத்துவபீட மாணவன் எஸ்.கஜேந்திரன் 'எமது சருமம்' என்னும் தலைப்பில் வரையும் கட்டுரையின் மூன்றாவது பகுதி இது.**

### சிகிச்சை முறை

தோல் வைத்தியர் ஒருவரின் ஆலோசனைப படி சிகிச்சை பெறல் வேண்டும்.

ஏனெனில், ஒருவருக்குச் சிரங்கு ஏற்பட்டுள்ளதா என்பதனை வைத்தியர் ஒருவரினாலேயே





உறுதிப்படுத்தமுடியும். உடலில் கடி (itchy) உள்ள வேறு பல தோல் நோய்களும் உள்ளன. எனவே, முதலில் தகுந்த வைத்திய ஆலோசனை பெறுதல் அவசியம். இங்கு நோயாளி ஒருவரின் கொப்புளத்தில் இருந்து வேறாக்கப்படும் பகுதி (சுரப்பு) நுணுக்குக் காட்டி



'சொறாசிஸ்' நோய் ஏற்பட்டுள்ள ஒருவரின் முழங்கால் பகுதி படத்தில் காட்டப்பட்டுள்ளது. வெள்ளிறமான உதிருகின்ற படையினைக் கொண்ட பகுதிகளை இங்கே அவதானிக்கலாம்.

யின் ஊடாக அவதானிக்கப்பட்டு நோயாக்கி இருப்பது உறுதிப்படுத்தப்பட்டால் அவருக்குச் சிரங்கு இருப்பது கண்டறியப்படும்.

சிரங்குச் சிகிச்சையில் பயன்படும் கிறீம், அது பயன்படுத்தல் முறை போன்றவற்றில் பல சந்தேகங்கள் மக்கள் மத்தியில் உள்ளதால் அவை பற்றி விரிவாகப் பார்ப்போம்.




முதலாவதாக, வயது வந்தவர்களுக்குச் சிபார்சு செய்யப்படும் கிறீம் வகைகள் சிறுவர்களுக்கு ஏற்றதாக இருப்பது இல்லை. எனவே, அவை சிறுவர்களில் அரிப்பினை ஏற்படுத்த [illegible]தனால் வைத்தியரின் சிபார்சு செய்[illegible] கிறீம் வகைகளே ஏற்றவை.

[illegible]ம் பயன்படுத்தும்போது கடைப்பிடிக்க [illegible]யவை:-

1. [illegible]தலில் மிகுந்த [illegible] சவர்க்காரம் இட்டு இளம் வெந்நீரில் குளி[illegible]. இது சிகிச்சையின் சாதகத்தன்மையை அதிகரிக்கும்.

2. கிறீமைக் கழுத்தில் இருந்து கால் வரை நன்றாகப் பிரயோகிக்கவும்.

3. கிறீமைப் பிரயோகித்து 48 மணிநேரம் வரை கழுவி அகற்றாது [illegible] மிக மிக அவசியம்.

4. 48 மணிநேரத்தின் பின்னர் குளித்தல் வேண்டும். அத்துடன், நோயாளி [illegible]ிய ஆடைகள் படுக்கை விரிப்புகள் என்பவற்றை வெந்நீரில் துவைத்து சுத்தம் செய்யவேண்டும். (அதாவது, இன்று காலை 6 மணிக்கு B.B. கிறீம் பூசினால், நாளைமறுதினம் 8 மணிக்கே குளித்தல் வேண்டும்)

குறிப்பு: 1. சில கிறீம் வகைகள் பிரயோகித்து 24 மணி நேரம் சென்ற பின்பு குளிக்கலாம். (அதாவது, இன்று காலை 8 மணிக்குக் கிறீம் பூசினால் நாளை காலை 8 மணிக்குக் குளிக்கலாம்) எனவே, கிறீமின் வகையைத் தெளிவாக அறிதல் வேண்டும்.

### சொறாசிஸ்

உலக மக்கள் தொகையில் 2-3 வீதமானோர் சொறாசிஸ் நோயினால் பாதிக்கப்பட்டுள்ளனர். இந்நோய் ஒப்பீட்டளவில் எதுவித பாரிய பின் விளைவுகளையும் ஏற்படுத்தாவிடினும் அருவருப்பான தோற்றத்தை ஏற்படுத்தும். இதனால் ஒருவர் சமுதாயத்தில் இருந்து தானாக ஒதுங்க முயற்சிப்பதாலும், ஏனையோரால் புறக்கணிக்கப்படுவதனாலும் தனிமைப்படுத்தப்படுகின்றார். இதன் இறுதி விளைவாக ஒருவரின் மனநிலை பாதிப்பு, தாழ்வு மனப்பான்மை போன்றவை ஏற்படும் வாய்ப்புக்கள் உள்ளன. இந்நோய் ஒருவரில் இருந்து இன்னுமொருவருக்குத் தொற்றாது. எனவே, நாம் நோய் ஏற்பட்டவரைப் புறக்கணிக்காது அவருடன் சகஜமாகப் பழக வேண்டும். இது அவரின் மன உறுதியை அதிகரிப்பதுடன், நோய் குணமாவதனையும் துரிதப்படுத்தும். ஏனெனில், மன அழுத்தம், மன அமைதியின்மை போன்றன இந்நோயின் தாக்கத்தை அதிகரிக்கும்.

### நோய் தோன்றுவதற்கான விளக்கம்

இந்நோய் ஏற்படுவதற்கான காரணம் இது வரையில் முழுமையாகக் கண்டறியப்படவில்லை. எனினும், பரம்பரைத் தாக்கத்தின் காரணமாகவே இந்நோய் உருவாகுவதாக அறியப்பட்டுள்ளது. தாய் அல்லது தந்தைக்கு இந்நோய் இருப்பின் அவர்களின் குழந்தைக்குச் சொறாசிஸ்நோய் வருவதற்கான சந்தர்ப்பம் 16% ஆகக் காணப்படும். அதேசமயம், இருவருக்குமே நோய் இருப்பின் அவர்களின் குழந்தைக்கு நோய் வர 50% சந்தர்ப்பம் உள்ளதாகவும் கண்டறியப்பட்டுள்ளது.

இந்நோய் ஏற்பட்ட ஒருவரின் தோல் பின்வரும் மாற்றங்களுக்கு உள்ளாகின்றது.

1. தோலினை நாடி T வகை நிணநீர் குழியங்கள் வருகின்றன.
2. தோலின் மேற்தோற்படை அதிகளவில் தடிப்படைகின்றது.
3. கெரற்றின் படையில் வழமைக்கு மாறாகக் கருக்களைக் கொண்ட கலங்கள் தோன்றும். (வேகமான கலப் பிரிவினால்)
4. தோலின் கீழே தோலின் ஆழமான பகுதியில் காணப்படும் குருதிக்கலன்கள் விரிவடைந்து முறுக்கமடையும்.

இந்நோய் பரம்பரைத் தாக்கம் காரணமாக ஏற்படுகின்றது. எனினும், இவ்வாறு நோய வருவதற்குச் சாத்தியமான நபர்களில் சில காரணிகள் நோய் ஏற்படுவதினைத் துரிதப் படுத்துகின்றன. மேலும் நோய் ஏற்பட்டவர்களில் நோயின் தாக்கத்தினை அதிகரிக்கின்றன. அவ்வாறான சிலகாரணிகள் வருமாறு:-

- ✦ காயங்கள்
- ✦ சிலவகை மருந்துகள்
- ✦ மன அழுத்தம் etc: B-Blockers antimalarials.
- ✦ மன நிலைக் குழப்பங்களும் மன அமைதியின்மையும்.
- ✦ புகைத்தல், மதுபானம் அருந்துதல்.
- ✦ ஓமோன்களின் சமநிலைக் குழப்பம்.
- ✦ நுண்ணங்கித் தொற்று.

இந்நோய் ஒருவரில் குறித்தகால இடைவெளியில் மீண்டும் மீண்டும் ஏற்படுகின்றது. இக்கால இடைவெளி நோயாளருக்கு நோயாளர் வேறுபடுகின்றது. சில நோயாளரில் சில மாதங்களுக்கு ஒருதடவையும் வேறு சிலரில் சிலவருடங்களுக்கு ஒருதடவையும் இந்நோயின் தாக்கம் ஏற்படுகின்றது. இந்நோயின் தாக்கத்தைத் தூண்டும் காரணிகளினால் வழமைக்கு மாறாகக் குறுகியகால இடைவெளியிலேயே இந்நோய் மீண்டும் ஏற்படவாய்ப்புண்டு.

### நோயின் குணங்குறிகள்

இந்நோய் முழங்கை, முழங்கால், தலைப் பகுதி, முதுகுப்புறம் போன்ற பகுதிகளிலேயே அதிகமாக ஏற்படுவது அவதானிக்கப்பட்டுள்

**சண்முகசுந்தரம் கஜேந்திரன்**
**4ஆம் வருட மாணவன்,**
**மருத்துவபீடம்,**
**யாழ். பல்கலைக்கழகம்.**

ளது. இங்கு தோலில் வரையறுக்கப்பட்ட திட்டுத்திட்டுக்களான பகுதிகளைக் காணலாம். அவை இளஞ்சிவப்பு நிறத்தில் காணப்படுவதுடன், வெள்ளிபோன்ற மினுக்கமுடைய செதில்களால் மூடப்பட்டிருக்கும். இவை மேற்றோலின் அதிகரித்த கலப்பிரிவினால் உருவானவையாகும். இவற்றை உரஞ்சும்போது அவை இலகுவாக உதிர்கின்றன. எனினும், குறுகிய நேர இடைவெளியில் மீண்டும் அவை உருவாகி விடுவது இந்நோயின் சிறப்பியல்பாகும். தோலில் கடி, எரிவு போன்றவற்றையும் இந்நோய் ஏற்படுத்தலாம்.

### சிகிச்சைமுறை:


இந்நோய் பாரிய பின்விளைவுகளை ஏற்படுத்தாவிடினும் ஒருவரில் அருவருப்பான தோற்றத்தை ஏற்படுத்தும். மேலும் எரிவு, நோ போன்றவற்றையும் ஏற்படுத்தலாம். அத்துடன், கைகள் போன்ற குறித்த சில இடங்களில் ஏற்படும் நோய் ஒருவரின் வேலை செய்யும்




நமது தோலினை பாதிக்கும் சில காரணிகள்

திறனைக் குறைக்கும். இதனால், இந்நோய்க்கு உடனடிச் சிகிச்சைபெறுதல் அவசியம்.

இந்நோய்க்குச் சிகிச்சை அளிக்கும்போது பலவிடயங்கள் கவனத்தில் கொள்ளப்படுகின்றன. நோய்த்தாக்கத்தின் அளவு, பருவகாலப் பிரச்சினைகள், நோயாளரின் சமூகநிலை போன்றன அவற்றுள் சிலவாகும். இந்நோய்களுக்குச் சிகிச்சைமுறையில் Coaltar, Dithranol போன்றவை பயன்படுத்தப்படுகின்றன. எனினும், இவை சில நோயாளரில் பல பக்கவிளைவுகளை ஏற்படுத்தலாம். தற்போது 'சொறாசிஸ்' நோய்க்காகப் பயன்படுத்தப்படும் சிகிச்சை Puva Theraphy எனப்படுகின்றது.



'சொறாசிஸ் நோய் ஏற்பட்ட ஒருவரின் முதுகுப் புறத்தினைப் படத்தில் காண்கின்றீர்கள். இங்கு செதில்போன்று உதிரும் திட்டுதிட்டான பகுதிகளை அவதானிக்கலாம்.

Puva சிகிச்சைமுறையில் Psoralen எனும் மருந்து நோயாளர் வாய்மூலம் உட்கொள்ளக் கொடுக்கப்படுகின்றது (வழமையாகக் காலை 9 மணி). சுமார் இரண்டு மணி நேரங்களின் பின்பு நோயாளர் வெய்யிலில் நிறுத்தப்படுவார்.(11 மணி அளவில் அதிகளவு புற ஊதா கதிர்கள் புவியை வந்தடையும்). இங்கு மருந்து உட்கொண்டு இரண்டு மணி நேரத்தின் பின்பு அது குருதிச்சுற்றோட்டத் தொகுதியின் ஊடாகக் காவப்பட்டுத் தோலினை வந்தடையும். நோயாளி சூரிய ஒளியில் நிறுத்தப்படும்போது புற ஊதாக் கதிர்கள் தோலில் விழுகின்றன. இக்கதிர் முன்னிலையில் psoralin மருந்து நியூகிளிக் அமிலங்களுடன் இணையும். இது கலம் பிரிவடைவதனைத் தடுக்கும். அதிகமாகக் கலம் பிரிவடைவதே இந்நோய் உருவாகக் காரணம். எனவே, நோய் ஏற்படுவது தவிர்க்கப்படும். **(வளரும்)**

## ஆரோக்கியமாக வாழ்வதற்கு சில வழிமுறைகள் இதோ!

- அதிகாலை விழித்து நன்மைகள் நினைப்போம்.
- பற்களை நன்றாகச் சுத்தமாகப் பேணுவோம்.
- யோகப்பியாசம், தேகப்பயிற்சிகள் செய்வோம்.
- இயற்கைக் கடன்களைக் கிரமமாய்க் கழிப்போம்.
- காலையில் குளிப்பதை வழக்கப்படுத்துவோம்.
- சுட்டாறிய நீரினை நிறையவே அருந்துவோம்.
- நகங்களை வெட்டிச் சுத்தமாக வைத்திருப்போம்.
- உண்ணமுன் கைகளை நன்றாகச் சவர்க்காரம் போட்டுக் கழுவுவோம்.
- அடிக்கடி உண்ணும் பழக்கத்தினைத் தவிர்த்துக்கொள்ளுவோம்.
- புரதச் சத்துக்கள், விற்றமின் போன்ற சத்துள்ள இயற்கை உணவுகளை உண்போம்.
- இலைக்கஞ்சி, தானியம் காலை உணவாகக் கொள்வோம்.
- உண்டபின் சிறுநேரம் ஓய்வு எடுப்போம்.
- பகலில் உறக்கத்தினைத் தவிர்ப்போம்.
- மாலையில் நன்கு வியர்வை சிந்த விளையாடுவோம், நடப்போம்.
- மாலையில் நன்றாக ஆறிய பின் உடலைக் கழுவுவோம்.
- சூடான நல் உணவை இரவில் உண்போம்.
- இரவில் அரைவயிறு உணவும் மிகுதி நீரும் தினமும் பழக்கத்தில் வழக்கப்படுத்திக் கொள்ளுவோம்.
- இரவில் உண்டபின் பழங்கள் உண்போம்.
- உண்டபின் உடன் உறங்குவதைத் தவிர்ப்போம்.
- உண்டபின் சிறிது நேரம் உலாவி உறங்குவோம்.
- உறங்க முன் தியானத்தில் மன அழுத்தத்தினைப் போக்குவோம்.
- மீள் வலுப்பெற்றிட நல்லுறக்கத்தினை மேற்கொள்ளுவோம்.
- இரத்தச் சோகையில் இருந்து நம்மைப் பாதுகாத்துக் கொள்வோம்.
- தொற்று நோய் பரவாமல் எமது சூழல், சுற்றாடலைப் பாதுகாத்துக் கொள்ளுவோம்.
- மலேரியா, டெங்கு நோய் பரப்பும் நுளம்பில் இருந்து சூழலைப் பாதுகாத்துக் கொள்ளுவோம்.
- எமது உயரத்துக்கு ஏற்றமாதிரி உடல் நிறையைச் சீர்செய்து கொள்வோம்.
- கலாசாரச் சீரழிவை ஏற்படுத்தும் செயலில் இருந்தும், பாலியல் நோயில் இருந்தும் தப்பித்துக் கொள்வோம்.
- இரத்த அழுத்தம், நீரிழிவுநோய், கொழுப்பு நோய் ஏற்படின் வைத்திய ஆலோசனைப்படி நடப்போம்.
- முதலுதவிப் பயிற்சியினைப் பெற்றுக் கொள்ளுவோம்.
- [illegible]ஏனும் செல்வதை நம்மிடம் [illegible].
- [illegible] வளர்த்து [illegible] செய்வதைத் தவிர்ப்போம்.
- புகைத்தல் [illegible] மாட்டோம்.
- நம்பிக்கையதனை மனதிற்கொள்வோம்.
- நிம்[illegible] பண்பினை வளர்ப்போம்.
- செய்யும் தொழிலே தெய்வமாகக் கொள்வோம்.
- உண்மையே பேசுவோம்.
- நோய் வருமுன் காப்போம்.

**செ.செல்வரட்ணம்**
பதவிநிலை தொழில்நுட்ப உத்தியோகத்தர்,
யாழ் பல்கலைக்கழகம்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# கல்விப் பொதுத்தராதரப்பத்திர (சாதாரணதரம்)

# மாதிரிப்பரீட்சை - 2004 சமூகக்கல்வியும் வரலாறும்- விடைகள்

## பகுதி I

### புள்ளி வழங்கும் திட்டம்

| வினா இல. | விடை இல. | வினா இல. | விடை இல. | வினா இல. | விடை இல. | வினா இல. | விடை இல. |
|---|---|---|---|---|---|---|---|
| 1 | 4 | 11 | 3 | 21 | 3 | 31 | 1 |
| 2 | 3 | 12 | 2 | 22 | 4 | 32 | 2 |
| 3 | 2 | 13 | 1 | 23 | 4 | 33 | 3 |
| 4 | 1 | 14 | 4 | 24 | 3 | 34 | 4 |
| 5 | 1 | 15 | 2 | 25 | 2 | 35 | 4 |
| 6 | 2 | 16 | 1 | 26 | 1 | 36 | 3 |
| 7 | 3 | 17 | 4 | 27 | 4 | 37 | 2 |
| 8 | 4 | 18 | 3 | 28 | 4 | 38 | 1 |
| 9 | 3 | 19 | 1 | 29 | 2 | 39 | 3 |
| 10 | 2 | 20 | 2 | 30 | 1 | 40 | 2 |

(2x40=80 புள்ளிகள்)

## பகுதி II


**வினா எண் 01**

(1). (அ)

(I) பொருத்தமான இடங்களில் இலக்கம் குறிப்பிடப்பட்டிருந்தால் புள்ளி வழங்குக. (1x6=06 புள்ளிகள்)

(II) பொருத்தமான இடத்தில் நிறம் தீட்டியிருந்தால் புள்ளி வழங்குக. (1x2=02 புள்ளிகள்)

(III) பொருத்தமான இடங்களில் நிறந்தீட்டியிருப்பதோடு அம்சங்களும் குறிப்பிடப்பட்டிருந்தால் புள்ளி வழங்குக. (1x3=03 புள்ளிகள்)

(IV) A - மேற்குத் திசை (01 புள்ளிகள்)
B- தேயிலைப் பயிர்ச்செய்கை (02 புள்ளிகள்)
C -  (02 புள்ளிகள்)
D - வகைக்குறிப்பு பின்ன அளவுத்திட்டம் (02 புள்ளிகள்)
(மொத்தப் புள்ளிகள் 6+2+3+1+2+2+2=18)

(ஆ) (I). (1) திரு.F.R. சேனநாயக்கா (2) பிரித்தானியா
(3) திரு.சேர் பொன்.இராமநாதன் (4) திரு. E.A. குணசிங்க (1x4=04 புள்ளிகள்)

(II). (1) 2ஆம் இராஜசிங்கன் (2) 1658 (3) 2ஆம் விமலதர்மசூரியன் (1x3=03புள்ளிகள்)

(III). (1) அமெரிக்க சுதந்திரப் போராட்டம் /புரட்சி
(2) உரோமபுரியில் (3) ஜே.ஆர். ஜெயவர்த்தன (4) செட்னா
(5) 1931 ஆம் ஆண்டு டொனமூர் அரசியல் யாப்பு
(1x5=05 புள்ளிகள்)
(மொத்தப் புள்ளிகள் 4+3+5=12)

**வினா எண் 02**

I. பிறப்பு, இறப்பு, இடப்பெயர்வு (3 புள்ளிகள்)

II. ★ துரித வேகத்தில் பெருகும் சனத்தொகை
★ உலகில் உற்பத்தி செய்யப்படும் உணவு உகந்தமுறையில் பங்கீடு செய்யப்படாமை.
★ உணவுப் பொருள்களில் கிடைக்கும் உச்சப் பயனைப் பெறாமை.
★ போதியளவு அறுவடை கிடைக்காமை.
★ உணவுப் பொருள்கள் வீணாகுதல்.
★ இயற்கை அழிவுகள்.
★ நாடுகளின் வர்த்தகக் கொள்கைகளும் விலை மட்டங்களும்
(1x4=04 புள்ளிகள்)

III. திருமணம் செய்தல், குழந்தைகளைப் பராமரித்தல்.
போசனை மட்டம், உடல் வலிமை.
ஓய்வுபெறல், பொழுதுபோக்குகளில் ஈடுபடல்.
கல்வியைப் பெறல், மரபுகள் சம்பிரதாயங்களைப் பேணல்
தீர்மானம் எடுத்தல்.
(3 காரணிகளுக்கு 3 புள்ளிகள் விளக்கத்திற்கு 2 புள்ளிகள் (5 புள்ளிகள்)

IV. ★ உலகில் விவசாயம் செய்யும் நிலப்பரப்பை அதிகரித்தல்
★ விவசாயம் செய்யும் நிலப்பரப்பில் உச்சப்பயன்பாட்டைப் பெறுதல்
★ நீர் கிடைக்காத பிரதேசங்களுக்கு நீர் பெறும் முறைகளை மேற்கொள்ளுதல்
★ கடலின் உவர்த்தன்மையை நீக்கி விவசாயத்துக்குப் பயன்படுத்துதல்
★ அதிக விளைச்சல்தரும் வகைத் தானியங்களைப் பயன்படுத்துதல்
★ விவசாய நெல் ஆராய்ச்சி வகைகளை மேற்கொள்ளல்
★ உணவுத் தானியங்களை உரிய முறையில் களஞ்சியப்படுத்தல்
(3 காரணங்களுக்கு 3 புள்ளிகள், விளக்கத்துக்கு 3 புள்ளிகள் (6புள்ளிகள்)
மொத்தப் புள்ளிகள் 3+4+5+6 =18 புள்ளிகள்)

**வினா எண் 03**

I. ஒரு நாடு ஏற்றுமதி செய்வதன் மூலம் பெறும் வருமானத்துக்கும் இறக்குமதி செய்வதால் ஏற்படும் செலவுக்கும் இடையே உள்ள வேறுபாடு வர்த்தக நிலுவை எனப்படும். (3 புள்ளிகள்)

II. வளங்கள் அசமநிலையில் பரம்பிக் காணப்படுவதால்
★ உலகின் எல்லா நாடுகளிடம் எல்லாப் பொருள்களிலும் தன்னிறைவு அடையாமை.
★ பொருள்கள் மிகையாக இருக்கும் நாடுகளும் இருந்து குறைவாக உள்ள நாடுகளுக்கு வழங்குதல்.
★ சில பொருள்களை உற்பத்தி செய்வதைவிடக் குறைந்த விலையில் இறக்குமதி செய்யலாம்.
★ தொழில்நுட்ப நிபுணத்துவ அறிவு எல்லா நாடுகளிலும் ஒரே அளவாக இல்லை. (1x4=4 புள்ளிகள்)

III. ★ முன்னேற்றம் அடைந்த நவீன தொழில் நுட்ப நிபுணத்துவ முறைகளை அபிவிருத்தி அடைந்த நாடுகளில் இருந்து பெற்றுக்கொள்வதன் மூலம் கைத்தொழில் விவசாயத் துறைகளை முன்னேற்ற முடிகிறது.
★ சுகாதாரம், கல்வி, போக்குவரத்து, செய்தித்தொடர்பு ஆகிய அடிப்படைத் தேவைகள் முன்னேற்றிக் கொள்ளமுடிதல்.
★ முன்னேறிய நாடுகளில் இருந்து தொழில்நுட்ப நிபுணத்துவ சேவைகளை இலகுவாகப் பெற முடிகின்றமை.
3 காரணங்களுக்கு 3 புள்ளிகள் விளக்கத்துக்கு 2 புள்ளிகள் (5 புள்ளிகள்)

IV. ★ ஐக்கிய நாடுகளின் வர்த்தகத்துக்கும் அபிவிருத்திக்குமான மாநாடு (உஸ்ராட்-UNCTAD)
★ வர்த்தகத்துக்கும் தீர்வைக்குமான பொது உடன்படிக்கை (கற்று - GATT)
★ உலக வர்த்தக நிறுவனம் (WTO)
★ ஐரோப்பிய பொதுச்சந்தை
(மூன்று நிறுவனத்துக்கும் 3 புள்ளிகள் விளக்கத்திற்கு 3 புள்ளிகள் (6புள்ளிகள்)
மொத்தப் புள்ளி 3+4+5+6=18 புள்ளிகள்)

**வினா எண் 04**

I. ★ ஒரு நாட்டின் பொருளாதர அபிவிருத்தியுடன் சமூக அபிவிருத்தியும் உண்டாதல் வேண்டும். சமூகம்.அபிவிருத்தியானது உணவு, போசனை சுகாதாரம், கல்வி, வீடு, சமூக பாதுகாப்புகள், ஆடை, அணிகலன்கள், ஓய்வு, மனித சுதந்திரம் ஆகிய துறைகளில் ஏற்படவேண்டும் (யுனெஸ்கோ)
★ குறிப்பிட்ட ஒரு நாட்டின் வறுமை வருமான ஏற்றத்தாழ்வுகள், வேலையின்மை போன்ற துறைகளை உயர்ந்த மட்டத்தில் இருந்து தாழ்ந்த மட்டம் வரை கொண்டு வரல் அபிவிருத்தி ஆகும்.
★ அபிவிருத்தி என்பது மனிதனின் வாழ்க்கை நாள்களில் விருத்திகளை அபிவிருத்திக்கான அடிப்படைத் தேவைகள் மாத்திரமன்றி சுகாதாரம் போஷணை, கல்வி வேலைவாய்ப்புகள், சமூக பாதுகாப்புகள், மனித சுதந்திரம், பொழுதுபோக்கு வசதிகள், ஜனநாயக உரிமைகள், கலாசாரம் ஆகிய பல்துறைகளிலும் ஏற்படும் விருத்தியாகும். அபிவிருத்தி எனவும் கூறலாம். (பொதுவான கருத்து)
(மேற்கூறப்பட்ட கருத்து ஏதாவது ஒன்று எழுதப்பட்டால் 3 புள்ளிகள் வழங்குக)

II. A - சூழல் மாசடைதல் B - ஆள்வீத வருமானம் குறைவு
C- வளங்களை சிறந்த முறையில் பயன்படுத்தாமை
D- விவசாயத்துறையில் பெருமளவான மக்கள் ஈடுபட்டு இருத்தல்
E - சனத்தொகை வளர்ச்சி வீதம் உயர்வாக இருத்தல்
(1x4= 4 புள்ளிகள்)

III. **நவீன அளவீடு** / **மரபுவழி அளவீடுகள்**
A- பௌதீக வாழ்க்கைத் தரச்சுட்டி — A - ஆள்வீத தேசிய உற்பத்தி
B - மனித அபிவிருத்திச் சுட்டி — B - ஆள்வீத தேசிய உற்பத்தி விருத்தி வேகம்
C - மனித சுதந்திரச் சுட்டி — C - ஒரு நாட்டின் சென்மதி நிலுவையின் தன்மை
D - போஷாக்கு மட்டத்தோடு தொடர்புடைய அளவீடு
E - சுகாதாரம் சனத்தொகை சம்பந்தமான அளவீடுகள்
F - கல்வியோடு தொடர்புடைய அளவீடுகள்
G - பொது வசதி சம்பந்தமான அளவீடு
(1x5= 05 புள்ளிகள்)

IV. A - தன்னிறைவுப் பொருளாதாரம் வீழ்ச்சி அடைந்து ஏற்றுமதி, இறக்குமதி பொருளாதாரம் விருத்தியடைந்தமை
B - மூலதனப் பற்றாக்குறை
C - தொழில் நுட்பப் பற்றாக்குறை
D - சாதகமற்ற வர்த்தக நிலுவை காணப்படல்
E - அதிகரித்து வரும் வேலையற்றோர் தொகை
F - அரசியல் அமைதியற்ற சூழ்நிலை காணப்படல்
(காரணிகளுக்கு 3 புள்ளிகள் விளக்கத்திற்கு 3 புள்ளிகள் (6புள்ளிகள்)
(மொத்தம் 3+4+5+6=18 புள்ளிகள்)

**வினா எண் 05**

I. சர்வஜன வாக்குரிமை (3புள்ளிகள்)

II. ★ உள்ளூர் ஆட்சித் தேர்தல் (பிரதேச சபை, நகரசபை, மாநகரசபை)
★ மாகாண சபைத் தேர்தல்
★ பாராளுமன்றத் தேர்தல்
★ ஜனாதிபதித் தேர்தல் (1x4 =4 புள்ளிகள்)

III. ★ புத்திசாலித்தனத்துடன் பிரதிநிதிகளைத் தேர்ந்தெடுத்தல்
★ கட்சிக் கொள்கைகளை நன்கு விளங்கி வாக்களித்தல்
★ வேட்பாளரின் செல்வாக்கு உட்படாது வாக்களித்தல்
★ சுதந்திரமாக வாக்களித்தல்
★ தமது வாக்களிக்கும் உரிமையை முறையாகப் பயன்படுத்துதல்
★ மற்றவர்களின் வாக்குகளைப் பயன்படுத்தாது இருத்தல்.
( 2 காரணத்துக்கு இரண்டு புள்ளிகள் விளக்கத்திற்கு 3 புள்ளிகள் (5 புள்ளிகள்)

IV. ★ தொடர்புசாதனங்கள் நீதியாகவும், சுதந்திரமாகவும் பணியாற்றவேண்டும்.
★ பக்கச்சார்பற்ற முறையில் செயற்படுதல் வேண்டும்.
★ உண்மையான செய்திகளை மக்களுக்கு வழங்கவேண்டும்.
★ இனமத முரண்பாடுகளற்றதாக வெளியிடவேண்டும்.
★ தொடர்புசாதனங்கள் ஆக்கபூர்வமான விமர்சனங்களைச் செய்தல்வேண்டும்.
(6 புள்ளிகள்) (3+4+5+6= 18 புள்ளிகள்).

**வினா எண் 06**

I. ★ தெற்காசிய பிராந்திய ஒத்துழைப்பு அமையம் (சார்க்)
★ ஒபெக் ஸ்தாபனம் ★ அணிசேரா நாடுகளின் அமையம்
★ பொதுநலவாயம் ★ வட அத்திலாந்திக் ஒப்பந்தம் (நேட்டோ)
★ ஆசியான் (1x3=3 புள்ளிகள்)

II. ★ தெற்காசிய நாடுகளில் வாழும் மக்களின் வாழ்க்கைத் தரத்தை மேம்படுத்தல்
★ பொருளாதாரத்தில் துரித வளர்ச்சி காண்பதுடன் சமூக முன்னேற்றத்திற்கு பிராந்திய கலாசாரத்தைப் பாதுகாத்தல்
★ தெற்காசிய நாடுகள் கூட்டாகச் சேர்ந்து பிராந்திய பாதுகாப்பைப் பலப்படுத்துதல்
★ தெற்காசிய நாடுகள் தனது பிரச்சினைகளுக்குப் புரிந்துணர்வுடனும் நம்பிக்கையுடனும் தீர்வுகாணல்
★ விஞ்ஞானம் தொழில்நுட்பம், கலை, கலாசாரம், மொழி, பொருளாதாரம் இயற்கை வளம் என்பவற்றில் கூட்டாக இணைந்து பரஸ்பரம் உதவி நல்குதல்
★ சர்வதேச பொது நியாயத் தீர்வுகளில் கூட்டாக முடிவெடுத்து அதற்குரிய ஆதரவு அளித்தல் (1x4= 4 புள்ளிகள்)

III. a. i. பங்களாதேஷ் b. ii. வனப் பாதுகாப்புத் திட்டம்
c. iii. பிஜித் தீவுகள் iv. மண் ஆராய்ச்சித் திட்டம்
d. v. கனடா (1x5= 5புள்ளிகள்)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

IV. நோக்கங்கள்

★ அங்கத்துவ நாடுகளுக்கிடையே அரசியல், பொருளாதார, கலாசார துறைகளில் பரஸ்பரம் நல்லுறவை வளர்த்தல்
★ அங்கத்துவ நாடுகளுக்கிடைய தொழில்நுட்பங்களைப் பரிமாறிக் கொள்ளல்
★ புலமைப் பரிசில்களை வழங்குதல்
★ அங்கத்துவ நாடுகளுக்கு இடையே தொடர்புகளைப் பேணுதல்
(2 புள்ளிகள்)

அங்கத்துவம்

★ சுயவிருப்பின் பேரில் பெறப்பட்டது. பிரித்தானிய அரசின் மேலுள்ள விசுவாசம் பாராளுமன்ற ஆட்சி முறையில் உள்ள நம்பிக்கை இவ் வமைப்பை ஆதரிக்கக் காரணமானது.
★ பொதுநலவாய நாடுகள் பிரித்தானிய மன்னனை ஒற்றுமையின் சின்னமாக அங்கீகரிக்கின்றன.
(2 புள்ளிகள்)

இலங்கை பெற்ற உதவிகள்

★ நீர்மின் சக்தி, வளமான அபிவிருத்தித் திட்டங்களுக்கான உதவிகள்
★ கைத்தொழில் விருத்திக்கான தொழில்நுட்பம்
★ மாணவர்களுக்கான புலமைப்பரிசில் பல்லைக்கழக விருத்திக்கான உதவிகள்
★ வர்த்தகம் தொடர்பான பிரச்சினைகளுக்கான உதவிகள்(2 புள்ளிகள்)

6 புள்ளிகள்) மொத்தப் புள்ளிகள் 3+4+5+6=18 புள்ளிகள்

வினா எண் 07

I. ★ கட்டுநாயக்க, பியகம, கொக்கல, பல்லேகல, மிகிந்தல. யதகல
( 3 புள்ளிகள்)

II. ★ வேலை வாய்ப்புகள் வழங்கல்
★ வெளிநாட்டு முதலீட்டாளர்களிடமிருந்து மூலதனத்தைப் பெறல்
★ கைத்தொழிலுக்கான தொழில்நுட்ப அறிவையம் முகாமைத்துவ அனுபவங்களையும் பெறல்
★ வெளிநாட்டுச் சந்தையைப் பெற்றுக்கொள்ளல்
★ பிரதேச அபிவிருத்தி
★ சர்வதேச தொடர்புகளை மேம்படுத்தல் (1x4 = 4 புள்ளிகள்)

III. நன்மையான விளைவுகள்

★ தேசிய, சர்வதேசிய செய்திகளைப் பெற்றுக்கொள்வதற்கு மார்க்கமாக அமைதல்.
★ இழிவு மனப்பாங்கு வளர்ச்சிக்கு உதவுதல்.
★ பயனுள்ள பொழுதுபோக்கிற்கான சந்தர்ப்பங்களை வழங்குதல்
★ கல்விச் செயற்பாடுகளை வளர்த்துச் செல்ல உதவுதல்

தீய விளைவுகள்

★ தொலைக்காட்சிக்கு அலாதியாக அடிமையாதல் காரணமாக பயனுள்ள செயற்பாடுகள் குறைதல்
★ பலவன்முறை செயற்பாடுகள் இடம்பெறுவதனால் பிள்ளைகளின் உள்ளமானது பாதிப்படைதல்.
(1x2= 2 புள்ளிகள் விளக்கத்திற்கு 3 புள்ளிகள் (5 புள்ளிகள்)

IV. ★ உலக சந்தைநாடுகள் அதிகளவில் புதிய தகவல்களைப் பெற்றுக்கொள்கின்றன. உதாரணம்: பங்குச் சந்தை
★ நடைமுறைத் தகவல்களை பெறமுடிதல்.

உதாரணம்: மருத்துவக் கல்வி,தொழில்நுட்ப முற்ற தொடர்பாகத் தெரிந்து கொள்ளுதல்.

★ செயற்பாடுகள் விரைவுபடுத்தப்படுதல் போன்ற கருத்துக்களை விவரித்தல்

(கருத்துக்கள் 2 புள்ளிகள், விளக்கத்திற்கு 4 புள்ளிகள் (6 புள்ளிகள்)
(3+4+5+6=18 புள்ளிகள்)

வினா எண் 08

I. ★ திருகோணமலைத் துறைமுகத்தின் முக்கியத்துவம்
★ கீழைத்தேச, மேலைத்தேச வர்த்தகப் பாதையில் மையமாக இருந்து சமுத்திரத்தின் மத்தியில் அமைந்திருந்தமை.
★ இந்தியாவின் மேற்குக் கரையோரங்களிலும் கிழக்குக் கரையோரங் களிலும் இடம்பெறும் கப்பல்கள் போக்குவரத்தினை நிர்வகிக்கக் கூடிய மத்திய நிலையமாக இலங்கை விளங்கியமை.
★ ஒல்லாந்தரின் பிரதேசங்களைப் பிரான்ஸ் கைப்பற்றாது தடுக்க
★ கிழக்கில் இந்திய உடைமைகள், பிரதேசங்களைப் பாதுகாக்க
★ திருகோணமலையில் கடற்படைத் தளம் அமைக்க (1x3= 3 புள்ளிகள்)

II. i. ஆங்கிலேயர் பாரம்பரிய நிர்வாகமுறைகளில் கவனம் செலுத்தாமை
ii. கண்டிப் பிரதானிகளின் வருமான மார்க்கத்தை இழந்தமை
iii. கண்டிப் பாரம்பரியங்கள், சம்பிரதாயங்கள் பின்பற்றபடாமையால் சமூகக்குரோதங்கள் ஏற்பட்டமை.
iv. பௌத்தமதம் அதன் வழிபாட்டு முறைகளைப் பாதுகாப்பது, அவற்றில் குறுக்கிடுவதில்லை என்ற உத்தரவாதத்தை மீறியமை
(1x4=4 புள்ளிகள்)

III. ★ உள்நாட்டு விவசாயத்தில் கரிசனை செலுத்தப்பட்டால் உள்நாட்டு யுத்தம் ஏற்படலாம் என விதந்துரைத்தல்
★ உணவுக்கான இறக்குமதி செலவைக் குறைப்பதில் உள்நட்டு விவசாயத்தைச் செய்தல்
★ இலங்கைச் சட்டசபையிலும் பிரித்தானிய பாராளுமன்றத்திலும் விவசா யம் விருத்தி செய்யப்பட வேண்டும் என வலியுறுத்தப்படல்

காரணிகளுக்கு 2 புள்ளிகள் விளக்கத்துக்கு 3 புள்ளிகள் (06 புள்ளிகள்)

IV. நயப்பாடுகள்

★ ஏற்றுமதி, இறக்குமதி பொருளாதாரத்தை அறிமுகப்படுத்தினர்
★ போக்குவரத்துப் பாதைகள் திறக்கப்பட்டன
★ சுகாதார விருத்தி ★ தொடர்பாடல் விருத்தி
★ கல்வி விருத்தி ★ வங்கி அமைப்பு அறிமுகம்
★ காப்புறுதி நடவடிக்கை அறிமுகம்
★ பாராளுமன்ற ஆட்சிமுறை ஏற்பட்டமை

நயக்கேடுகள்

★ பொருளாதார வசதியின்மை ஏற்பட்டமை
★ பெருந்தோட்டங்களால் மண்ணரிப்பு ஏற்பட்டமை
★ கண்டிய மக்கள் நிலங்களைப் பாழ்நிலச் சட்டத்தினால் இழந்தமை
★ உணவு உற்பத்தியில் பொருள்கள் குறைவடைந்தமை
★ சுயதேவை பூர்த்தியை இழந்தமை

காரணிகளுக்கு 2 புள்ளிகள் விளக்கத்திற்கு 4 புள்ளிகள் (6 புள்ளிகள்)
(மொத்தப் புள்ளி 3+4+5+6=18 புள்ளிகள்

வினா எண் 09

1. ★ நேரடியாகவோ மறைமுகமாவோ ஒரு அரசின் இறைமை அதிகாரத்தை நடைமுறைப்படுத்துவதனையோ பங்கிடுவதனையோ குறிப்பது அரசியல் யாப்பாகும். (டைசியின் கருத்து)

★ சட்டத்தின் ஊடாகச் சட்டத்தினால் ஒழுங்கமைக்கப்பட்ட ஒரு அரசியல் சமுதாயத்தின் புறவரைவே யாப்பாகும். (ஜேம்ஸ் பிறைஸின் கருத்து)

★ அரசாங்கத்தின் அமைப்பையும் தொழிற்பாடுகளையும் கடமைகளையும் கூறும் தொகுப்பே அரசியல் யாப்பு ஆகும்.
(ஏதாவது ஒரு கருத்துக்கு 2 புள்ளிகள்)

II. i. சர்வஜன வாக்குரிமை ii. அரசுக் கழகம்
iii நிர்வாகக் குழுமுறை iv. பிரதேசவாரி பிரதிநிதித்துவம்.
(1x4 =4 புள்ளிகள்)

III.

| 1972 முதலாவது குடியரசுயாப்பு | | 1978 ஜனநாயக சோஷலிசக் குடியரசு | |
|---|---|---|---|
| 01 | தேசிய அரசுப் பேரவை | 01 | பாராளுமன்றம் |
| 02 | குடியரசு ஜனாதிபதி | 02 | நிறைவேற்று அதிகார ஜனாதிபதி |
| 03 | தொகுதிவாரி தேர்தல்முறை | 03 | விகிதாசார பிரதிநிதித்துவமுறை |
| 04 | அடிப்படை உரிமைகள் சில அம்சங்கள் மட்டும் முதலிடம் பெறல் | 04 | பரந்த அளவில் அடிப்படை உரிமைகள் இடம்பெற்றமை |
| 05 | அரச சேவைகள் ஆலோசனைச் சபை நீதிச்சேவைகள் | 05 | பொதுச்சேவை ஆணைக்குழு |
| 06 | யாப்புமுறை நீதிமன்றம் | 06 | நீக்கப்பட்டது |
| 07 | .... | 07 | ஓம்புட்ஸ்மன் அறிமுகம் |
| 08 | ......... | 08 | மக்கள் தீர்ப்பு |

(1X5= 5 புள்ளிகள்

IV. ★ நீதியின் தீர்ப்பிற்கு எதிராக வழக்குத் தொடரமுடியாது.
★ நீதிபதி ஒருவரைப் பதவி நீக்க வேண்டுமாயின் பாராளுமன்றத்தில் பிரேரணை சமர்ப்பிக்கப்பட்டு பெரும்பான்மை வாக்குகளால் அங்கீகரிக்க வேண்டும்.
★ மீயுயர் நீதிமன்ற நீதிபதிகள் 65 வயது வரையும் மேன்முறையீட்டு நீதிமன்ற நீதிபதிகள் 63 வயது வரையும் பதவிவகிக்கலாம் என யாப்பில் குறிப்பிடப்பட்டமை.
★ வழக்கு விசாரணைகள் பகிரங்கமாக நீதிமன்றத்தில் நடத்தப்பட வேண்டும் என்பதும்.

(3 காரணங்களுக்கும் 3 புள்ளிகள்) விளக்கத்துக்கு 3 புள்ளிகள் (6 புள்ளிகள்)
(மொத்தப்புள்ளி 3+4+5+6=18 புள்ளிகள்)

வினா எண் 10

I. ★ பொதுச்சபை ★ பாதுகாப்புச்சபை ★ நம்பிக்கைப் பொறுப்புச் சபை
★ சமூக பொருளாதாரச் சபை ★ சர்வதேச நீதிமன்றம் ★ செயலகம்.
(1x3=3 புள்ளிகள்)

II. ★ இரண்டாம் உலகப் போரில் ஏற்பட்ட அழிவு
★ நாட்டுக் கூட்டவையும் வெற்றிகரமாக செயற்படாமை.
★ உலகத்தில் சமாதானத்தைப் பேணுவதற்கு வலுமிக்க அமைப்பு ஒன்று தேவைப்பட்டமை.
(2+2=4 புள்ளிகள்)

III. ★ யுனெஸ்கோ (ஐக்கிய நாடுகளின் கல்வி, விஞ்ஞான கலாசார அமையம்)
★ யுனிசெவ் (ஐக்கிய நாடுகளின் குழந்தை நிதியம்)
★ உலக சுகாதார ஸ்தாபனம்
★ உலக தொழிலாளர் ஸ்தாபனம்
★ உலக வங்கி
★ ஐக்கிய நாடுகள் சனத்தொகை நிதியம்
★ ஐக்கிய நாடுகளின் உணவு விவசாய ஸ்தாபனம்
★ சர்வதேச நாணய நிதியம்

மூன்று ஸ்தாபனங்களைக் குறிப்பிட்டால் 1x3=3 புள்ளிகள்
ஏதாவது ஒரு அமைப்பின் இரண்டு நன்மைகள் குறிப்பிட்டால் 2 புள்ளிகள்
(உ+ம் யுனஸ்கோ) (5 புள்ளிகள்)

★ இலங்கையில் உயர் கல்வி ஸ்தாபனத்தை அமைத்து உதவிவழங்கல்
★ கற்றலுக்கான உபகரணங்களை வழங்குதல்
★ கலாசார முக்கோணச் செயற்திட்டத்துக்கு பங்களிப்பு செய்தல்.
★ சுற்றாடல் பாதுகாப்பு செயற்றிட்டங்களை மேற்கொள்ள உதவி செய்தல்.

IV ★ ஈரான், ஈராக் சமாதானம்
★ சோமாலியாவில் நிவாரணப்பணி
★ இந்தோனேசியா தீபகற்ப சமாதான முயற்சிகள்

இரண்டு விடைகளுக்கு 1x2= 2 புள்ளி விளக்கத்திற்கு 4 புள்ளிகள் (6 புள்ளிகள்) (மொத்தப் புள்ளிகள் 3+4+5+6=18 புள்ளிகள்)

வினா எண் 11

1) i. வில்லியம் கிரகரி ii. வெஸ்ற் றிச்வே iii. ஹேர் குலிஸ் றொபின்சன்
(1x3=03 புள்ளிகள்)

II. ★ பெருந்தோட்ட உற்பத்திகளை மாட்டுவண்டில்கள் ஏற்றியிறக்க போதுமா னவையாக இருக்கவில்லை.
★ மாட்டு வண்டில்கள் செல்லும் வீதிகளை அடிக்கடி புனரமைப்புச் செய்வதால். செலவுகளும் பிரச்சினைகளும் ஏற்பட்டமை.
★ இக்காலத்தில் இங்கிலாந்தில் புகையிரதச் சேவை வளர்ச்சியடைந்த சேவையாக காணப்பட்டமை
(1x4=4 புள்ளிகள்)

III. நல்விளைவுகள்

★ பொருளாதாரப் பங்கு மாற்றமடைந்தது.
★ போக்குவரத்து வளர்ச்சி ஏற்பட்டமை. ★ நகரங்கள் தோன்றியமை
★ தொலைத்தொடர்புகள், அஞ்சல் சேவைகள் விரிவடைந்தன.
★ புதிய தொழில் வாய்ப்புக்கள் அதிகரித்தமை

தீயவிளைவுகள்

★ வாழ்வாதாரப் பயிர்ச் செய்கை புறக்கணிக்கப்பட்டமை
★ மலையக மக்கள் விவசாய நிலங்களையும் மேய்ச்சல் நிலங்களையும் இழந்தமை.
★ உரிமைகள் இலாபம் கூலிகள், வாடகை, வட்டி போன்ற சுதேசிகள் காணாத புதிய துறைகள் உருவாகின.

நல்ல விளைவுகள் மூன்று (03 புள்ளிகள்)
தீயவிளைவுகள் இரண்டு (02 புள்ளிகள்)
(05புள்ளிகள்)

VI. i. இந்துசமயம் - ஸ்ரீலஸ்ரீ ஆறுமுகநாவலர்
ii. பௌத்த சமயம், அநாகரிக தர்மபாலன்
iii. இஸ்லாமிய சமயம் - M.C. சித்திலெப்பை
(1x3 = 3 புள்ளிகள்)

ஒருவர் பற்றிச் சுருங்க கூறுவதற்கு (03 புள்ளிகள்) (3+3=6 புள்ளிகள்)
(மொத்தப் புள்ளிகள் 3+4+5+6=18)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

**IELTS**

By Lecturer from Colombo.

**Diploma in English**

A few more Vacancies

**BRITISH BUSINESS SCHOOL**

140, TEMPLE ROAD, JAFFNA.
TELEPHONE : 021-2225796


## பாரவூர்திச் சங்கத்தின் பணிமனை திறப்பு

யாழ்ப்பாணம்,செப்.30

வடபிராந்திய பார ஊர்தி உரிமையாளர் கூட்டுறவுச் சங்கத்தின் பணிமனைக் கட்டடம் நாளைமறுதினம் சனிக்கிழமை காலை 10.30 மணிக்கு யாழ்.சாலை பரந்தனில் திறந்துவைக் கப்படவுள்ளது.

இந்த வைபவத்தில் சங்கதில் உறுப்புரிமை பெற்றுள்ள உரிமையாளர்கள், சாரதிகள், நடத்து நர்கள் அனைவரையும் கலந்து கொள்ளுமாறு அழைப்பு விடுக்கப்பட்டுள்ளது. (ஐ-204)

## பங்குச் சந்தை கருத்தரங்கு

யாழ்ப்பாணம்,செப்.30

ஹற்றன் நஷனல் வங்கியின் பங்குத்தரகர் (தனியார்) நிறுவனமும் ஹற்றன் நஷனல் வங்கியும் இணைந்து நடத்தும் 'பங்குச்சந்தை' பற்றிய கருத்தரங்கு இன்று வியாழக்கிழமை பிற்பகல் 3 மணிக்கு நெல்லியடி மகாவித்தியாலயத்தில் நடைபெறவுள்ளது.

இந்நிகழ்வில் பங்குச்சந்தை பற்றிய அறிமுகத்தை கொழும்பு பங்குச்சந்தையின் யாழ் கிளை முகாமையாளர் சி.ஷிவானி வழங்கு வார்.

ஹற்றன் நஷனல் வங்கி பங்குத்தரகர் நிறுவன ஆராய்ச்சி முகாமை யாளர் ஹசித்த பிரேமரட்ண 'முதலீட்டுத் தீர்மானங்களை எவ்வாறு மேற கொள்வது'? என்பது பற்றிக் கருத்துரை நிகழ்த்துவார்.

(ஐ-204)

## வினாத்தாள் தயாரித்தல் தொடர்பான கூட்டம்

தென்மராட்சி,செப்.30

தென்மராட்சி கல்வி வலயப் பாட சாலைகளுக்கான மூன்றாம் தவணைப் பரீட்சை வினாத் தாள்கள் தயாரித்தல் தொடர்பான கூட்டம் இன்று வியாழக் கிழமை காலை 9 மணிக்கு வலயக் கல்வி அலுவலக மண்டபத்தில் நடை பெறவுள்ளது.

இக் கூட்டத்திற்குப பாடங்களின் ஆசிரி யர்கள் அழைக்கப் பட்டுள்ளதாக வல யக் கல்விப் பணிப் பாளர் வ.செல்வராஜா அறிவித்துள்ளார்.

(8-117)

## முதியோர் தினவிழா

கொக்குவில்,செப்.30

பருத்தித்துறை பிரதேச செயலகத்தின முதியோர்தின விழா எதிர்வரும் 9ஆம் திகதி சனிக்கிழமை காலை 10மணிக்கு பருத்தித் துறை உதவிப் பிர தேசசெயலர் எஸ். வசந்தகுமார் தலை மையில் நடைபெறவுள் ளது. இதில் மேலதிக அரசஅதிபர் ஆசிவ சுவாமி பிரதம விருந் தினராகக் கலந்து கொள்வார். பருத்தித் துறைக் கோட்டக் கல் வி் பணிப்பாளர் எஸ் புஸ்பலிங்கம், வடம ராட்சி லயன்ஸ் கழ கத்தலைவர் எம்.தர்ம லிங்கம், வடமராட்சி அரசியல் துறைப் பொறுப்பாளர் இ.தயா ஆகியோர் சிறப்பு விருந்தினர்களாகக் கலந்துகொள்வர்.

(8-76)

## இன்று மணல் விநியோகம் இல்லை

யாழ்ப்பாணம்,செப்.30

வடமராட்சி கிழக்கு புனர்வாழ்வு, புனரமைப்பு நிறுவனத் தினால் வியாழக் கிழமை மணல் விநி யோகம் மேற்கொள் ளப்படமாட்டாது என அறிவிக்கபபட்டுள் ளது.

இத்தினத்திற்குரிய மணல் விநியோகம் பற்றிய திகதி பின் னர் அறிவிக்கப்படும் எனத் தெரிவிக்கப்பட் டுள்ளது.

(10)

## மூவர் காயம்

வடமராட்சி,செப்.30

வல்லிபுர ஆழ்வார் ஆலயத்தின் சமுத் திர தீர்த்தத்தை முன் னிட்டு நேற்று முன் தினம் பிற்பகல் முன் னேற்பாடுகளுக்காகத் தொண்டர்களை வல் லிபுரக் கடற்கரைக்கு ஏற்றிச் சென்ற இலங்கை செஞ்சிலுவைச் சங் கத்தின் வாகனத்தில் இருந்து தவறி கீழே வீழ்ந்ததில் மூவர் காய மடைநதனர்.

கோப்பாய் மத்தி யைச் சேர்ந்த எஸ். மாலதி (வயது -29), வி.விஜிதா (வயது - 24), தகஜாதா (வயது- 25) ஆகிய மூவருமே காயமடைந்தவர்களா வர்.

மந்திகை ஆஸ்பத் திரியில் சேர்க்கப் பட்ட இவர்கள், மேல திக சிகிச்சைக்காக யாழ். ஆஸ்பத்திரிக்கு எடுத்துவரப்பட்டனர்.

(எ-7-173)




Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## வாக்காளர் பதிவு

கோப்பாய்,செப்.30

கோப்பாய் பிரதேச செயலகக் பிரிவுக்குட்பட்ட கிராம அலுவலர்கள் பிரிவுகளில் வாக்காளர் இடாப்பு திருத்தமும், புதிய பதிவும் தற்போது மேற்கொள்ளப்பட்டு வருகின்றன.

இதுவரை பதிவினை மேற்கொள்ளாதவர்கள் தமது கிராம அலுவலருடன் தொடர்பு கொண்டு நாளை வெள்ளிக்கிழமைக்கு முன்பாகப் பதிவினை மேற்கொள்ளுமாறு கோப்பாய்ப் பிரதேச செயலர் கேட்டுள்ளார். (8-72)

## ஒருங்கிணைப்புக் குழுக் கூட்டம்

கோப்பாய்,செப்.30

வலி. கிழக்கு பிரதேச செயலக பிரதேச ஒருங்கிணைப்புக் குழுக்கூட்டமும் விவசாயக் குழுக்கூட்டமும் இன்று வியாழக்கிழமை காலை 10.30 மணிக்கு பிரதேச செயலக மாநாட்டு மண்டபத்தில் நடைபெறும் என கோப்பாய் பிரதேச செயலர் திருமதி அ.சாந்தசீலன் அறிவித்துள்ளார். (8-72)

## வினாடி வினா இறுதிக் கட்டப் போட்டிகள்

தென்மராட்சி,செப்.30

தென்மராட்சி கல்வி வலயப் பாடசாலை மாணவர்களுக்கிடையே நடத்தப்பட்ட வினாடி வினாப் போட்டியின் இறுதிக்கட்டப் போட்டிகள் எதிர்வரும் 4 ஆம் திகதி திங்கட்கிழமை சாவகச்சேரி இந்துக் கல்லூரியில் நடைபெறவுள்ளன.

தரம் 10, 11, 12 மற்றும் 13 ஆகிய பிரிவு மாணவர்களுக்கிடையே நடத்தப்பட்ட சைவசமயம், வணிகக்கல்வி, விவசாயம், விஞ்ஞானம் ஆகிய பாடங்களுக்கான வினாடி வினாப் போட்டிகளில் மூன்று பாடசாலைகளில் இருந்து மூன்று மாணவர்கள் வீதம் தெரிவு செய்யப்பட்டுள்ளதாக வலயக் கல்விப் பணிப்பாளர் வ.செல்வராசா தெரிவித்துள்ளார்.

வணிகக் கல்விப்போட்டிகளில் தரம் 10, 11 பிரிவில் சாவகச்சேரி இந்துக் கல்லூரி, சாவகச்சேரி மகளிர் கல்லூரி, மீசாலை வீரசிங்கம் மகாவித்தியாலயம் ஆகியனவும் தரம் 12, 13 ஆகிய பிரிவுகளில் மீசாலை வீரசிங்கம் மகாவித்தியாலயம், கொடிகாமம் திருநாவுக்கரசு மகாவித்தியாலயம், சாவகச்சேரி இந்துக்கல்லூரி ஆகியவையும் -

விவசாய, விஞ்ஞான பாடப் போட்டிகளில் தரம் 10 பிரிவில் உசன் இராமநாதன் மகாவித்தியாலயம், மீசாலை வீரசிங்கம் மகாவித்தியாலயம் மற்றும் கச்சாய் அ.த.க.பாடசாலை ஆகியவையும் -

தரம் 11 பிரிவில் மீசாலை வீரசிங்கம் மகா வித்தியாலயம், சாவகச்சேரி இந்துக் கல்லூரி, கச்சாய் அ.த.க. பாடசாலை ஆகியவையும் கலந்துகொள்ளவுள்ளதாக அறிவிக்கப்பட்டுள்ளது. (8-5-117)

# மாவீரர் வேலவனின் நினைவுக்கல் திரைநீக்கம்

யாழ்ப்பாணம்,செப்.30

கடந்த 96 ஆம் ஆண்டு செப்ரெம்பர் மாதம் 28 ஆம் திகதியன்று 'சத்ஜெய' 3 இராணுவ நடவடிக்கைக்கு எதிரான நடவடிக்கையின் போது வீரச்சாவை தழுவிக்கொண்ட இரண்டாம் லெப்டினன்ட் வேலவன் என்று அழைக்கப்படும் யாழ்.மாவட்டத்தைச் சேர்ந்த சிவபாதம் சிறீஸ்கந்தராசா என்ற மாவீரரின் நினைவுக்கல் நேற்றுமுன்தினம் செவ்வாய்க்கிழமை கோப்பாய் மாவீரர் துயிலும் இல்லத்தில் திரைநீக்கம் செய்து வைக்கப்பட்டது.

முன்னதாக, இம்மாவீரரின் திருவுருவப் படம் நேற்றுமுன்தினம் பிற்பகல் 3 மணிக்கு அவரது இல்லத்திலிருந்து எடுத்துவரப்பட்டு அளவெட்டி மகாஜன சபை மண்டபத்தில் மக்கள் அஞ்சலிக்காக வைக்கப்பட்டது.

அதனைத் தொடர்ந்து தெல்லிப்பழை பிரதேசப் பொறுப்பாளர் சரவணன் தலைமையில் வீரவணக்கக் கூட்டம் நடைபெற்றது. மாவீரனின் திருவுருவப்படத்துக்கு பெற்றோர் ஈகச்சுடர் ஏற்றி மலர்மாலை அணிவித்தனர்.

மகாஜனசபை உறுப்பினர் கு.சர்வேஸ்வரன், யாழ். மாவட்ட அரசியல் துறைத் துணைப் பொறுப்பாளர் செம்மணன், மகாஜனசபைத் தலைவர் சுப்பிரமணியம் ஆகியோர் வீரவணக்க உரையினை நிகழ்த்தினார்கள். அதன் பின்னர் மாவீரரது திருவுருவப் படம் அலங்கரிக்கப்பட்ட ஊர்தியில் எடுத்துவரப்பட்டு கோப்பாய் மாவீரர் துயிலும் இல்லத்தில் பிற்பகல் 5.40 மணிக்கு நினைவுக்கல் திரைநீக்கம் செய்யப்பட்டது.

இந்த நிகழ்வில் பெருமளவில் பொதுமக்களும் போராளிகளும் கலந்துகொண்டனர். (8-7)

# உலக சிறுவர் தினத்தையொட்டி பொதுநூலகத்தில் சிறுவர் மாநாடு

யாழ்ப்பாணம்,செப்.30

உலக சிறுவர் தினத்தையொட்டி மாநகர சபையினர் நடத்தும் சிறுவர் மாநாடு நாளை வெள்ளிக்கிழமை யாழ்.பொதுநூலகத்தில் காலை 8.30 மணியிலிருந்து மாலை 5.30 மணிவரை நடைபெறவுள்ளது.

மாநகர ஆணையாளர் கலாநிதி க.குணராசா தலைமையில் நடைபெறவுள்ள இந்த மாநாட்டில் மாநகரசபைக்குட்பட்ட பாடசாலைகளில் தரம் 5முதல் தரம் 10 வரையில் கல்வி கற்கும் மாணவர்களில் ஒவ்வொரு பாடசாலையிலிருந்தும் 2 மாணவர்கள் வீதம் இதில் பங்கேற்கவுள்ளனர்.

இந்த மாநாட்டின் முதல் அமர்வில் சிறுவர்களுடைய பிரச்சினைகள் அவர்கள் எதிர்நோக்கும் பிரச்சினைகள் என்பன பற்றி ஆராயப்படவுள்ளது.

இரண்டாம் அமர்வில் சிறுவர்களுக்கான தகவல் தொழில்நுட்பம் தொடர்பான கருத்தரங்கு நடைபெறும்.

தொடர்ந்து யாழ்.குடாநாட்டிலுள்ள பிரபல உளவியல் வைத்தியர்கள், சிறுவர் நிதியத்தின் பிரதிநிதிகள் ஆகியோர் உட்படப் பல அறிஞர்கள் கருத்துரையாற்றுவார்கள். (8-13)

# ஸ்கந்தவரோதயக் கல்லூரி ஆண்டுவிழா நிகழ்வுகள்

வலி.தெற்கு,செப்.30

கந்தரோடை ஸ்கந்தவரோதயக் கல்லூரி ஆரம்பமாகி 110 ஆண்டுகள் நிறைவடைவதை முன்னிட்டு ஒக்ரோபர் மாத இறுதிவாரத்தில் சிறப்பு விழாவினை நடத்துவதற்குக் கல்லூரி நிர்வாகத்தினருடன் பழைய மாணவர் சங்கம், பாடசாலை அபிவிருத்திச் சங்கம் என்பன இணைந்து உரிய நடவடிக்கைகளை மேற்கொண்டுவருகின்றன.

110 ஆவது ஆண்டு நிறைவை முன்னிட்டு சிறப்பு மலர் ஒன்றை வெளியிடவும், கல்லூரியின் முகாமையாளர்களுள் ஒருவராக விளங்கிய மருத்துவப் பேரறிஞர் டாக்டர் பி.சுப்பிரமணியத்தின் ஞாபகார்த்த சிலையொன்றைக் கல்லூரி வளாகத்தில் நிறுவவும் ஏற்பாடுகள் நடைபெற்று வருகின்றன.

இவ்விழாவில் கலந்துகொள்ளவெனப் பிற நாடுகளில் உள்ள ஸ்கந்தாவின் பழைய மாணவர் சங்க உறுப்பினர்கள் பலர் வருகை தரவுள்ளனர்.

கொழும்பிலுள்ள ஸ்கந்தா பழைய மாணவர் சங்கக்கிளை 110ஆவது ஆண்டு நிறைவை முன்னிட்டு நினைவு முத்திரையொன்றை வெளியிடவும் ஏற்பாடு செய்து வருகின்றது.

அதேசமயம், வலிகாமம் பகுதியில் ஸ்கந்தவரோதயக் கல்லூரியை ஒரு தேசியக் கல்லூரியாகத் தரமுயர்த்தித் தருமாறு மேற்படி கொழும்புக் கிளை கல்வி அமைச்சிடம் கோரிக்கை விடுத்துள்ளது. (4-152)




## பயிற்சி பெறாத ஆசிரியர்களுக்கான செயலமர்வுகள்

தென்மராட்சி,செப்.30

தென்மராட்சி கல்வி வலயப் பாடசாலைகளில் புதிதாக நியமனம் பெற்று இதுவரை பாடசாலை நடைமுறை தொடர்பான எதுவித பயிற்சியும் பெறாத ஆசிரியர்களுக்கான செயலமர்வுகள் நாளை முதலாம் திகதியும், நாளை மறுதினம் இரண்டாம் திகதியும் வரணி ஆசிரிய மத்திய நிலையத்தில் நடைபெறும்.

2004 ஜனவரி முதலாம் திகதிக்குப் பின்னர் நியமனம் பெற்ற ஆசிரியர்களைத் தவறாது இச்செயலமர்வுகளில் கலந்துகொள்ளுமாறு வலயக் கல்விப் பணிப்பாளர் வ.செல்வராசா அறிவித்துள்ளார். (8-117)

## புத்தகங்கள் அன்பளிப்பு

தென்மராட்சி,செப்.30

தென்மராட்சிப் பிரதேசத்தில் உள்ள நூலகங்களுக்கு நாடாளுமன்ற உறுப்பினர் ந.இரவிராஜ் ஒரு தொகுதி புத்தகங்களை அன்பளிப்பாக வழங்கியுள்ளார்.

சாவகச்சேரி நகரசபை, சாவகச்சேரி பிரதேச சபை ஆகியவற்றின் பொது நூலகங்களுக்கும் சாவகச்சேரி இந்துக்கல்லூரி, சாவகச்சேரி டிறிபேர்க் கல்லூரி, சாவகச்சேரி மகளிர் கல்லூரி, மீசாலை வீரசிங்கம் மகாவித்தியாலயம், கொடிகாமம் திருநாவுக்கரசு மகாவித்தியாலயம், வரணி மகாவித்தியாலயம், மட்டுவில் மகாவித்தியாலயம், கைதடி முத்துக்குமாரசாமி மகாவித்தியாலயம் ஆகிய பாடசாலைகளின் நூல் நிலையங்களுக்கும் புத்தகங்கள் வழங்கப்பட்டுள்ளன. (8-117)

## பரிசளிப்பு விழாவும் மலர் வெளியீடும்

யாழ்ப்பாணம்,செப்.30

உரும்பிராய் சைவத் தமிழ் வித்தியாலயத்தின் பரிசளிப்பு விழாவும் 'கற்பக' மலர் வெளியீடும் இன்று வியாழக்கிழமை பிற்பகல் 2.30 மணிக்கு பொன்னுத்துரை அரங்கில் முதல்வர் சு.யோகராசா தலைமையில் நடைபெறவுள்ளன.

இந்நிகழ்வில் விருந்தினர்களாக யாழ். பல்கலைக்கழக பேராசிரியர் சபா.ஜெயராசா, யாழ்.மாவட்ட 'நிக்கொட்' பிரதித் திட்டப் பணிப்பாளர் க.நவரத்தினராசா, கோப்பாய் கோட்டக் கல்வி அலுவலக உதவிக் கல்விப் பணிப்பாளர் இ.சிவஞானசுந்தரம், வலி.கிழக்கு அரசியல்துறைப் பொறுப்பாளர் குமார் ஆகியோர் கலந்துகொள்ளவுள்ளனர்.

தொடர்ந்து 'கற்பகம்' மலர் வெளியீடு இடம்பெறும். முதற் பிரதியை லயன் ஈ.எஸ்.பி.நாகரெட்ணம் பெற்றுக்கொள்வார்.

சிறப்புப் பிரதி வழங்கலை தொடர்ந்து மலர் வெளியீட்டுரையை கோப்பாய் ஆசிரியர் பயிற்சிக் கலாசாலை விரிவுரையாளர் கலாநிதி செ.திருநாவுக்கரசு நிகழ்த்துவார். தொடர்ந்து பரிசில்களை திருமதி பவானி ஜெயராசா வழங்குவார். (8-204)

# கால்நடை வளர்ப்புப் போட்டியில் பரிசு பெற்றோர் விவரம்

சாவகச்சேரி,செப்.30

தென்மராட்சி கால்நடை வைத்தியர் பிரிவுக்குட்பட்ட பகுதியில் நடத்தப்பட்ட கால்நடை வளர்ப்புப் போட்டியில் தெரிவுசெய்யப்பட்டோர் விவரங்கள் வெளியிடப்பட்டுள்ளன.

கிராம சேவகர் பிரிவு ரீதியாக நடத்தப்பட்ட இப்போட்டியில் கோழிவளர்ப்பு, ஆடு வளர்ப்பு மற்றும் மாடுவளர்ப்பு ஆகியவற்றிற்கு முக்கியத்துவம் வழங்கப்பட்டது.

இந்த மூன்றிலும் முதல் மூன்று இடங்களையும் பெற்றோர் பெயர் விவரம் வருமாறு:-

**கோழி வளர்ப்பு**

1ஆம் இடம் - எஸ்.சிவரஞ்சினி (வரணி),
2ஆம் இடம் - எஸ்.குமாரசாமி (மட்டுவில்),
3ஆம் இடம் - ஜி.வரதலட்சுமி (கைதடி).

**ஆடு வளர்ப்பு**

1ஆம் இடம் - எஸ்.இராசரத்தினம் (கைதடி),
2ஆம் இடம் - என்.கதிரவேலு (மீசாலை),
3ஆம் இடம் - ஆர்.பரமநாதன் (மட்டுவில்).

**மாடு வளர்ப்பு**

1ஆம் இடம் - என்.இலட்சுமணன் (கைதடி),
2ஆம் இடம் - என்.ஜெயரூபன் (நாவற்குழி),
3ஆம் இடம் - பி.நல்லையா (கைதடி).

இப்போட்டிகளில் தெரிவானவர்களுக்கான பரிசில்களும், சான்றிதழ்களும் அண்மையில் சாவகச்சேரி கால்நடை வைத்திய நிலையத்தில் வைத்து வழங்கப்பட்டது.

கால்நடை வைத்திய அதிகாரி திருமதி சகுந்தலா மகேந்திரராசா தலைமையில் நடைபெற்ற இந்த நிகழ்வில் கால்நடை வைத்தியசாலைப் போதனாசிரியர் எஸ்.இரத்தினசிங்கம் வைத்தியசாலை ஊழியர்கள், கால்நடை வளர்ப்போர், பொதுமக்கள் எனப் பலர் கலந்துகொண்டனர். (8-5-31)

# முதியோர் தினத்தை முன்னிட்டு வயோதிபர் இல்லங்களுக்குப் பரிசுகள்

கொக்குவில்,செப்.30

நாளை முதலாம் திகதி கொண்டாடப்படவுள்ள சர்வதேச முதியோர் தினத்தை முன்னிட்டு மாகாணமட்டத்தில் சிறந்த முதியோர் அமைப்புகள் மூன்றினைத் தெரிவுசெய்து பரிசுகள் வழங்க முதியோருக்கான தேசியசபை தீர்மானித்துள்ளது.


இதுதொடர்பாக வடக்கு - கிழக்கு சமூக நலத்துறைத் திணைக்களப் பணிப்பாளர் என்.ஆர்.ரஞ்சினி அரச அதிபர்களுக்குச் சுற்று நிருபம் ஒன்றை அனுப்பிவைத்துள்ளார்.

இதில் மாகாணமட்டத்தில் முதலாம் இடம் பெறும் முதியோர் அமைப்புக்கு 10 ஆயிரம் ரூபாவும், இரண்டாம் இடம்பெறும் முதியோர் அமைப்புக்கு 7 ஆயிரத்து 500 ரூபாவும், மூன்றாம் இடம் பெறும் முதியோர் அமைப்புக்கு ரூபா 5 ஆயிரமும் வழங்கப்படவுள்ளது.

யாழ். மாவட்டத்தில் காரைநகர் உதவி அரச அதிபர் பிரிவிலுள்ள காரை மத்தி முதியோர் பகல் பராமரிப்பு நிலையம் 85 புள்ளிகளைப் பெற்று முதலாவது இடத்திலும், சாவகச்சேரி பிரதேச செயலர் பிரிவிலுள்ள கைதடி அரச முதியோர் இல்லம் 66 புள்ளிகளைப் பெற்று இரண்டாவது இடத்திலும், சண்டிலிப்பாய் பிரதேச செயலர் பிரிவிலுள்ள ஆனைக்கோட்டை மூத்த பிரஜைகள் சங்கம் 55 புள்ளிகளைப் பெற்று மூன்றாவது இடத்திலும் உள்ளன.

வயது கூடிய முதியோரில் கோப்பாய்ப் பிரதேச செயலர் பிரிவைச் சேர்ந்த சு.வள்ளியம்மை (வயது 104) முதலாவது இடத்திலும், பருத்தித்துறைப் பிரதேச செயலகப் பிரிவைச் சேர்ந்த பொ.சிவசாமி (வயது 100) இரண்டாவது இடத்திலும், சங்கானைப் பிரதேச செயலகப் பிரிவைச் சேர்ந்த செ.அன்னலட்சுமி (வயது 100) மூன்றாவது இடத்திலும் உள்ளனர்.

யாழ். மாவட்டத்தில் தெரிவுசெய்யப்பட்ட முதியோர் அமைப்புக்களினதும், முதியோர்களினதும் விவரங்கள் வடக்கு - கிழக்கு மாகாண சமூக நலத்துறைத் திணைக்களத்திற்கு அனுப்பிவைக்கப்பட்டுள்ளன. (8-76)



தென்மராட்சிக் கொடிகாமத்தில் ... 26 ஆம் திகதி நடைபெற்ற தியாகி திலீபனின் 17 ஆம் ஆண்டு நினைவு தின நிகழ்வில் திலீபனின் உருவப்படத்துக்கு தாய் ஒருவர் மலர் அஞ்சலி செலுத்துவதையும், தென்மராட்சி ஒன்றியங்களின் தலைவர் க. அருட்தவபாலன் உரையாற்றுவதையும் படங்களில் காணலாம்.

(படங்கள்: சாவகச்சேரிச் செய்தியாளர்)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# சின்னஞ்சிறு விளம்பரங்கள்

## விற்பனைக்கு

ஜப்பானிலிருந்து இறக்குமதி செய்யப்பட்ட தொலைக்காட்சிப் பெட்டிகள், VCRகள், சலவை இயந்திரங்கள், VCD Players, அம்பிளியயர்கள், கொம்பியூட்டர்கள், அதன் உதிரிப்பாகங்கள் மிகவும் மலிவான விலையில் விறபனைக்கு உண்டு. தொடர்பு: 024 222 4402, 077 6309910, 077 3039649. (36592)

உரும்பிராய் தெற்கில் சந்திக்கு மிக அருகில ஒன்பது (09) பரப்புக் காணியும் வீடும் விறபனைக்கு உண்டு. தொடர்பு:-T.P.072 3223 731 (மாலை 7 மணிக்குப் பின்பு). (36992)

புறொயிலர் இறைச்சிக்கோழி தினமும் விற்பனைக்கு உண்டு. மற்றும் பொதி செய்யப்பட்ட (ஐஸ்) கோழியும் விற்பனைக்கு உண்டு. மலிவுவிலையில் வேண்டிய நிறைகளில் பெற்றுக்கொள்ளலாம். தொடர்புகளுக்கு:T.கரன், 150, ஆஸ்பத்திரி வீதி, யாழ்ப்பாணம். (36855)

## பழைய வீடு விற்பனைக்கு

கட்டட ஒப்பந்தகாரர்களுக்கும் வீடுகட்ட முற்படுவோருக்கும் அரிய வாய்ப்பு. கூரை, கதவு, நிலை முதலியன நல்லநிலையில் உள்ள ஓட்டுவீடு மலிவுவிலையில் உண்டு. தொடர்பு:ம.கங்காதரம், சரசாலை வடக்கு, சாவகச்சேரி. (36930)

## நாடக நூல் விற்பனைக்கு

"ஆசிரியர் தின விழா" நாடகம் உள்ள நூல், 400 நாடகங்கள் எழுதிய கலாபூஷணம் அராலியூர் ந.சுந்தரம்பிள்ளையின் 'வானொலி நாடகம எழுதுவது எப்படி? வாங்கிப் படியுங்கள், நடியுங்கள். ரூபா150/=. (37007)

## இணையத்தளம்

பாடசாலைகள், சங்கங்கள், நிறுவனங்கள், விற்பனை மையங்களுக்கான இணையத்தளம்
Domain Registration, Hosting, Designing, Maintenance and e-mails
ஒரு வருடத்திற்கான மொத்தக் கட்டணம் ரூபா 8000/= மட்டும்.

**SAAMSTECH**
841, Hospital Road, Jaffna.
Phone: 0773 068968.
(சி-37842)

## மோட்டார் சைக்கிள் வாடகைக்கு

*மணித்தியாலம் மற்றும் நாளாந்த வாடகைக்கு வழங்கப்படும்.*
தொடர்பு:360/5, பிரதான வீதி, சுண்டிக்குளி, யாழ்ப்பாணம்.
(36949) **T.P. 0777 738146**

## SAAMSTECH இன் ஆங்கில, சிங்கள நேரடி வகுப்பு

காலம்: 2 மாதங்கள்
கட்டணம்: ஆங்கிலம் ரூபா 6000, சிங்களம் ரூபா 4000 முழுமையாகக் கதைக்கலாம்.

**SAAMSTECH**
841, Hospital Rd., Jaffna
Phone: 0773 068968
(சி-37511)

## தவறிவிட்டன

சத்தியலோஜினி.தி (775791101V), மங்கையர்க்கரசி.தி (455841593V), இருவினதும் தேசிய அடையாள அட்டைகள் கன்னாதிட்டி மக்கள் வங்கிக்கு அருகில் தவறிவிட்டன. கண்டெடுத்தவர்கள்: A.திருநாவுக்கரசு, பொன்னையா லேன், ஆனைக்கோட்டையில் ஒப்படைக்கவும்.(37004)

சுபேரசசந்திரன் சுகந்தினி என்பவருடைய தேசிய அ.அ.(766472028V), விசேட அ.அ. (090 6002894) உரும்பிராய்ச்சந்திக்கும் யாழ்ப்பாணத்திற்குமிடையில் மினிபஸ்ஸில் 16-09-2004 அன்று தவறவிடப்பட்டன. கண்டெடுத்தவர்கள் உப அஞ்சல அதிபர், புன்னாலைக்கட்டுவன் வடக்கு என்ற முகவரிக்கு அனுப்பிவைக்கவும். T.P.No: 060 - 2213172. (37013)

## கடை வாடகைக்கு

இல.273, காங்கேசன்துறை வீதியில் அமைந்துள்ள கடை வாடகைக்கு உண்டு. தொடர்பு: க.கனகேந்திரன், க.மங்கையர்க்கரசி, 140, கஸ்தூரியார் வீதி, யாழ்ப்பாணம்.T.P. 021 4590516. (36999)

இல.136, கஸ்தூரியார் வீதியில் அமைந்துள்ள கடையும் அதனுடன் சேர்ந்த வீடும் வாடகைக்குண்டு. தொடர்புகளுக்கு: S.துரைராஜா (மிருதங்கவித்துவான்), No.12, இந்து மகளிர் ஒழுங்கை, கந்தர்மடம். (37009)

## மணமகள் தேவை

இந்து, கௌரவ குடும்பத்தைச் சேர்ந்த அரசாங்க அதிகாரியாகக் கடமையாற்றும் 32 வயதுடைய பட்டதாரிக்கு (அனுசம், 13 கிரகபாவம், 5 அடி3") செவ்வாய்க் குற்றமற்ற மணமகனுக்கு அழகிய பெண் தேவை. மணமகள் அரசாங்க அலுவலராக இருத்தல்வேண்டும். உடன் தொடர்புகொள்க. விளம்பர இல:2391, மே/பா உதயன். (சி37841)

யாழ். இந்து, கௌரவ குடும்பத்தைச் சேர்ந்த, 1973 இல் பிறந்த, விசாக நட்சத்திரம், கனடாவில் நிரந்தர வதிவுரிமையுடைய Electronic Designer ஆகக் கடமையாற்றும் மணமகனுக்குப் படித்த, அழகிய மணமகள் தேவை. தொலைபேசி இலக்கம், குறிப்பு ஆகியவற்றை அனுப்பவும். மே/பா விளம்பர இலக்கம்: 2394. (36960)

## சமய சந்நிதிகளில்

கொழும்புத்துறை,செப்.30

கொழும்புத்துறை புனித செபமாலை அன்னை ஆலய வருடாந்தப் பெருவிழா நடைபெற்று வருகின்றது. நவநாள் ஆராதனைகள் தினமும் மாலை 6.15 மணிககு இடம்பெறும். மன்னாரில் இருந்து வருகைதந்துள்ள அருட்திரு.யூட் குரூஸ், றெஜினோல்ட் அடிகள் தலைமையிலான குழுவினர் ஆலயத்தில் தங்கியிருந்து வழிபாடுகளை நடத்திவருகின்றனர்.

நற்கருணைப் பெருவிழா நாளைமறுதினம் சனிக்கிழமை மாலை 6.15 மணிக்கும் திருவிழாத் திருப்பலி மறுநாள் காலை 7 மணிக்கும் தொடர்ந்து தேர்ப்பவனியும் திருச்சொரூப ஆசீரும் இடம்பெறும். (10-30)

* * *

கொழும்புத்துறை,செப்.30

யாழ். றக்கா வீதி, புனித திரேசம்மாள் ஆலய வருடாந்தத் திருவிழா ஆரம்பமாகி நவநாள் ஆராதனைகள் நடைபெற்று வருகின்றன.

நற்கருணை விழா நாளைமறுதினம் சனிக்கிழமை மாலையும் திருவிழாத் திருப்பலி 3ஆம் திகதி ஞாயிற்றுக்கிழமை காலை 7 மணிக்கும் இடம்பெற்று திருச்சொரூப பவனியின் பின்னர் ஆசீரும் இடம்பெறும். (10-30)

## விற்பனைக்கு

யப்பானிலிருந்து இறக்குமதி செய்யப்பட்ட குளிர்சாதனப் பெட்டிகள் (FRIDGE), கடைக்கு உகந்தவை குளிரூட்டிகள் (A/C), உடுப்புக் கழுவும் இயந்திரம், ஜெனெரேட்டர்கள், சைக்கிள்கள் குறைந்தவிலையில் விற்பனைக்குண்டு.

**சித்திவிநாயகர் யப்பான் பசார்**
631, K.K.S. றோட்,
யாழ்ப்பாணம்,
(பன்றிக்கோட்டுப் பிள்ளையார் கோயிலடி)

## பாராட்டி வாழ்த்துகின்றோம்



கோப்பாய் மத்தியைச் சேர்ந்த
இராயப்பு - அரியமலர்
தம்பதிகளின் கனிஷ்ட புத்திரியும்
யா/நாவலர் தமிழ் வித்தியாலய மாணவியுமான

**செல்வி ரெஜிதா**

அவர்கள் 5 ஆம் ஆண்டு புலமைப் பரிசில் பரீட்சையில் சித்தியடைந்ததையிட்டு (139புள்ளிகள்) அவரை மனதார வாழ்த்துவதுடன் அவர் பல்கலையும் பெற்றுக் கல்வியில் தொடர்ந்தும் வெற்றிபெற எமது நல்லாசிகளைத் தெரிவிப்பதுடன், அவர் சித்திபெற ஊக்கமளித்து வழிகாட்டிய அதிபர், ஆசிரியர்கள் அனைவரையும் நன்றியுடன் வாழ்த்துகின்றோம்.

கோப்பாய் மத்தி,
கோப்பாய்.

அன்பு அம்மா, அப்பா, பப்பா, மாமி, அண்ணன்மார், அண்ணிமார், அக்காமார், பிரான்ஸில் வசிக்கும் அண்ணா, மாமா குடும்பம், மச்சாள், அத்தான்மார்.

(37003) (26-34-14)

## இந்திய மீனவர் ஊடுருவலை எதிர்த்து

# உண்ணாவிரதம் இருப்பதற்கு மன்னார் மீனவர்கள் முஸ்தீபு

மன்னார்,செப்.30

இந்திய மீனவர்கள் இலங்கைக் கடற்பகுதிக்குள் அத்துமீறி ஊடுருவித் தொழிலில் ஈடுபடுவதைக் கண்டித்து உண்ணாவிரதப் போராட்டம் ஒன்றில் ஈடுபடுவதற்கான முஸ்தீபுகளில் மன்னார் மாவட்ட மீனவர்கள் ஈடுபட்டுள்ளனர்.

தமது தீர்மானம் தொடர்பாக மன்னார் ஆயர் வண.இராயப்பு ஜோசப்புக்கு அவர்கள் அறிவித்துள்ளனர். அரசு - புலிகள் புரிந்துணர்வு ஒப்பந்தம் கைச்சாத்திடப்பட்டதில் இருந்தே இந்திய மீனவர்களின் சட்டவிரோத ஊடுருவல் அதிகரித்து வந்திருக்கின்றது. இந்திய மீனவர்கள் ட்ரோலர்கள் மூலம் தொழில்செய்வதனால் மன்னார் மீனவர்கள் பல்வேறு கஷ்டங்களை எதிர்கொள்ள வேண்டியுள்ளனர். அத்துடன் பல நஷ்டங்களையும் சந்திக்கின்றனர். இது தொடர்பாக அதிகாரிகளிடமும் சம்பந்தப்பட்டவர்களிடமும் மீனவர்கள் பலமுறை முறைப்பாடு செய்திருந்தனர். எனினும், எந்தவித நடவடிக்கைகளும் எடுக்கபபடவில்லை. இதனால் தாமே நடவடிக்கையில் இறங்கி சில மீன்பிடிப் படகுகளைப் பிடித்துவந்து, பொலீஸாரிடம் ஒப்படைத்தனர். இதனால் இருநாட்டு மீனவர்களிடையேயும் முறுகல் நிலைமைகூட ஏற்பட்டது. ஆனால், இந்திய மீனவர்களின் ஆக்கிரமிப்பு மட்டும் குறையவே இல்லை. நீண்டநாள்களாகத் தொடரும் இந்த விவகாரத்துக்கு எந்தத் தரப்பினரும் தீர்வுகாண முன்வராததை அடுத்து அமைதிவழியில் தமது எதிர்ப்பை வெளிபபடுத்துவதற்கு மீனவர்கள் இப்போது தீர்மானித்திருக்கின்றனர். (க-8)

## யாழ்ப்பாணத்தில் SAAMSTECH இன் ஆங்கில, சிங்கள நேரடி வகுப்பு

**பாடநெறி விளக்கம்:** எந்தவொரு மொழியும் முதலில் கதைக்கப்பட வேண்டும். கதைப்பதற்கு முன் இலக்கணம் கற்பிக்கப்படின் இலக்கண ரீதியான சிந்தனை மூலமாகக் கதைக்கமுடியாதநிலை தோன்றும்.

எமது 24 வகுப்புகள் கொண்ட ஆங்கில வகுப்புகளில் முழுமையாக ஆங்கலத்தினைக் கதைக்கமுடியும். ஆங்கிலம் மூலமான எந்த ஒரு கற்கை நெறியினையும் மேற்கொள்ளமுடியும். ஆங்கிலத்தில் முழுமையான தேர்ச்சி பெறமுடியும்.

எமது 24 வகுப்புகள் கொண்ட சிங்களப் பாடநெறி மூலம் முழுமையாகச் சிங்களத்தினைக் கதைக்கமுடியும். க.பொ.த. சா.த. பரீட்சையில் சிங்கள பாடத்தில் இலகுவாகச் சித்தியடைய முடியும். சிங்களத்தில் முழுமையான தேர்ச்சி பெறமுடியும்.

**சர்வதேச தரத்திலான இப்பாடநெறி மூலம் 24 வகுப்புகளில் முழுமையாகக் கதைக்கமுடியாத அனைவருக்கும் முழுப்பணமும் திருப்பித் தர உத்தரவாதம்.**

**யார் வகுப்புகளில் கலந்துகொள்ளலாம்?**
விரிவுரையாளர்கள், ஆசிரியர்கள், அரச, தனியார் அலுவலர்கள், வங்கியாளர்கள், பல்கலைக்கழக உயர்கல்வி மாணவர்கள், கணனி மாணவர்கள், இளைஞர்கள், யுவதிகள், 8 ஆம் வகுப்புக்கு மேற்பட்ட மாணவர்கள்.

**50%** சலுகை நீடிப்பு: 04.10.2004 வரை பதிவுசெய்யும் அனைவருக்கும் பாடக்கட்டணத்தில் 50% சலுகையுடன் ஆங்கிலம்: ரூபா 3000, சிங்களம்: ரூபா 2000 மட்டும்

**ஒவ்வொருவருக்கும் விரும்பிய நாள்களில் விரும்பிய நேரங்களில் வகுப்புகள்**
யாழ்ப்பாணக் கல்லூரி பட்டதாரிகள் பிரிவு, சுண்டிக்குளி (SAAMSTECH தலைமையகம்) மானிப்பாய் (Nilavu.com.), ஆவரங்கால் (College of Information Technology), நெல்லியடி (கொடிகாமம் வீதி), கோப்பாய் (கோப்பாய் இளைஞர் கழகம்), சாவகச்சேரி (Nilavu.com.), நாவலர் வீதி (COMCITY), பண்டத்தரிப்பு, திருநெல்வேலி உட்படப் பத்துக்கும் மேற்பட்ட இடங்களில் வகுப்புகள்.

**குறிப்பு: 04.10.2004 இற்குப் பின் பதிவுசெய்பவர்கள் வரும் 30.10.2004 நடைபெறவுள்ள தேசிய ஆங்கில டிப்ளோமாப் பரீட்சைக்குத் தோற்றமுடியாது.**

**மேலதிக விவரங்களுக்கும் பதிவுகளுக்கும்: 077 3068968**

**SAAMSTECH**
841, Hospital Road, Jaffna. (சி37865)(34-14-44) 22-1/4, Galle Road, Dehiwala.

## முதலாம் ஆண்டு நினைவலைகள்






| நகுலராஜா இந்திராணி | நகுலராஜா முரளிஸ்கந்தா | ராஜ்குமார் அருந்ததி | ராஜ்குமார் கௌசிகா |
|---|---|---|---|
| தோற்றம் 19✦05✦1949 | தோற்றம் 21✦10✦1984 | தோற்றம் 19✦06✦1972 | தோற்றம் 12✦12✦1999 |

மறைவு
12✦10✦2003

காலமெல்லாம் ஒன்றாக வாழ்வோமெனக்
கண்டிருந்த கனவுகளைக் கலைத்துவிட்டு
ஆறாத வேதனையில் எமை ஆழ்த்திவிட்டு
நால்வரும் ஒன்றாக எமை விட்டுச் சென்றீரோ?
அன்பு மட்டும் ஆறாகி எமை வாட்ட
அவனி விட்டுச் சென்றதேனோ?

213, கஸ்தூரியார் வீதி,
யாழ்ப்பாணம்.
(37005) (26-14-44-34)

தகவல்:
கணவர், தாய், மகன், மகள், சகோதரர்கள், சகோதரிகள், பெறாமக்கள்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# மேற்கிந்தியத் தீவுகள் அணி மீண்டும் வலிமைபெறும் அணியாக மாறும்



லண்டன்,செப்.30

மினி உலகக்கிண்ணத்தைக் கைப்பற்றிய தன் மூலம் மேற்கிந்தியத் தீவுகள் அணி வலிமை மிக்க அணியாக உருவெடுக்கும் என்று அணித் தலைவர் லாரா கூறியுள்ளார்.

மினி உலகக்கிண்ணக் கிரிக்கெட் போட்டியின் இறுதி ஆட்டத்தில் இங்கிலாந்தை வீழ்த்தி மேற்கிந்திய அணி சம்பியன் பட்டத்தை வென்றது. அது குறித்து அணித்தலைவர் லாரா கூறியதாவது:-

இங்கிலாந்தை வீழ்த்தி எமது அணி இமாலய வெற்றியைப் பெற்றுள்ளது. இந்த வெற்றியின் மூலம் சர்வதேச கிரிக்கெட்டில் மேலும் சாதனை நிகழ்த்த முடியும் என்ற நம்பிக்கை ஏற்பட்டுள்ளது.

1975 ஆம் ஆண்டு உலகக் கிண்ணத்தை வென்று தனது பயணத்தைத் தொடங்கிய மேற்கிந்திய அணி வலிமை மிக்க அணியாகத் திகழ்ந்தது. அதேபோல் தற்போது மினி உலகக்கிண்ணத்தைக் கைப்பற்றி இருப்பதன் மூலம் அணி மீண்டும் வலிமை மிகுந்த அணியாக உருவெடுக்கும்.

இங்கிலாந்துக்கு எதிராக சமீபத்தில் ஆடிய 8 டெஸ்ட் போட்டிகளில் 7 போட்டிகளில் தோல்வியைச் சந்தித்துள்ளோம். இந்தத் தோல்விகளை மினி உலகக்கிண்ண வெற்றியின் மூலம் மறந்து விட்டோம்.

9 ஆவது விக்கெட்டுக்காக இணைந்து சிறப்பாக ஆடிய பிறோவ்னே - பிராட்ஷா ஜோடியைப் பாராட்டுகிறேன். இது அணியினரின் கூட்டு முயற்சிக்குக் கிடைத்த வெற்றியாகும்.

71 ஓட்டங்களைக் குவித்த பிறோவ்னே - பிராட்ஷா ஜோடியை கிரிக்கெட் ரசிகர்கள் அனைவரும் பாராட்டவேண்டும் என்று நினைக்கின்றேன். பிராட்ஷா வலைப்பயிற்சியில் ஈடுபடும் போது கூட இந்த மாதிரிச் சிறப்பாக ஆடியதை நான் பார்த்தது இல்லை.

- இவ்வாறு லாரா தெரிவித்துள்ளார்.

தோல்வி குறித்து இங்கிலாந்து அணித் தலைவர் வோகன் கூறியதாவது:-

கடைசி வரை நிலைத்து நின்று ஆடிய பிறோவ்னே - பிராட்ஷா ஜோடியைப் பாராட்டுகிறேன். ரெஸ்கோதிக் சிறப்பாக ஆடி சதம் அடித்ததுடன் அணி கௌரவமான ஓட்ட எண்ணிக்கையை எட்டவும் உதவினார்.

பிறோவனே - பிராட்ஷா ஜோடி 8 விக்கெட்டுகள் விழுந்தபோதிலும் துல்லியமாகப் பந்தை எதிர் கொண்டு ஆடி ஆட்டத்தின் போக்கையே மாற்றி அமைத்து விட்டனர். சூரிய வெளிச்சம் குறைவாக இருந்த நிலையிலும் 90 மைல் வேகத்தில் வந்த பந்தைக்கூட இந்த ஜோடி நம்பிக்கையுடன் எதிர்கொண்டு ஆடியது பாராட்டுதலுக்குரியது ஆகும் - என்றார். (10)

## ஆஸ்திரேலிய அணியின் துணைத் தலைவராக லீமன்

சிட்னி,செப்.30

இந்தியாவுக்கு எதிரான முதலாவது டெஸ்ட் கிரிக்கெட்டில் காயம் காரணமாக அணித் தலைவர் ரிக்கி பொண்டிங் விளையாடமாட்டார். எனவே, முதலாவது டெஸ்டுக்கான ஆஸ்திரேலிய அணிக்கு கில்கிறிஸ்ட் அணித்தலைவராக நியமிக்கப்பட்டுள்ளார்.

இந்த நிலையில் துணைத்தலைவராக சகலதுறை வீரர் லீமன் தெரிவுசெய்யப்பட்டுள்ளார். (10)

## சாயிபாபாவை தரிசித்தார் சச்சின் டெண்டுல்கர்

புதுடில்லி,செப்.30

சச்சின் டெண்டுல்கர் தனது குடும்பத்துடன் சாயிபாபா கோயிலுக்குச் சென்று தரிசனம் செய்துள்ளார். கடந்த 40 நாள்களாக சச்சின் காயத்தால் அவதிப்பட்டு வருகிறார். இதனால் கிரிக்கெட் போட்டிகளில் பங்கேற்க இயலாத அவர் ஓய்வு எடுத்து வருகின்றார்.

இன்னும் சில நாள்களில் டாக்டர் ஆனந் ஜோஷியை சந்தித்து காயத்தின் தன்மை குறித்து சச்சின் பரிசோதனை செய்ய உள்ளார். அதற்கு முன்னர் சாய்பாபா கோயிலுக்குச் சென்று தரிசனம் செய்துள்ளார் சச்சின்.(10)

# இந்திய அணியுடனான டெஸ்ட்டில் ஷேன்வோர்ன் நன்கு பிரகாசிப்பார்

## பயிற்சியாளர் புச்சானன் நம்பிக்கை



புதுடில்லி,செப்.30

இந்தியாவுக்கு எதிரான டெஸ்ட் கிரிக்கெட் போட்டித் தொடரில் ஆஸ்திரேலிய அணியின் சுழற்பந்து வீச்சாளர் ஷேன் வோர்ன் விஸ்வரூபவம் எடுப்பார் என்று பயிற்சியாளர் ஜோன் புச்சானன் நம்பிக்கை தெரிவித்துள்ளார்.

4 டெஸ்ட் போட்டிகளில் விளையாடுவதற்காக ஆஸ்திரேலிய அணி இந்தியா வந்துள்ளது. இந்த நிலையில், ஆஸ்திரேலிய முன்னணி சுழற்பந்து வீச்சாளரான ஷேன்வோர்ன் இந்தியாவுக்கு எதிரான தொடரில் சிறப்பாகப் பந்து வீசுவார் என்று அந்த அணியின் பயிற்சியாளர் புச்சானன் கூறியுள்ளார். இது தொடர்பாக அவர் கூறியதாவது:-

2001ஆம் ஆண்டு ஆஸ்திரேலிய அணி இந்தியாவுக்கு வந்தபோது வோர்னுக்கு அதிக அளவில் நெருக்கடி இருந்தது. சிறப்பாகப் பந்து வீசி விக்கெட்டைக் கைப்பற்றவும் வேண்டும், அதேநேரத்தில் அதிக ஓட்டங்களை விட்டுக் கொடுக்காமலும் இருக்கவேண்டும் என்ற நிலை இருந்தது. ஆனால், தற்போது அந்த நிலை இல்லை. ஏனெனில், ஆஸ்திரேலிய அணியில் பல முன்னணி பந்துவீச்சாளர்கள் இடம்பெற்றுள்ளனர் என்பதுதான் அதற்குக் காரணம் ஆகும்.

எனவே, இந்தியாவுக்கு எதிரான டெஸ்ட் தொடரில் வோர்ன் எந்தவிதமான நெருக்கடியும் இன்றி விஸ்வரூபம் எடுத்துப் பந்துவீசுவதுடன் அதிகளவில் விக்கெட்டுக்களையும் கைப்பற்றுவார் என்ற நம்பிக்கை உள்ளது.

மேலும் 2001ஆம் ஆண்டு சுற்றுப்பயணத்தின் போது வோர்ன் முழு உடற் தகுதியுடல் இருக்கவில்லை. ஆனால், தற்போது அவர் நல்ல நிலையில் உள்ளார்.

போதை மருந்து பயன்படுத்தியது கண்டு பிடிக்கப்பட்டதைத் தொடர்ந்து விதிக்கப்பட்ட ஒரு ஆண்டு தடைக்குப் பின்னர் களம்புகுந்த வோர்ன் தற்போது சிறப்பாகப் பந்துவீசி வருகிறார். இலங்கைக்கு எதிராக அவர் 3 டெஸ்ட் போட்டிகளில் பந்து வீசி 26 விக்கெட்டுக்களைக் கைப்பற்றியுள்ளார். இந்தியாவுக்கு எதிராகவும் வோர்ன் சிறப்பாகப் பந்துவீசுவார் என்பதற்கு இது ஒரு முன் உதாரணமாகும். என்று புச்சானன் தெரிவித்துள்ளார். (10)



கொரியாவில் நடைபெற்ற சர்வமதங்களுக்கிடையிலான விளையாட்டுப் போட்டியில் பங்குபற்றிச் சாதனை படைத்த வலி.வடக்கைச் சேர்ந்த சி.கமலமோகன் மற்றும் அவரது பயிற்றுவிப்பாளரான செ.ரமணன் ஆகியோரைக் கௌரவிக்கும் நிகழ்வு அண்மையில் நடைபெற்றது.

நிகழ்வில் நாடாளுமன்ற உறுப்பினர் திருமதி பத்மினி சிதம்பரநாதன் உரையாற்றுவதையும், யாழ்.மாவட்ட மெய்வல்லுநர் பயிற்றுவிப்பாளர் பா.கிருபாகரன், சி.கமலமோகன், பயிற்றுவிப்பாளர் செ.ரமணன், ப.இராஜலோகன், வலி.வடக்கு உதவிப் பிரதேச செயலர் திருமதி எ.அன்ரன் யோகநாயகம் ஆகியோர் அமர்ந்திருப்பதையும் படத்தில் காணலாம். *(படம்: தெல்லிப்பழைச் செய்தியாளர்)*

# இறுதிப் போட்டியும் பரிசளிப்புவிழாவும்

யாழ்ப்பாணம்,செப்.30

யாழ். மாவட்ட வலைப்பந்தாட்டச் சங்கத்தினால் நடத்தப்பட்ட வலைப்பந்தாட்டச் சுற்றுப் போட்டியின் இறுதிப்போட்டியும் பரிசளிப்பு விழாவும் கடந்த செவ்வாய்க்கிழமை யாழ். பொது விளையாட்டரங்கில் இடம்பெற்றன.

யாழ். மாவட்ட வலைப்பந்தாட்டச் சங்கத் தலைவி திருமதி எஸ்.சிவச்சந்திரன் தலைமையில இடம்பெற்ற இந்நிகழ்விற்கு பிரதம விருந்தினர்களாக ஓய்வு பெற்ற மேலதிக அரச அதிபர் திருமதி ப.திலகநாயகம்போல், யாழ். மாவட்ட அரசியல்துறை மகளிர் பொறுப்பாளர் கயல்விழி மற்றும யாழ். மாவட்ட விளையாட்டுத் துறைப் பொறுப்பாளர் மாதுளன் ஆகியோர் கலந்துகொண்டனர்.

கலப்பு வலைப்பந்தாட்டப் போட்டியில் முதலாம் இடத்தை அரியாலை ஐக்கிய விளையாட்டுக் கழகம் 32:11 என்ற புள்ளி அடிப்படையில் வென்றது. இரண்டாம் இடத்தை யுத்கார்மல் விளையாட்டுக் கழகமும், மூன்றாம் இடத்தை யாழ். பல்கலைக்கழக விளையாட்டு விஞ்ஞான அலகு அணியும் பெற்றன.

பெண்களுக்கான வலைப்பந்தாட்டப் போட்டியில் முதலாம் இடத்தை யாழ். பல்கலைக் கழக அணி 40:38 என்ற புள்ளியடிப்படையில் வென்றது. இரண்டாம் இடத்தை யூனியன்ஸ் விளையாட்டுக் கழக அணி வென்றது.

நிகழ்வில் இவர்களுக்கான சான்றிதழ்களும் வெற்றிக்கிண்ணங்களும் வழங்கப்பட்டன. (10-190-202)

# விளையாட்டு

## இந்திய மண்ணில் விளையாடும் நாளை பாகிஸ்தான் வீரர்கள் ஆவலுடன் எதிர்பார்ப்பு

கராச்சி, செப்.30

இந்திய அணியுடன் இந்தியாவில் விளையாடுவதற்கு மிகவும் ஆவலாக உள்ளோம் என பாகிஸ்தான் அணித்தலைவர் இன்சமாம் உல் ஹக் தெரிவித்துள்ளார்.

நான் மட்டுமல்ல, அணி வீரர்கள் அனைவருமே இந்தியாவுடனான சுற்றுப்பயணத்தை மிகவும் எதிர்பார்த்துள்ளோம் என சர்வதேச செய்தி நிறுவனத்துக்கு அளித்துள்ள பேட்டியில் அவர் கூறியுள்ளார்.

இந்தியாவுக்கு எதிராகத் கடந்த மார்ச் மற்றும் ஏப்ரலில் எமது நாட்டில் விளையாடியதைக் காட்டிலும் சிறந்த ஆட்டத்தைச சமீபகாலமாக வெளிப்படுத்தி வருகிறோம். ஆதலால், இந்தியாவுடனான தொடரிலும் சிறந்த ஆட்டத்தையே ஆடுவோம் என நம்புகிறேன்.

இந்தியா, பாகிஸ்தான் ஆட்டத்தை உலக ரசிகர்கள் மிகவும் ஆவலுடன் எதிர்பார்க்கின்றனர். அதனால் கிரிக்கெட் ஆட்டமும் மேம்பாடு அடைந்துகொண்டே செல்கிறது. அதேசமயம், இந்தியாவுடன் விளையாடும்போது ஆட்டத்திறன் மிகவும் மெருகடைகிறது என்றார் இன்சமாம் உல் ஹக்.

இந்தியா, பாகிஸ்தான் இடையிலான உறவு சுமுகமானதையடுத்து பல ஆண்டுகளுக்குப் பிறகு கடந்த மார்ச், ஏப்ரலில் இந்திய அணி பாகிஸ்தான் சென்று விளையாடியது.

அப்போது, டெஸ்ட் மட்டுமல்லாது ஒருநாள் தொடரையும் கைப்பற்றி சரித்திரம் படைத்தது கங்குலி தலைமையிலான இந்திய அணி.

அதேசமயம், பாகிஸ்தான் அணி கடைசியாக 1999இல் இந்தியாவில் விளையாடியுள்ளது. அதற்குப் பிறகு அடுத்த ஆண்டு பெப்ரவரியில் இந்தியா வர உள்ளது பாகிஸ்தான் அணி. (10)

# சுண்டுக்குழி சனசமூக நிலையத்தின் விளையாட்டுப்போட்டி முடிவுகள்

யாழ்ப்பாணம்,செப்.30

சுண்டுக்குழி சனசமூக நிலையத்தின் 76 ஆவது ஆண்டு நிறைவு தினத்தை முன்னிட்டு அண்மையில் ஆண்கள், பெண்களுக்கான சைக்கிள் ஓட்டம், ஆண்களுக்கான மரதன் ஓட்டம் கரபந்தாட்டம் போன்ற போட்டிகள் இடம்பெற்றன.

ஆண்களுக்கான 30 கிலோமீற்றர் சைக்கிளோட்டப் போட்டியில் முதலாம் இடத்தை எம்.ஞானம், இரண்டாம் இடத்தை பி.சதீஸ், மூன்றாம் இடத்தை எஸ். புலேந்திரன் ஆகியோர் பெற்றனர்.

பெண்களுக்கான 15 கிலோமீற்றர் சைக்கிளோட்டப் போட்டியில் முதலாம் இடத்தை வை.சியாளினி, இரண்டாம் இடத்தை கே.டொறின் மூன்றாம் இடத்தை வை.உஷாளினி ஆகியோர் பெற்றனர்.

ஆண்களுக்கான மரதன் ஓட்டப் போட்டியில் முதலாம் இடத்தை ஜே.ஜெதாஸ், இரண்டாம் இடத்தை எ.பத்மராஜா, மூன்றாம் இடத்தை எ.அரவிந்தன் ஆகியோர் பெற்றனர்.

கரபந்தாட்டப்போட்டியில் (ஓவர் கேம்) முதலாம் இடத்தை ஈச்சமோட்டை சனசமூக நிலைய அணியும் இரண்டாம் இடத்தை சுண்டுக்குளி சனசமூக நிலைய அணியும் பெற்றன.

வெற்றி பெற்றவர்களுக்கான பரிசில்களை வழங்கும் நிகழ்வில் யாழ்.மாநகர ஆணையாளர் கலாநிதி க.குணராசா [illegible] நாடாளுமன்ற உறுப்பினர் [illegible] கலந்துகொ[illegible] பரிசில்களை வழங்கிக் கௌரவித்தனர். (10-190-202)



கைத்டி நுணாவில் மாதர் முன்பள்ளியின் வருடாந்த விளையாட்டு விழாவில் வெற்றியீட்டிய மாணவன் ஒருவருக்கு கைதடி நுணாவில் கிராம அலுவலர் தி.மகேந்திரன் பரிசில் வழங்குவதைப் படத்தில் காணலாம். (10)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# கண்ணீர் அஞ்சலி

எமது பாடசாலையில் ஊழியராகப் பணியாற்றும்
திரு.முத்துசாமி கமலநாதன் அவர்களின் பாசமிகு தந்தையாரான
**அமரர் அண்ணாமலை முத்துசாமி**
அவர்கள் காலமாகிவிட்டார். அவரது மறைவையொட்டி துயருற்றிருக்கும் அன்னாரது குடும்பத்தினருக்கு எமது ஆழ்ந்த அனுதாபங்களைத் தெரிவித்துக் கொள்வதுடன், அன்னாரின் ஆத்ம சாந்திக்காகப் பிரார்த்திக்கின்றோம்.

அதிபர், ஆசிரியர்கள்,
யா/யூனியன் கல்லூரி,
யா/பொன்பரமானந்தர் வித்தியாசாலை,
தெல்லிப்பழை.

(37027)(21-17-46)


# அபிவிருத்தி அதிர்ஷ்டம்

## உத்தியோகபூர்வ முடிவுகள்

| | | | |
|---|---|---|---|
| சீட்டிழுப்பு வாரம் | 616 | டிக்கட்டின் நிறம் - நீலம் | |
| திகதி | 28-09-2004 | செல்லுபடியாகும் தொடர் இல. 4969386-4981031 | |

லக்கினம் தனுசு

வெற்றி இலக்கங்கள்

**07 24 28 33**

ஜக்பொட் பரிசு ரூபா.10,00,000/- வெல்லப்பட்டுள்ளது

இந்த வெல்லப்படவில்லை ஜக்பொட் ரூபா. 15,78,200/-

| இணையும் இலக்கங்கள் | வெற்றியாளர் தொகை | பரிசுத் தொகை(ரு.) | மொத்தப் பரிசுத் தொகை(ரு.) |
|---|---|---|---|
| 1.இல | 2,58,997 | 10/- | 25,89,970/- |
| 2.இலக்கங்கள் | 23,777 | 20/- | 4,75,540/- |
| 1.இல + லக்கினம் | 23,516 | 30/- | 7,05,480/- |
| 2.இல + லக்கினம் | 2,155 | 100/- | 2,15,500/- |
| 3.இலக்கங்கள் | 620 | 500/- | 3,10,000/- |
| 3.இல + லக்கினம் | 69 | 5,000/- | 3,45,000/- |
| 4.இலக்கங்கள் | 03 | 1,00,000/- | 3,00,000/- |
| 4.இல + லக்கினம் | - | 10,00,000/- | - |
| மொத்தம் | 3,09,142 | - | 60,71,740/- |

மொத்த பரிசுத் தொகை ரூபா. 60,71,740/-

தொடர் இல. 5942897 க்கு மேற்பட்ட சிவப்பு நிற டிக்கட்டுக்கள் 2004 செப்டம்பர் 01ம் திகதி வெல்லப்படவில்லை செல்லுபடியாகும். வெற்றி பெறும் டிக்கட்டுக்கள் 6 மாதங்கள் செல்லுபடியாகும்

அபிவிருத்தி அதிர்ஷ்ட சீட்டிழுப்பில் பணப்பரிசு வெற்றி பெறாத டிக்கட்டுக்களில் முச்சக்கர வண்டி வெற்றி பெறும் 5 டிக்கட்டுக்களின் தொடர் இலக்கங்கள்

4974094-9-25
4976184-8-75
4973692-3-69
4970100-6-24
4973609-2-51

வளமான வாழ்விற்கு அபிவிருத்தி வெற்றி

அபிவிருத்தி லொத்தர் சபை
இல. 33 செண்ற் மைக்கேல் வீதி, கொள்ளுப்பிட்டி, கொழும்பு 03.

# முதிய விவசாயிகள் கௌரவிப்பு நாளையதினம் கொழும்பில்

யாழ்ப்பாணம்,செப்.30

விவசாயக் கால்நடை நீர்ப்பாசன அமைச்சு அகில இலங்கை ரீதியில் நடத்திய முதிய விவசாயிகள் தெரிவில் யாழ். மாவட்டத்தைச் சேர்ந்த விவசாயி ஒருவர் தெரிவுசெய்யப்பட்டுள்ளார்.

சர்வதேச முதியோர் தினத்தையொட்டி விவசாயக் கால்நடை அமைச்சு ஏற்பாடு செய்திருந்த முதிய விவசாயிகள் தெரிவு மாவட்ட ரீதியாக நடைபெற்றது.

ஒவ்வொரு மாவட்டத்திலும் தலா ஒருவர் என்ற வீதத்தில் தெரிவுகள் இடம்பெற்றுள்ளன.

இதில் யாழ்.கமநல அபிவிருத்தித் திணைக்களத்தினூடாக மானிப்பாய் மேற்கு விவசாய சம்மேளனத் தலைவர் சி.பொ.வ.க.முதலியார் என்பவர் யாழ். மாவட்ட முதிய விவசாயியாகத் தெரிவு செய்யப்பட்டுள்ளார்.

இவர்களுக்கான கௌரவிப்பு நிகழ்வு நாளை வெள்ளிக்கிழமை கொழும்பு 7 இல் உள்ள ஹெலத் ஏஜலங்கா சமாஜ மண்டபத்தில் நடைபெறவுள்ளது.

இவர்களுக்கான கௌரவிப்பு நிகழ்வில் 25 ஆயிரம் ரூபா ஊக்கிவிப்புப் பணமும் தங்கப் பதக்கமும் வழங்கப்படவுள்ளன.

(10-13)


யா/ஏழாலை மகாவித்தியாலயம்

# பாராட்டி வாழ்த்துகிறோம்

தரம் - 5 (2004) புலமைப்பரிசில் பரீட்சையில்
சித்திபெற்ற எமது இரு மாணவிகள்
பி.கனிஸ்ரா - (130 புள்ளி), சீ.ஜென்சி - (128 புள்ளி)
ஆகியோரைப் பாராட்டி வாழ்த்துகிறோம்.

(சி-37914)(21-17-46) அதிபர், ஆசிரியர்கள், மாணவர்கள்.

# கிளிநொச்சியில் SAAMSTECH இன் இலவச ஆங்கில நேரடி வகுப்பு

ஒரு மணி நேரத்தில் முழுமையாக ஆங்கிலத்தில் கதைக்கமுடியும்.
சந்தேகம் வேண்டாம். இதுவரை ஐம்பதாயிரத்துக்கு மேற்பட்டோர் பயிற்சிபெற்று நிரூபிக்கப்பட்ட பாடநெறி.

இடம்: பண்பாட்டு மண்டபம், கிளிநொச்சி.
காலம்: 02.10.2004 சனிக்கிழமை.

## அனுமதி இலவசம்

பாடசாலை மாணவர்கள், பெற்றோர், கணனி, உயர்கல்வி மாணவர்கள், பல்கலைக்கழக மாணவர்கள், வீட்டுப்பெண்கள், இளைஞர், யுவதிகள் பட்டதாரிகள், அரச, தனியார் அலுவலர்கள், ஆசிரியர்கள் அனைவரும் கலந்துகொள்ளலாம்.

கலந்துகொள்ளும் அனைவருக்கும் கற்கைநெறி வழிகாட்டியும்.
கலந்துகொண்டதற்கான சான்றிதழும் இலவசம்.

குறிப்பு: கடந்த காலங்களில் வகுப்புகளில் கலந்து சான்றிதழைப் பெறாதவர்கள் நேரடியாக வந்து சான்றிதழைப் பெற்றுக்கொள்ளலாம். எமது பாடநெறிகளுக்கான புத்தகங்கள் கிடைக்கப் பெறாதவர்களும் நேரடியாகப் பெற்றுக்கொள்ளலாம்.

**SAAMSTECH**

**Psalm Institute of Engineering & Technology**

(சி37909) 841, Hospital Road, Jaffna. **0773-068968** (34-46-17)

HNB

இன்று முதல் நெல்லியடியில்.....



(CJ37917) UTHAYAN Graphics

வடமராட்சி மக்களுக்கு
சேவை புரிய இன்று
(30.09.2004)
தொடக்கம்
**ஹற்றன் நஷனல் வங்கி**
வாடிக்கையாளர்
நிலையம்
இல.30; பிரதான வீதி,
நெல்லியடியில்
கோலாகலமாகத்
திறந்து
வைக்கப்படுகின்றது.
அனைவரையும்
அன்புடன்
அழைக்கின்றோம்.

HNB


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# கண்ணீர் அஞ்சலி

எமது அரசினர் சித்த போதனா வைத்தியசாலையில்
வைத்திய அதிகாரியாகக் கடமையாற்றி ஓய்வுபெற்ற

## வைத்திய கலாநிதி S.A.குஞ்சிதபாதம்

அவர்களின் மறைவு குறித்து அன்னாரின் குடும்பத்தினருக்கு எமது ஆழ்ந்த அனுதாபங்களைத் தெரிவிப்பதுடன், அன்னாரது ஆத்மா சாந்தியடைய இறைவனைப் பிரார்த்திக்கின்றோம்.

*அரசினர் சித்த போதனா வைத்தியசாலை, கைதடி.*

வைத்திய பொறுப்பதிகாரியும், வைத்திய உத்தியோகத்தர்களும் மற்றும் உத்தியோகத்தர்களும்.

(37036)(43-12-15)

# கண்ணீர் அஞ்சலி

யாழ்.இந்து ஆரம்ப பாடசாலை ஆசிரியை
திருமதி பி.தியாகலிங்கம்
அவர்களின் அன்புத் துணைவர்

## இ.தியாகலிங்கம்

அவர்கள் இறைபதம் எய்தியமையை அறிந்து மிக்க அதிர்ச்சி அடைந்தோம். அவரது குடும்பத்தாருக்கு எமது ஆழ்ந்த அனுதாபத்தைத் தெரிவிப்பதுடன், அன்னாரின் ஆத்மா சாந்தியடையப் பிரார்த்திக்கின்றோம்.

அதிபர், ஆசிரியர்கள், மாணவர்கள், பாடசாலை அபிவிருத்திச் சங்கம், பழைய மாணவர் சங்கம்.

யாழ்.இந்து ஆரம்ப பாடசாலை. யாழ்ப்பாணம்.

(37026)(17-46-32-12-15)

# 90ஆம் நாள் நினைவஞ்சலி

அமரர்

## நாகராசா மனோகரன்

தோற்றம் 25.03.1975 மறைவு 03. 07.2004



*பாசமொடு எமையெல்லாம் பரிந்துமே நோக்கும்*
*பார்போற்றும் உத்தமனே பண்புடை வித்தகனே*
*தேசுமுகம் தெளிவூட்டத் தெவிட்டாமற் பேசும்*
*சிரிப்புதனையூட்டுகிற திறலோனே நீரையா*
*நேசமிகுபெற்றோரும் நேர்த்தியாம் சோதரரும்*
*நானிலத்தே காணாமல் நலிந்துமே*
*– வாடுகின்றார்*
*நீசமாம் உலகென்று நினைத்தீரோ சொல்லையா*
*நிமலனது திருவடியை சேர்ந்தீரோ கூறுமையா!*

*வண்ணாங்கேணி, பளை.*

(37021)(42-12-15-43)

நித்தமும் உன் நினைவால் வாடும்:
**குடும்பத்தினர்.**

# மரண அறிவித்தல்கள்

## பிச்சாண்டி தம்பு திருநாவுக்கரசு

**(மக்கள் வங்கி பணிநிலை உத்தியோகத்தர், யாழ்.உதைபந்தாட்ட மத்தியஸ்தர்)**



432/2, மடம் வீதி யாழ்ப்பாணத்தைப் பிறப்பிடமாகவும் 12ஆம் வட்டாரம், கிழக்கு புங்குடுதீவை வசிப்பிடமாகவும் 37, மண்பிட்டி வீதி, நாவாந்துறை, யாழ்ப்பாணத்தைத் தற்போதைய முகவரியாகக் கொண்ட பிச்சாண்டி தம்பு திருநாவுக்கரசு அவர்கள் நேற்று (29.09.2004) புதன்கிழமை காலமாகிவிட்டார்.

அன்னார் காலஞ்சென்ற தம்பு நாகமுத்து தம்பதிகளின் அருமை மகனும் காலஞ்சென்ற மார்க்கண்டு மாரிமுத்துவின் அன்பு மருமகனும் சவுந்தலாதேவி, தேவிகா ஆகியோரின் அன்புக் கணவரும் சபேஷன், சுதர்ஷன், சோபிகா, சுவர்ணமுகி, சௌமியன், சாம்பவி, சிம்மியா ஆகியோரின் அன்புத் தந்தையும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் இன்று (30.09.2004) வியாழக் கிழமை நண்பகல் 12மணியளவில் நடைபெற்று, பூதவுடல் யாழ். கொட்டடி வில்லூன்றி மயானத்தில் தகனஞ்செய்யப்படும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

*இல37,மண்பிட்டி வீதி, நாவாந்துறை.*

(37042)(35-12-15-43)

தகவல்: குடும்பத்தினர்

## G.S. ஜெயானந்தன்



உரும்பிராயைப் பிறப்பிடமாகவும் கொக்குவிலை வசிப்பிடமாகவும் கொண்ட G.S.ஜெயானந்தன் அகாலமரணமானார்.

அன்னார் அமரர் T.D. ஜெயரட்ணம் (சுகிர்தம்) - இராணி தம்பதிகளின் அன்பு மகனும் தையல்நாயகியின் (இராணி) அன்புக் கணவரும் சொலோமி சர்மிளா (நோர்வே), ஸ்ரீபன் மகிந்தன் ஆகியோரின் அன்புத் தந்தையும் திருமதி ஜோய்ஸ் பத்மினி வேதநாயகம் சில்வா (வவா), கிளடிஸ் ஜெயராணி (ஜெயபுரம்), அருட்திரு.ஜெயச்சந்திரன், திருமதி ஜெயரூபி செல்வராசா, ஜெயந்தன் (டென்மார்க்) ஆகியோரின் அன்புச் சகோதரனும் வேதநாயகம் சில்வா, செல்வராணி, ஜெயசுதாசன், திருமதி ஜெயந்தன் ஆகியோரின் மைத்துனரும் ஆவார்.

அன்னாரது அடக்க ஆராதனை இன்று (30.09.2004) வியாழக் கிழமை உரும்பிராய் கிறிஸ்தவ சேமக்காலையில் நடைபெறும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

*உரும்பிராய் தெற்கு, உரும்பிராய்.*

(37041)(29-12-15-43)

தகவல்: வேதநாயகம் சில்வா (மைத்துனர்).

## கூட்டம்

ஊர்காவற்றுறை பிரதேச ஒருங்கிணைப்புக் குழுகூட்டம் இன்று காலை 10 மணிக்கு உதவி அரச அதிபர் க.ஸ்ரீமோகனின் தலைமையில் பிரதேச செயலக மண்டபத்தில் நடைபெறவுள்ளது.

கணித, விஞ்ஞான அசிரியர்கள்
உடன் தேவை
தொடர்பு:- தலைமை ஆசிரியர் (After 2 p.m.)
THE ROYAL COLLEGE OF JAFFNA,
(426) 302,K.K.S. Rd.,Jaffna. (37032)

# தவறிவிட்டது

13பவுண் நிறையுடைய தாலிக்கொடி ஒன்று நேற்று யாழ் நகரிற்கும் மல்லாகத்திற்கும் இடையில் தவறிவிட்டது.

தயவுசெய்து கண்டெடுத்தவர்கள்
நித்தியா ஸ்பொட்,
கே.கே.எஸ்.வீதி, சுன்னாகம்
T.P.0602213428 எனும் முகவரியுடன்
தொடர்புகொள்ளவும்
சன்மானம் வழங்கப்படும்

(37051)(35)

## 1ST.IN COM., G.A.Q

**யாழ்.பல்கலைக்கழக வெளிவாரிப் பட்டப்படிப்புகள்.**

- மேற்படி கற்கை நெறிகளுக்கான விண்ணப்பங்கள் கோரப்பட்டுள்ளன.
- பதிவுகளுக்குரிய ஒழுங்குகள் எம்மால் செய்து தரப்படும்.

விரிவுரைகள் ஆரம்பம்:- 02-10-2004
சனி - 8.00 (ப.நே.)

**D.C.M.**
பருத்தித்துறை வீதி, யாழ்ப்பாணம்.

(37047)

S. வரதராஜன்.
இயக்குநர். D.C.M.

## புலமைப் பரீட்சையில் சித்தியடைந்த மாணவர்களுக்கு

**ஞானக் குழந்தை கல்விக் கழகத்தின்**

ஆசிரியர் திரு.வே.அன்பழகன் அவர்களிடம் கல்வி கற்ற மாணவர்களில் சித்தியடைந்தோர் இன்றும் (30.09.2004), நாளையும் (01.10.2004) பிற்பகல் 4 மணிக்கு தங்கள் பெயர்களை ஞானக் குழந்தை கல்வி நிலையத்திற்கு வந்து பதிவு செய்துகொள்ளவும்.

- ஆசிரியர்.(C/37920)(35)

## உரிமை தத்துவத்தை இரத்து செய்தல்

584 (312), ஆஸ்பத்திரி வீதி, யாழ்ப்பாணம் எனும் முகவரியில் வசித்தவரும் தற்பொழுது 125 1/1, சன்னங்காரா வீதி, களுபோவலை, தெஹிவளை எனும் முகவரியில் வசிப்பவரும் ஆகிய நமசிவாயம் செட்டியார் கந்தையாசெட்டியார் (N.I.C 501752924V) ஆகிய நான் மூளாய் கிழக்கு, சுழிபுரத்தில் வசிப்பவர் ஆகிய கனகரத்தினம் பாலசிங்கம் என்பவருக்கு (N.I.C 513623623V) பார்வை இடும் தத் துவத்தை 186/14-12-98 இல் கொடுத்து இருந்தேன். இந்தத் தத்துவத்தை இந்நாளிலிருந்து (30.09.04) இரத்து செய்துகொள்கின்றேன். என்பதை இலங்கை சோ[illegible]சு குடியரசு மக்களுக்கு இத்தால் அறியத்தருகின்றேன். இத்திகதியிலிருந்து அல்லது அதன் பின்னரோ அவருடன் மற்றவர்கள் கொடுக்கல் வாங்கல் வைத்திருந்தால் அதற்கு நானோ நான் கற்பித்தவர்கள் பாத்திரவாழிகள் அல்ல என்பதை உறுதிப்படுத்துகின்றேன்.

(சி-37913) - ந.கந்தையாசெட்டியார்.















# மரண அறிவித்தல்கள்

## இராசையா தியாகலிங்கம்

**(உருத்திரபுரம் கிராம சேவையாளர்)**

புங்குடுதீவு 2 ஆம் வட்டாரத்தைப் பிறப்பிடமாகவும் கிளிநொச்சி, உருத்திரபுரத்தை வசிப்பிடமாகவும் கொண்ட இராசையா தியாகலிங்கம் (உருத்திரபுரம் கிராமசேவையாளர்) நேற்றுமுன்தினம் (28.09.2004) செவ்வாய்க்கிழமை காலமாகிவிட்டார்.

அன்னார் காலஞ்சென்றவர்களான இராசையா-அன்னம்மா தம்பதிகளின் அன்பு மகனும் காலஞ்சென்றவர்களான ஐயம்பிள்ளை பொன்னம்மாவின் அன்பு மருமகனும் பிறேமாவதியின் (ஆசிரியர், யாழ்.இந்து. ஆரம்ப பாடசாலை) அன்புக் கணவரும் தசீதன் (யா/யாழ்.இந்துக் கல்லூரி), தனுஷன் (யா/கொக்குவில் இந்துக் கல்லூரி), [illegible], தர்சிகன் (யாழ்.இந்து ஆரம்பப் பாடசாலை) ஆகியோரின் அன்புத் தந்தையும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் பற்றிய விவரம் பின்னர் அறிவிக்கப்படும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

*இல.100,D 10, உருத்திரபுரம்.*

(37044)(29-12-15)

தகவல்: தி.பிறேமாவதி (மனைவி).

## செபஸ்ரியாம்பிள்ளை றெஜீனம்மா

**(இராசம்மா)**

போயிட்டி, இளவாலையைப் பிறப்பிடமாகவும் புத்தளத்தைத் தற்காலிக வசிப்பிடமாகவும் கொண்ட செபஸ்ரியாம்பிள்ளை றெஜீனம்மா (இராசம்மா) 25-09-2004 இல் காலமானார்.

அன்னாரின் பூதவுடல் இன்று (30-09-2004) வியாழக்கிழமை மாலை 3மணியளவில் போயிட்டி புனித லூர்து அன்னை ஆலயத்தில் நடைபெறும் திருப்பலியைத் தொடர்ந்து நல்லடக்கத்திற்காக போயிட்டி சேமக்காலைக்கு எடுத்துச்செல்லப்படும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

போயிட்டி, இளவாலை.

(36971) (26-17-46)

தகவல்: S.சூசைராசா (மகன்)

## திருமதி சரவணபவன் சறோஜினி

அரியாலையைப் பிறப்பிடமாகவும் வசிப்பிடமாகவும் கொண்ட திருமதி சரவணபவன் சரோஜினி நேற்று (29.09.2004) புதன்கிழமை காலமானார்.

அன்னார் சரவணபவனின் அன்பு மனைவியும் காலஞ்சென்றவர்களான இராசதுரை-இலட்சுமிப்பிள்ளை தம்பதிகளின் அன்பு மகளும் காலஞ்சென்ற குமாரசாமி (சொக்கலிங்கம் ஆசிரியர்) மற்றும் இராசம்மா தம்பதிகளின் அன்பு மருமகளும் சசிகரன், சகிலா, சகிரதா, உஜா, சஜிதா ஆகியோரின் அன்புத் தாயாரும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் பற்றிய விவரம் பின்னர் அறிவிக்கப்படும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

*இல.30, குகன் வீதி, அரியாலை.*

(37035)(43-12-15)

தகவல்: கணவர்.

## திருமதி மேரி புளோறன்சியா பவுண் (கிறிசாந்துஸ்)



குருநகரைப் பிறப்பிடமாகவும் வசிப்பிடமாகவும் கொண்ட திருமதி புளோறன்சியா (பவுண்) கிறிசாந்துஸ் அவர்கள் 27.09.2004 திங்கட்கிழமை காலமாகிவிட்டார்.

அன்னார் மனவல் கிறிசாந்துஸ் (ஓய்வுபெற்ற தபால் அதிபர், யாழ்ப்பாணம்) அவர்களின் அன்பு மனைவியும் காலஞ்சென்றவர்களான செல்லத்துரை கிளமெண்டா அவர்களின் அன்பு மகளும் காலஞ்சென்றவர்களான மனவல் - தங்கராசம்மாவின் அன்பு மருமகளும் நெவில் (சவூதி), யூட் ஆகியோரின் பாசமிகு தாயாரும் ஜெயஜீவிதா (யாழ்.பல்கலைக்கழக கலைப்பீட இறுதி வருட மாணவி) அவர்களின் அன்பு மாமியாரும் லெயிற்றன் (சவூதி), ஜீவா, கௌரி (கனடா) ஆகியோரின் அன்புச் சகோதரியுமாவார்.

அன்னாரின் நல்லடக்கம் இன்று (30.09.2004) வியாழக்கிழமை பிற்பகல் 4 மணியளவில் அடப்பன் வீதியிலுள்ள இல்லத்திலிருந்து எடுத்துச்சென்று, புனித யாகப்பர் ஆலயத்தில் இரங்கல் திருப்பலி ஒப்புக்கொடுத்து, புனித கொஞ்சேஞ்சி மாதா சேமக்காலையில் நல்லடக்கம் செய்யப்படும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

*10,அடப்பன் வீதி, 2ஆம் ஒழுங்கை, யாழ்ப்பாணம். T.P.:0776510136*

(37034)(43-12-15)

தகவல்: மனவல் கிறிசாந்துஸ் (கணவர்).

## தில்லையம்பலம் உமாகாந்தன்

**(காந்தன்)**



'விஜயவாசா' கதிர்காம கோவிலடி, வதிரி, கரவெட்டியைப் பிறப்பிடமாகக்கொண்டவரும் யாழ் 3ஆம் குறுக்குத் தெருவில் வசித்தவரும் தற்போது பிரான்ஸ் நாட்டை வதிவிடமாகக் கொண்டவரும் பிரபல தமிழ் எழுத்தாளருமாகிய உமாகாந்தன் அவர்கள் 28.[illegible].2004 செவ்வாய்க்கிழமை பிரான்ஸில் காலமானார்.

அன்னார் இளைப்பாறிய புகையிரத நிலைய அதிபர் க.தில்லையம்பலம் - மகேஸ்வரி தம்பதிகளின் அருமைப் புத்திரனும் அமரர் சந்திரசேகரம் - அன்னம்மா (பிரான்ஸ்) தம்பதிகளின் அருமை மருமகனும் சூரியகுமாரியின் (சூட்டி) அன்புக் கணவரும் ஆதித்தியனின் பாசமிகு தந்தையாரும் விஜயகுமார் (சேவா லங்கா மன்றம் வவுனியா), பவானி (புகையிரதத் திணைக்களம்,மருதானை), சுரேந்திரன் (பிரான்ஸ்), உமா (இலங்கை வங்கி, மன்னார்) ஆகியோரின் அன்புச் சகோதரரும் அம்பிகா (நூலகம், வவுனியா வளாகம்), பத்மநாதன் (சுங்கத்திணைக்களம், கொழும்பு), விஜயகுமாரி (பிரான்ஸ்), வரதீஸ்வரன் (பிரதேச செயலர், மன்னார்) ஆகியோரின் மைத்துனரும் உசாந்தினி, [illegible]திரன் ஆகியோரின் அன்பு மாமனாரும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் பாரிஸ் நகரில் நடைபெறும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

*"விஜய வாசா" கதிர்காம கோவிலடி, வதிரி,கரவெட்டி. T.P.:0776040467*

(37038)(43-12-15)

தகவல்: க.தில்லையம்பலம் (தந்தை) (இளைப்பாறிய புகையிரத நிலைய அதிபர்).

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# ஒன்றரை மாதத்தின் பின்னர் அடையாளம் காணப்பட்ட உரும்பிராய் வாசியின் சடலம்

யாழ்.வைத்தியசாலையில் மரணமான ஒருவரின் சடலம், ஒன்றரை மாதத்தின் பின்னர் நேற்று அடையாளம் காணப்பட்டது.

கடந்த மாதம் 17ஆம் திகதி யாழ். வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்ட ஒருவர் அன்றையதினமே மரணமானார்.

இதன்பின்னர் இவருடைய சடலம் அடையாளம் காணும்பொருட்டு வைத்தியசாலையின் பிரேத அறையில் வைக்கப்பட்டது.

இதற்கிடையில் மேற்படி நபருடைய சடலம் கடந்த 27ஆம் திகதி வரை அடையாளம் காணப்படாததையடுத்து வைத்தியசாலை நிர்வாகம் சடலத்தை அரச செலவில் அடக்கம் செய்வதற்கு அனுமதிக்குமாறு கோரி யாழ். நீதிமன்றில் கடந்த செவ்வாயன்று மனுத்தாக்கல் செய்திருந்தது.

அந்த மனுவை ஆராய்ந்த நீதிவான் இ.த.விக்னராஜா இறந்தவர் தொடர்பான மரண விசாரணைகள் மேற்கொள்ளப்படாமையைக் கண்டுபிடித்தார்.

இதனையடுத்து, மரண விசாரணையை மேற்கொள்ளாமைக்கான காரணத்தை நீதிமன்றத்துக்குச் சமர்ப்பிக்குமாறு யாழ்.போதனா வைத்திய சாலையின் பணிப்பாளர் எஸ். சதுர்முகத்துக்கு நீதிவான் பணிப்புரை விடுத்தார்.

இது தொடர்பான செய்தியொன்று நேற்றைய 'உதயனில்' பிரசுரமாகியிருந்தது. அச்செய்தியினைப் பார்த்த இறந்தவரின் மைத்துனனான உரும்பிராய் தெற்கைச் சேர்ந்த தேவநாயகம் சில்வா நேற்று யாழ் ஆஸ்பத்திரிக்கு வந்து, குறித்த சடலம் ஜோர்ச் சாமுவேல ஜெயானந்தன் (வயது 54) என்பவருடையது என்றும் இவருக்கு இரண்டு பிள்ளைகள் உள்ளனர். அவர்களில் ஒருவர் வன்னியில் வசிப்பதாகவும் மற்றையவர் வெளிநாட்டில் வசிக்கின்றார் என்றும் இவரது மனைவி 10 வருட காலமாக இவரை விட்டுப் பிரிந்து வசிக்கின்றார் என்றும் கூறி சடலத்தை அடையாளம் காட்டினார். தற்போது இவர், பேக்கறி ஒன்றில் பணிபுரிவதாகவும் அவர் கூறினார்.

இதுதொடர்பாக வைத்தியசாலை பணிப்பாளர் எஸ்.சதுர்முகம் கடந்த மாதம் 7ஆம் திகதி வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்ட இவர் சில மணித்தியாலங்களில் இறந்து விட்டதாகவும், இவரது மரண விசாரணையை நடத்துமாறு தாம் பொலிஸாரைக் கோரியிருந்ததாகவும் அதுதொடர்பான விசாரணையினை அவர்கள் மேற்கொள்ளவில்லை என்றும் அவர் நீதிவான் விக்னராஜாவிடம் தெரிவித்திருந்தார்.

இதனையடுத்து, இவரது மரண விசாரணையினை நடத்தி நாளை அறிக்கை சமர்ப்பிக்குமாறு யாழ்.பொலிஸாரை யாழ்.நீதிமன்ற நீதிவான் இ.த.விக்னராஜா உத்தரவிட்டுள்ளார். (எ-13)

## மிகக் குறைந்த விலையில்...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

இருப்பதும் இந்தச் சந்தேகத்தை ஊர்ஜிதப்படுத்தியுள்ளது.

இக்காணி விற்பனை தொடர்பாக அரசக் காணி விலை மதிப்பீட்டாளர்களும் ஒருவருக்கொருவர் முரணான வகையிலே விலைகளைக் குறிப்பிட்டுள்ளனர்.

மதிப்பீட்டுத் திணைக்களத்தின் பிரதி மதிப்பீட்டாளர் ஆர்.டபிள்யூ.எம்.என்.பி. ராஜபக்ஷ ஒரு பேர்ச்சஸ் காணி 5 லட்சம் ரூபா முதல் 6 லட்சம் ரூபாவரை மதிப்புடையது எனக் குறிப்பிட்டுள்ளார்.

ஆனால், கொழும்பு பிராந்திய மதிப்பீட்டாளர் எச்.ஆர்.டி.சில்வா ஒரு பேர்ச்சஸ் காணியின் விலை பெறுமதி 91 ஆயிரம் ரூபா எனக் குறிப்பிட்டுள்ளார்.

இவருடைய விலை நிர்ணயத்தின் அடிப்படையிலேயே இக்காணி ஹைதராபாத் நிறுவனத்திற்கு கைமாற்றப்பட்டுள்ளது.

அமைச்சின் செயலாளரிடம் இவ்விடயம் தொடர்பாகக் கேட்டபோது, பெறுமதி மதிப்பீட்டாளர்களின் தவறான மதிப்பீட்டால் நாங்களும் சிக்கலில் மாட்டிக்கொண்டோம் எனச் சிரிக்கிறாராம்.

உண்மையான சந்தைப் பெறுமதி தெரிந்த பின்னும் இந்தத் தவறான ஒப்பந்தத்தைத் தடுத்து நிறுத்தவோ அல்லது ரத்துச்செய்யவோ ஏன் அமைச்சு நடவடிக்கை எடுக்கவில்லை என்று கேட்டதற்கு "இந்த விடயம் ஏற்கனவே, முன்னாள் அமைச்சரினால் தீர்மானிக்கப்பட்ட விடயம் அமைச்சரவையும் இதனை அங்கீகரித்துள்ளது. இக்குறிப்பிட்ட காணியை மேலதிகமான விலை கொடுத்துவாங்க எவரும் முன்வராததினாலேயே ஹைதராபாத் கம்பனிக்குக் கொடுப்பதைத் தவிர்க்க முடியாது போய்விட்டது என அமைச்சின் செயலாளர் திருமதி எஸ். எம். கருணாரட்ன பதிலளிக்கிறார். (க)

## அட்டாளை...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

விட்டுத் தப்பியிருக்கலாம் என்றனர் பொலிஸார். இவர்களது அடையாள அட்டைகள் மற்றும் சட்டைப்பைகள் என்பவற்றை கொலையாளிகள் பரிசோதித்துப் பார்த்துவிட்டே சென்றுள்ளனர் என்றும் பொலிஸார் கூறுகின்றனர்.

இந்தக் கொலைக்கான காரணம் என்னவென்று தெரியவில்லை என்று இறந்தவர்களின் பெற்றோர் தெரிவித்தனர். (எ-க)

## மட்டக்களப்பு...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

இதேவேளை, மட்டக்களப்பு, சித்தாண்டிப் பகுதியிலுள்ள உபதபால் நிலையத்தின் மீது நேற்றுமுன்தினமிரவு 9.30 மணியளவில் கிரேனேட் தாக்குதல் மேற்கொள்ளப்பட்டுள்ளது. இதனால்,தபால்நிலையத்தின் வெளிப்புறம் சேதமுற்றுள்ளது எனத் தெரிவிக்கப்பட்டது.(எ-க)

## தளபாடங்கள்...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

யப்பட்டிருந்த இந்த இயந்திரங்களை பிரதி சுங்க அத்தியட்சகர் ராஜேந்திரன் தலைமையிலான சுங்க அதிகாரிகளே சோதனையின் போது கண்டுபிடித்தனர். (எ-க)

## கைதியை...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

ஸ்ரீநிதி நந்தசேகரன் முன்னிலையில் ஆஜர் செய்தனர்.

அவரை ஒக்ரோபர் மாதம் 8 ஆம் திகதி வரை விளக்கமறியலில் வைக்குமாறும் -

உறவினரோ அன்றி வேறுஎவருமோ குறிப்பிட்ட நபரைப் பார்வையிடுவதற்கு அனுமதிக்க வேண்டாம் என்றும் - நீதிவான் அப்போது உத்தரவிட்டிருந்தார். அதன்படி அவர் யாழ். சிறைச்சாலையில் விளக்கமறியலில் வைக்கப்பட்டார்.

விளக்கமறியலில் வைக்கப்பட்டிருந்த குறிப்பிட்ட கைதியை மனித உரிமைகள் ஆணைக்குழுவின் யாழ்.இணைப்பதிகாரி ருவான் சந்திரசேகர நேற்றுமுன் தினம் சிறையில் சென்று பார்வையிட்டார். அதன் பின், நேற்று அவர் யாழ். நீதிமன்றத்தில் மனு ஒன்றைத் தாக்கல்செய்தார்.

குறிப்பிட்ட கைதியை மருத்துவ பரிசோதனைக்குட்படுத்தவேண்டும் என்றும் - உறவினர்கள் அவரைச் சென்று பார்க்க அனுமதிக்க வேண்டும் என்றும் - சந்திரசேகர அந்த மனுவில் கோரியிருந்தார். அதனையடுத்தே, கைதியை மருத்துவ பரிசோதனைக்குட்படுத்துமாறு யாழ் நீதிவான் நேற்று உத்தரவிட்டார். அத்துடன், உறவினர்கள் அவரைப் பார்வையிட அனுமதிக்குமாறும நீதிவான் உத்தரவிட்டார். (ஐ-3)

# நாளைய ஜெனீவா...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

இலங்கைத் தீவுக்குள்ளும் எமக்கு எதிராகப் பல்வேறு பொய்ப்பிரசாரங்கள் திட்டமிட்டு நடத்தப்படுகின்றன.

ஈ.பி.டி.பியினர் உட்பட சிலரின் கொலைகளுக்குப் புலிகள்மீது அபாண்டமாகக் குற்றம் சுமத்தி, அதன்மூலம் புலிகளுக்கு எதிராகவும் தங்களுக்குச் சாதகமாகவும் அரசியல் பிரசாரம் நடத்துவதற்கு சில சக்திகள் முனைந்துள்ளன.

ஈ.பி.டி.பியின் சின்னபாலா கொலை தொடர்பாகவே பல்வேறு குழப்பகரமான தகவல்கள் வெளியாகியிருக்கின்றன.

ஈ.பி.டி.பி. குழுவிற்குள்ளே பல்வேறு பிரச்சினைகள் என அறிகிறோம். அவர்களுடைய குழுவைவிட்டு பலர் ஓட்டம்பிடித்துள்ளனர். இதனால், வெறுப்புற்ற அக்குழுவின் தலைவர்கள் சிலர் இப்படி தப்பியோடியவர்களையும் ஓட முயல்பவர்களையும் பிடித்து அடைத்து வைத்திருக்கிறார்கள் என அறிகின்றோம்.

அக்குழுவிற்குள்ளேயே முரண்பாடு முற்றியிருக்கின்றது. அவற்றின் விளைவாகவும் இக் கொலைகள் நடக்கலாம்.

ஆனால், எது எப்படியோ குற்றச்சாட்டைப் புலிகள் மீது சுமத்தி எங்களுக்கு இழுக்குத் தேடவும், தங்களுக்கு அரசியல் லாபம் தேடவும் இச்சக்திகள் முனைகின்றன.

இப்போக்கைச் சர்வதேச சமூகம் உணர்ந்து கொள்ள வேண்டும். எமது இந்த வெளிநாட்டுப் பயணத்தின்போது இவற்றைச் சர்வதேச சமூகத்திற்கு நன்கு எடுத்துரைப்போம்.

அரச கட்டுப்பாட்டுப் பகுதியில் நடக்கும் வன்முறைச் சம்பவங்களைத் தடுக்கவேண்டிய பொறுப்பும் காரணமானவர்களைக் கண்டுபிடிக்க வேண்டிய கடப்பாடும் அரச தரப்பைச் சேர்ந்தது.

அந்த முயற்சிக்கு எம்மாலான முழு ஒத்துழைப்பை வழங்க நாம் தயாராக இருக்கின்றோம்.

ஈ.பி.டி.பி. குழுவுக்குள் முற்றிவரும் முரண்பாடுகள் குறித்த தகவல்களை நாமும் திரட்டி விசாரித்து வருகின்றோம். உரிய சமயத்தில் - உரிய கட்டத்தில் - பல உண்மைகளை அம்பலப்படுத்துவோம்.

இவ்வாறு சமாதான முயற்சிகளையும் முன்னெடுக்காமல் - எங்களுக்கு எதிராக உள்நாட்டிலும் வெளிநாட்டிலும் பொய்ப்பிரசாரங்களையும் நடத்திக்கொண்டு -

காலத்தை இழுத்தடித்துச் செல்வதை நாங்கள் தொடர்ந்து அனுமதிக்கலாமா என்ற கேள்வி எழுகின்றது. அப்படி அனுமதிப்பதில் என்ன பயன் என்ற விசனமும் ஏற்படுகின்றது. உண்மையான - நேர்மையான - சமாதான முயற்சிகள் தொடருமாயின் அதற்காக எவ்வளவு காலமும் நாம் காத்திருக்கலாம். ஆனால், நிலைமை அப்படியல்ல. இவை குறித்தெல்லாம் ஜெனீவாச் சந்திப்பில் எங்களது உயர்மட்ட அரசியல் குழு விரிவாக ஆராயும்.

எமது தலைமைப்பீடத்தின் வழிகாட்டல்படி- அறிவுறுத்தல்படி - வெள்ளியன்றும் சனியன்றும இந்த உயர்மட்டக் கூட்டம் நடைபெறுகின்றது.

எமது சட்ட ஆலோசகர்களுடனும் நாம் விரிவாக ஆராயவிருக்கின்றோம். அதன்பின் தீர்க்கமான முடிவுகள் எட்டப்படும். இக்கூட்டத்தின் சிபாரிசுகளும் பரிந்துரைகளும் எமது தலைமைக்குத் தெரிவிக்கப்படும். இறுதியான முடிவை தலைமை எடுத்து நடைமுறைப்படுத்தும் - என்றார் தமிழ்ச்செல்வன். (எ-க)

## கோட்டை...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

லாளர்களுக்கு உடனடியாக சம்பளத்தை அதிகரிக்க வேண்டும் என்ற மூன்று கோரிக்கைகளையும் முன்வைத்தே அக்கட்சி அரச எதிர்ப்புப் போராட்டத்தில் ஈடுபடவுள்ளது.

புதிய இடதுசாரி முன்னணியின் தலைவர் விக்கிரமபாகு கருணாரத்ன தலைமையில் இந்த எதிர்ப்பு ஆர்ப்பாட்டம் இன்று நடைபெறும் என அக்கட்சி தெரிவித்துள்ளது. (எ-க)


**BITSMANS**
கல்வி நிறுவனம்,. மானிப்பாய்
A/L 2005 பௌதிகம்
PAPER CLASS
திரு. ஜெயசீலன் (B.Sc.(Hons)
ஆரம்பம்: 1. 10. 2004 வெள்ளி 4. 30 p.m.
(37014)

**A/L 2006 கணக்கீடு**
By: S.சயந்தன்
தொங்கல் கணக்கு
ஆரம்பம் : 01.10.2004 (வெள்ளி)
Wed., Fri - 4.00 - 5.30 p.m.
நாவலர்
ஆனைப்பந்தி, யாழ்நகர்.
(37043)

**CHEMISTRY CENTRE**
Temple Road (Green Park முன்னே)
A/L 2006
INORGANIC CHEMISTRY
Mon., Fri. - 5.45 - 6.45 p.m.
By:அன்பழகன் (B.Sc.)
(சி-37922)

**NEW SCIENCE CENTRE**
யாழ்நகர்
'BIOLOGY DAYCLASS'
(Sat., Sun. - 1.00 - 2.30)
ஆரம்பம்: 02. 10. 2004 சனி - 1. 00
By: அல்போன்ஸ்
'INORGANIC CHEMISTRY'
Sat., Sun. - 11 - 12
By: அன்பழகன்
(36994)

**BEACON** யாழ்நகர்
A/L கலைப்பிரிவு
கிறிஸ்தவம்: S.மல்லிகா
அரசறிவியல்: இ.விமலா (Pol.Sc.)
2005, 2006, DAY CLASS
நடைபெறுகின்றன. (36995)

**ஊழியர்கள் தேவை**
★ வெல்டிங் வேலை
★ வானிஸ் வேலை (தளபாடங்கள்)
★ ஓட்டோ செலுத்துபவர் (சாரதி அனுமதி பத்திரம் உடன்)
★ வேலை பழகுபவர்களும் எம்மிடம் தொடர்புகொள்ளவும்.
ஏசியன் தளபாடம்
133, மின்சார நிலையம், யாழ்ப்பாணம்.
(பஸ் நிலையம் அருகில்.)
[illegible]

**இந்திய பரம்பரை ஜோதிடர்**

அருள்வாக்கு
ஆம்பிகா அம்மா
மீண்டும் யாழ். புண்ணிய பூமிக்கு வருகை.
கைரேகை, ஜாதகம் பார்க்கப்படும்.
உங்களுக்கு எந்தவகையான பிரச்சினைகள் ஆனாலும் ஜாதக ரீதியாக கிரகதோசம் நீக்கி, நீங்கள் வாழ்க்கையில் வெற்றி பெற இன்றே அருள்வாக்கு அம்பிகா அம்மாவை நேரில் சந்திக்கவும். சந்திக்கும் இடம்:
அருள்வாக்கு அம்பிகா அம்மா
121, கஸ்தூரியார் வீதி, யாழ்ப்பாணம்.
(ஸ்ரீ முருகன் ஜுவல்லர்ஸ் / லிங்கன கூல்பார் அருகில்).
(36982)(11-15.30)


# மரண அறிவித்தல்கள்

## சின்னப்பு துரைச்சாமி



கோவிற்குடியிருப்பு, கச்சாய் வீதி, சாவகச்சேரியைப் பிறப்பிடமாகவும் வசிப்பிடமாகவும் கொண்ட சின்னப்பு துரைச்சாமி (ஓய்வுபெற்ற M.S.O. தபாற்கந்தோர், சாவகச்சேரி) அவர்கள நேற்று (29.09.2004) புதன்கிழமை காலமானார்.

அன்னார் காந்திமதியின் அன்புக் கணவரும் லம்போதரன் (சிலிங்கோ இன்சூரன்ஸ் கம்பனி), தபோதினி (கனடா) ஆகியோரின் பாசமுள்ள தந்தையாரும் நாகராசா (ஓய்வுபெற்ற சாரதி, C.T.B.), குணராசா (குணம்) ஆகியோரின் சிறிய தந்தையும் காலஞ்சென்றவர்களான குமாரகுலசிங்கம் அல்பிரட், லீலாவதி மற்றும் நாச்சியார் (இந்தியா) ஆகியோரின் அன்புச் சகோதரரும் ஜெயந்தி (சமுர்த்தி அலுவலர், பிரதேச செயலகம், தெல்லிப்பழை), சிவதாஸ் (கனடா) ஆகியோரின் அன்பு மாமனாரும் வர்ஜன், பானுஜா திவ்யன் (கனடா) ஆகியோரின் அன்புப் பேரனுமாவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் இன்று (30.09.2004) வியாழக்கிழமை அன்னாரின் இல்லத்தில் நடைபெற்று, பூதவுடல் பிற்பகல் 3 மணிக்கு சாவகச்சேரி கண்ணாடிப்பிட்டி இந்து மயானத்திற்கு தகனக கிரியைகளுக்காக எடுத்துச்செல்லப்படும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

*கச்சாய் வீதி,*
*முருகமூர்த்தி கோவிலடி,*
*சாவகச்சேரி.* (37049)(35-11-15)

தகவல்:
**து.லம்போதரன் (மகன்).**

## கணபதிப்பிள்ளை சிவப்பிரகாசம்

புன்னாலைக்கட்டுவனைப் பிறப்பிடமாகவும் பன்னாலையை வசிப்பிடமாகவும் கொண்ட கணபதிப்பிள்ளை சிவப்பிரகாசம் அவர்கள் நேற்று (29.09.2004) புதன்கிழமை காலமாகிவிட்டார்.

அன்னார் திரு.திருமதி கணபதிப்பிள்ளையின் அன்பு மகனும் திரு.திருமதி பொன்னம்பலத்தின் மருமகனும் காமாச்சிப்பிள்ளை (தேவி)யின் பாசமிகு தந்தையும் வேலாயுதம் (உரிமையாளர், அனுஷா ஸ்ரோர்ஸ், கொழும்பு-2) மாமனாரும் சஜீவன், டேவிதா ஆகியோரின் பேரனும் நாகநாதர், அமரர் செல்லத்துரை, சின்னத்தம்பி, அமரர் செல்லம்மா ஆகியோரின் சகோதரருமாவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் அவரது இல்லத்தில் இன்று (30.09.2004) வியாழக்கிழமை பிற்பகல் 2 மணியளவில் நடைபெற்று, பூதவுடல் கேணிப்பிட்டி மயானத்தில் தகனம் செய்யப்படும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

*பன்னாலை,*
*தெல்லிப்பழை.* (37050)(35-11-15-30)

தகவல்:
**மருமகன் வேலாயுதம்.**

## திருமதி கனகரட்ணம் நாகரட்ணம்

நவாலியைப் பிறப்பிடமாகவும் மானிப்பாயை வசிப்பிடமாகவும் கொண்ட திருமதி கனகரட்ணம் நாகரட்ணம் நேற்று (29.09.2004) புதன்கிழமை காலமானார்.

அன்னார் காலஞ்சென்ற கனகரட்ணத்தின் அன்பு மனைவியும் நகுலேஸ்வரன், பாலச்சந்திரன், திருஞானசம்பந்தர் (நோர்வே), சிவலிங்கம் (பிரான்ஸ்), வல்லவாம்பிகை (ஹற்றன்) ஆகியோரின் பாசமிகு தாயாரும் குலஞானவதி, இராசலக்ஸ்மி, ரதி, சாந்தினி, செல்வகுமார் ஆகியோரின் மாமியாரும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் இன்று பிற்பகல் 4 மணிக்கு மானிப்பாயிலுள்ள அவரது இல்லத்தில் நடைபெற்றுப் பூதவுடல் தகனக்கிரியைக்காக மானிப்பாய் பிப்பிலி இந்து மயானத்திற்கு எடுத்துச்செல்லப்படும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

*சந்தையடி ஒழுங்கை,*
*மானிப்பாய்.* (37052)(30-11-15)

தகவல்:
**- பிள்ளைகள்.**

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இப்பத்திரிகை நியூ உதயன் பப்ளிகேசன் (பிறைவேட்) நிறுவனத்தினரால் யாழ்ப்பாணம் கஸ்தூரியார் வீதி, 361ஆம் இலக்கத்திலுள்ள அவர்களது பணிமனையில் 30.09.2004இல் அச்சிட்டு வெளியிடப்பெற்றது.